


கல்கி
KALKI 17.7.88
“மேலிடம்தான்
முடிவு செய்ய வேண்டும்...”
—மூப்பனார் சிறப்புப் பேட்டி


வளரும் குழந்தைகளுக்கு சுவையான
துணையாக விளங்கும் பால் பிஸ்கட்
Milk Bikis
BRITANNIA
Milk Bikis
சத்துமிகுந்த, சுவையான பிஸ்கட்.
பிரிட்டானியா
LINTAS BRN MB 12 2416 TM



* வீடுகளின் முன் பக்கத்திலும் மணல்தான்...!

ஒரு கிராமமே புதைந்து கொண்டிருக்கிறது...

நெல்லை மாவட்டத்திலுள்ள பெரிய மீனவக் கிராமங்களுள் ஒன்றான உவரியிலிருந்து, சுமார் ஐந்து கி.மீ. தொலைவிலுள்ளது, கூடுதாழை என்னும் மீனவக் கிராமம். சாதாரணமாக, ஒரு கடலோரக் கிராமத்திலோ, ஊரிலோ நுழைந்தால் முதலில் நம்மை வரவேற்பது, பரந்து விரிந்து கிடக்கும் கடலும், ஓயாமல் ஆர்ப்பரிக்கும் அலைகளுமாகத்தான் இருக்கும்!

ஆனால், தற்போது நாங்கள் சென்ற கூடுதாழைக் கடலோரக் கிராமத்தில், முதலில் பெரிய மலையளவு குவிந்து கிடக்கும் மணலையும், 'ஹோ... என்ற பேரிரைச்சலோடு வீசும் புயற்காற்றையும் அதில் கலந்து வரும் மணற்புழுதியையுமே கண்டோம்.



....பின் பக்கத்திலும் மணல்தான்....

அம்மணற்குவியலில் ஒரு மாடி வீடு முக்கால் வாசி மூழ்கிவிட்டது. வாசல் வழியாகவும், ஜன்னல் வழியாகவும் கொஞ்சம் கொஞ்சமாக மணல் வீட்டின் ஹாலை நிறைத்துக் கொண்டிருக்கிறது. அவ்வீட்டின் பின்புற மதில் சுவரையும் உடைத்துக் கொண்டு, முழுமையாக அவ்வீட்டை மணல் மூடிக் கொண்டே வருவதை நேரில் கண்டு அதிர்ச்சியுற்றோம். அந்த வீட்டுக்குச் சொந்தக்காரரான விதவை



* லீமா ரோஸ்: ''அரசாங்கம் உதவினால்தான் உண்டு....''

* ஊரே புதையும் நாள் தொலைவில் இல்லை....''



லீமாரோஸ் தமது ஆறு குழந்தைகளையும் கூட்டிக் கொண்டு தம்பி வீட்டில் அடைக்கலம் புகுந்திருக்கிறார். ''அரசாங்கம் பார்த்து ஏதாவது உதவினால்தான் உண்டு'' என்றார் அவர்.

அதேபோல் பல வீடுகளில், அழையா விருந்தாளியாக, மணல் உள்ளே நுழைந்து வீடுகளையே மூழ்கடித்துக் கொண்டிருக்கிறது. டெலிபோன் மற்றும் மின்சாரக் கம்பங்கள், நெட்டை நெட்டையான பனை மரங்களெல்லாம் மணலில் புதைந்து போய்ச் சிறுவர்கள் கூட அவற்றின் உச்சியைக் கையினால் தொடக்கூடிய அளவிற்கு மிகவும் குட்டையாகி விட்டன.

''இவ்வளவு பயங்கரமான மணல் மேடுகள், உங்கள் கிராமத்தைச் சூழக் காரணம் என்ன?'' என்று அக்கிராம மக்களிடம் கேட்டோம்.

* டி. ஏ. மரியான்: ''சாலை மறியலுக்கு யோசிக்கிறோம்...''



''இப்போ நீங்கள் இங்கே பார்க்கிற மணல் மேடுகளெல்லாம் சுமாராக இருபத்தைந்து முப்பது வருடங்களுக்கு முன்னால்... ரொம்ப தூரத்தில் இருந்தன. மார்ச் முதல் ஆகஸ்ட் வரை ஆறு மாசம் மேற்கிலிருந்து கிழக்கா — பலமா காற்று வீசும். அப்பவெல்லாம் மணல் இங்கே வரும்னு நாங்கள் நினைக்கவில்லை. அப்பவே அது கொஞ்சம் கொஞ்சமாக எங்களை நெருங்கி வந்ததை, நாங்க உணரலை.... அப்புறம், அஞ்சு வருஷத்துக்குமுன்னாடிதான் அபாயத்தை உணர்ந்து, அபயம் தேடி அரசாங்க உதவியை நாடினோம். எவ்வளவோ மனுக்கள் எழுதிப் போட்டோம்.... எம். எல். ஏ., எம். பி.'க்களைப் போய்ப் பார்த்தோம்... பிரயோஜனமேயில்லை...

''தமிழக திட்ட மதிப்பீட்டுக் குழு'ன்னு ஒரு நாற்பது ஐம்பது எம். எல். ஏக்கள் ஜாலியா அரசாங்க பஸ்ஸில் தமிழ்நாடு முழுக்கச் சுற்றி வந்தப்போ இங்கேயும் வந்தாங்க... பார்த்தாங்க... போனாங்க....! அவ்வளவுதான். இந்த மாவட்டக் கலெக்டரும் வந்து பார்த்தாரு. தமிழக மீன்வளத்துறை இயக்குனரும் வந்து பார்த்துட்டுப் போனாரு. இப்போ, கவர்னரிடம் மனுக் கொடுத்தோம். 'உங்கள் மனு, கவர்னரின் தனிப் பிரிவுக்கு அனுப்பப்பட்டுள்ளது!'ன்னு தமிழ்நாடு அரசு டெபுடி செக்ரட்டரி, சார்பில் பதிலனுப்பியிருக்கிறாங்க. சதா மணலைக் குவித்து, எங்க கிராமத்தையே மூழ்கடித்துக் கொண்டிருக்கும் காற்று கிட்ட இந்தப் பதிலைக் கொண்டு போய்க் காமிச்சா... அது போயிடுமாங்க...?

''கொஞ்சம் கொஞ்சமா நாங்க புதைஞ்சுக்கிட்டே வர்றோம். நாங்களும் எங்க புள்ளைங்களும், எங்க உடைமைகளும் இந்த மணல்ல புதைஞ்சு போன பிறகு, எங்கப் பிணத்தைத் தோண்டி எடுக்கத்தான் இந்த



அரசாங்கம் வரும் போலிருக்கிறது...!'' என்று அக்கிராம மக்கள் உணர்ச்சிவசப் பட்டுப் பேசியவற்றிலிருந்து அவர்கள் எவ்வளவு ஏமாற்றத்துக்கும் வேதனைக்கும், விரக்திக்கும் ஆளாகியிருக்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்ள முடிந்தது.

அக்கிராமத்தைச் சார்ந்த வின்சென்ட் என்பவரின் பழைய வீடு முற்றிலுமாக மணலில் புதைந்து போனதாலும் புது வீடு கட்டுவதற்கு வேறு இடமும் இல்லாததாலும் அவ்வீட்டின் மேலேயே மாடி கட்டி வசித்து வருகிறார்.

ஆனால் அந்தப் புதிய வீட்டையும் மணல் விட்டு வைக்கவில்லை. ''அந்த வேலியைப் பாருங்க...'' என்று அவர் சுட்டிக்காட்டிய இடத்தில், ஓலை வேலியைப் பொத்துக் கொண்டு மணல் வந்து குவிந்து கொண்டிருந்தது.

''வீட்டுக்குள்ளே வந்து பாருங்க...'' என்று வின்செண்ட் அழைத்தார். அவருடைய வீட்டின் ஹால், படுக்கையறை, சமையல்கட்டு எல்லா இடங்களிலும் ஒரே மணல்.

வின்செண்டின் மனைவி, ''தினசரி எத்தனை தடவைங்க வீட்டைக் கூட்டுறது...? எப்பவும் வீடு முழுக்க மணல்தான் பரவிக் கிடக்குது. அவரு கடலுக்குப் போய்க் கஷ்டப்பட்டுச் சம்பாதிச்ச பணத்தில, சமைச்சுச் சாப்பிட உட்கார்ந்தா... அதிலேயும் மணல் வந்து விழுதுங்க...! தெனம் தெனம் மணலோடு போராட வேண்டியதே எங்க வாழ்க்கையாப் போச்சுங்க...!'' என்று ஆதங்கத்தோடு சொன்னார்.

அதே ஊரைச் சேர்ந்த டி. ஏ. மரியான் என்பவர், ''கூடுதாழை மக்கள் படும் கஷ்டத்தைப் போக்க அரசு ஒரு நல்ல முடிவு காண முயற்சி செய்யாவிட்டால், திருநெல்வேலி, கன்னியாகுமரி — ஆகிய மாவட்டங்களில் வாழும் கடலோர மீனவர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து சாலை மறியலில் ஈடுபடத் தீர்மானித்துள்ளோம். அப்போதாவது எங்களுக்கு ஒரு வழி கிடைக்கிறதா என்று பார்ப்போம்!'' என்றார்.

மொத்தத்தில் ஏராளமான காற்றழுத்தம் காரணமாக மணல் மேடுகள் நகர்ந்து வந்து ஊரே மூழ்கிவிடும் அபாயத்திலிருக்கும் கூடுதாழை மக்களுக்கு இந்த அரசின் உதவி மிகமிக அவசரமாகத் தேவைப்படுகிறது! 'சுமார் நானூறு வோட்டுக்கள்தானே இருக்கின்றன; இந்நிலையில் இவர்களுக்கு உதவிப் பிரயோஜனமில்லை!' என்று அரசியல்வாதிகளும், 'இச்சிறிய கிராமத்திற்கு எதற்கு அதிகச் செலவு செய்ய வேண்டும்?' என்று அரசாங்கமும் எண்ணாமல், உடனடியாகக் கூடுதாழை மக்களை மணலிலிருந்து காப்பாற்றியாக வேண்டும்.

கட்டுரை, புகைப்படங்கள்:

குளச்சல் இப்ராஹீம்.

—கவர் ஸ்டோரி

"மேலிடம்தான் முடிவு செய்ய வேண்டும்..."

–மூப்பனார் சிறப்புப் பேட்டி

கேள்வி: முன்பு நீங்கள் தமிழ்நாடு காங்கிரஸின் தலைவராக இருந்ததற்கும் இப்போது மறுபடியும் தலைவராக இருப்பதற்கும் கட்சியில் என்ன வித்தியாசத்தை உணருகிறீர்கள்?

ஜி. கருப்பையா மூப்பனார்: ஏராளமான வித்தியாசங்களைப் பார்க்கிறேன். முன்பு நான் இங்கே தலைவராக இருந்த போது எம்.ஜி.ஆர். உயிருடன் இருந்தார். இப்போது இல்லை. அதுவே பெரிய வித்தியாசங்களை உருவாக்கியிருப்பதாக உணர்கிறேன். முன்பு காங்கிரஸ் கட்சிக்குள் மட்டுமே இருந்த உற்சாகம், இப்போது மக்களிடையே பரவியிருக்கிறது. எம்.ஜி.ஆருக்குப் பிறகு மக்கள் காங்கிரஸை ஒரு மாற்றாகக் கருதுகிறார்கள் என்பதை நான் வெளிப்படையாகவே பார்க்கிறேன்.

கேள்வி: அதாவது காங்கிரஸ் கட்சி தமிழகத்தில் வளர்ந்திருக்கிறது என்கிறீர்கள், இல்லையா?

மூப்பனார்: ஆமாம்.

கேள்வி: முன்பு காங்கிரஸிலிருந்து நெடுமாறன் வெளியேறினார். இப்போது சிவாஜி, எம். பி. சுப்ரமணியம் போன்றவர்கள் வெளியேறியிருக்கிறார்கள். இதைக் கொண்டு பார்த்தால் காங்கிரஸ் வளர்ந்துள்ளதாகக் கொள்ள முடியவில்லையே?

மூப்பனார்: காங்கிரஸ் கட்சி என்பது அனைத்திந்திய அளவிலானதொரு வெகுஜன அமைப்பு. அதில் வெகு சிலருக்குக் கருத்து மாறுபாடு வருவதும் அவர்கள் விலகுவதும் சகஜமே. அப்படி ஒன்றிரண்டு பேர் விலகியதால் கட்சி எந்த விதத்திலும் பாதிக்கப்படவில்லை; பாதிக்கப்படாது. உதாரணத்திற்கு வி. பி. சிங்கையே எடுத்துக் கொள்ளுங்கள். அவர் காங்கிரஸுக்கு எதிராகி விட்டதால் என்னவாயிற்று? ஒரு பரபரப்பு இருக்கலாமே தவிர, அதனால் கட்சிக்கு எந்த விதமான பலவீனமும் ஏற்படவில்லை என்பதே நிதர்சனம்.

கேள்வி: அலகாபாத் இடைத் தேர்தலில் ஏற்பட்ட தோல்விக்குப் பிறகுமா இப்படிச் சொல்லுகிறீர்கள்?

மூப்பனார்: ஆமாம். முன்பு தமிழகத்தில் கூட தர்மபுரியில் நடந்த இடைத் தேர்தலில் காங்கிரஸ் வென்று பொதுத் தேர்தலில் தோற்றுப் போன நிகழ்ச்சி உண்டு. எனவே, இடைத் தேர்தலுக்கும் பொதுத் தேர்தலுக்கும் சம்பந்தமில்லை.

கேள்வி: இப்போது தமிழகத்திலுள்ள ஒவ்வொரு பார்லிமெண்ட் தொகுதிக்கும் ஒரு கமிட்டி என்று புதிய நியமனங்களைச் செய்திருக்கிறீர்களே, இதற்கு ஏதேனும் விசேஷக் காரணங்கள் உண்டா? அல்லது காங்கிரஸ் கட்சியில் ஒரு மாறுதல் என்றதொரு பாவனைக்காக மட்டும்தானா?

மூப்பனார்: மாவட்டக் கமிட்டிகளெல்லாம் அப்படியே இருக்கின்றன. அதற்கு ஒத்தாசையாகத்தான் இந்தப் பார்லிமெண்டரி கமிட்டிகளை நியமித்திருக்கிறோம். இந்த நியமனங்களுக்குக் காரணம், பொது மக்களிடையே கட்சிக்கு அதிகமான தொடர்பு இருக்க வேண்டும் என்பதுதான். இந்த நம்பிக்கை வீண் போகாது என்றே நம்புகிறேன்.

கேள்வி: இவற்றோடு, பூத் கமிட்டி என்று ஒவ்வொரு எலெக்ஷன் பூத்துக்கும் பத்து ஊழியர்கள் நியமிக்கப்படுவார்கள். அவர்கள் கட்சிக்காகப் பாடுபடுவார்கள் என்று சொல்லியிருக்கிறீர்களே, இப்படிப்பட்ட நியமன ஊழியர்கள் எப்படியொரு கட்சித் தொண்டனின் ஈடுபாட்டோடு செயல்படுவார்கள் என்று கருதுகிறீர்கள்?

> ❝
> ......நான் தவறு செய்தால் உடனடியாகப் பதவி இழக்க நேரிடும் என்கிற பயம் இருப்பதுதான் நல்லது......
> ❞



மூப்பனார்: இந்த பூத் கமிட்டி ஊழியர்கள் என்பவர்கள் யாரும் கட்சிக்கு வெளியிலிருந்து நியமிக்கப்பட மாட்டார்கள். கட்சியிலுள்ள இளைஞர்களைத்தான் நியமிக்கிறோம். அதனால் அவர்களுக்குப் புதிதாக ஏதும் ஈடுபாடு வர வேண்டும் என்பதில்லை. மேலும் இப்படி ஒவ்வொரு பூத்துக்கும் பத்துப் பேர் என்று நியமிக்கப்படுவதால் அவர்களுக்கு அந்தந்த இடங்களிலுள்ள பொது மக்களை நன்றாக அடையாளம் தெரியும் என்பதால் கள்ள வோட்டுகளைத் தடுக்கவும் தவிர்க்கவும் முடியும். இந்த பூத் கமிட்டியின் முக்கிய நோக்கமே கள்ள வோட்டுக்களைத் தடுப்பதுதான்.

கேள்வி: காங்கிரஸைப் பொருத்தவரை, சாதாரணக் கமிட்டி ஊழியர்களிலிருந்து மாநிலத் தலைவர் — முதல்வர் வரை அனைவருமே நியமன முறையில்தான் நியமிக்கப்படுகிறார்களே தவிர, ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்படவில்லை. சுருக்கமாகச் சொன்னால் காங்கிரஸில் உள் கட்சி ஜனநாயகம் இல்லை!

மூப்பனார்: கட்சிப் பதவிகளுக்குத் தேர்தல் நடத்த வேண்டும் என்பதில் இரண்டு கருத்துக்களுக்கே இடமில்லை. எனினும், தேர்தல் நடத்தப்படாததாலேயே கட்சிக்குள் உள்கட்சி ஜனநாயகம் இல்லை என்று அர்த்தமாகி விடாது. ஊழியர்களும் தலைவர்களும் நியமனம் செய்யப்பட்டால் கூட அந்த நியமனம் கட்சி மேலிடத்தின்

இனிப்பு என்று சொல்லி விட முடியாது. ஒவ்வொரு நியமனமும் கட்சிக்காரர்களைக் கலந்தாலோசித்த பிறகே செய்யப்படுகிறது. உதாரணத்திற்கு என்னையே எடுத்துக் கொள்ளுங்கள். நான் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியின் பொதுச் செயலாளராகவும் தற்போது தமிழக காங்கிரஸின் தலைவராகவும் நியமிக்கப்பட்டேன் என்றால் இந்த நியமனங்களெல்லாம் ஏதோ திடீரென்று நிகழ்ந்ததல்ல என்பது அனைவருக்குமே தெரியும். நான் அகில இந்தியக் காங்கிரஸின் பொதுச் செயலாளராக இருந்த போது, அவ்வப்போது மற்ற மாநிலங்களில் முதல்வர் நியமனம் உள்பட மற்ற பதவிகளில் ஆட்களை நியமிக்கும் போது, பலரையும் கலந்து ஆலோசித்து அவர்களின் கருத்தைக் கேட்டறிந்த பிறகு, பெரும்பான்மையானவர்களின் விருப்பப்படிதான் நியமித்திருக்கிறோமே தவிர, எங்களிஷ்டத்திற்கு யாரையும் கொண்டு போய்த் திணித்ததில்லை. சுருக்கமாகச் சொன்னால் கட்சிக்குள் போட்டிகளைத் தவிர்க்கவே இந்த நியமனங்களேயன்றி ஜனநாயக மரபுகளை மீறுவதற்காக அல்ல.

கேள்வி: ஒரு வாதத்திற்காக வரப் போகும் தமிழகப் பொதுத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி தனிப் பெரும்பான்மையுடன் வெற்றி பெற்று, நீங்கள் முதல்வராகி விடுகிறீர்கள் என்று வைத்துக் கொள்ளுவோம். நீங்கள் முதல்வராகி விட்டாலும் கூட, அழைப்பின் காரணமாகவோ அல்லது வேறு வேலைகள் காரணமாகவோ முதல்வராக டெல்லி செல்லும் நீங்கள் திரும்பி வரும் போதும் முதல்வராகவே திரும்பி வருவீர்கள் என்னும் நிச்சயம் இல்லையே! இந்நிலையில் காங்கிரஸிடம் மக்களுக்கு எப்படியொரு ஈடுபாடு வரும்?



மூப்பனார்: நான் முதல்வராகி விட்ட மமதையில் — இனி ஐந்தாண்டுகளுக்கு என்னை யாரும் அசைக்க முடியாது என்கிற தைரியத்தில் நான் என்ன வேண்டுமானாலும் செய்யலாமல்லவா? அப்போது உடனடியாக என்னைத் தட்டிக் கேட்க ஆள் வேண்டாமா? அதற்காகத்தான் கட்சி மேலிடம். நான் தவறு செய்தால் உடனடியாகப் பதவியிழக்க நேரிடும் என்கிற பயம் இருப்பதுதான் நல்லது. அப்போதுதான் சரியான ஆட்சி நடக்கும் என்பதே எனது அபிப்பிராயம்.

கேள்வி: திருமதி ஜானகி ராமச்சந்திரன் அமைச்சரவைக்குக் காங்கிரஸ் ஆதரவு தராதது மக்களுக்கு அவர் மேல் ஓர் அனுதாபத்தையும் காங்கிரஸ் மேல் ஓர் அதிருப்தியையும் ஏற்படுத்தியிருக்கிறது என்று சொல்லலாமல்லவா?

மூப்பனார்: நிச்சயமாக இல்லை. பிளவு படாத அ.தி.மு.க.—வுக்குத்தான் எங்கள் ஆதரவு என்பதைத் தெளிவாகச் சொன்னோமே!

கேள்வி: பிளவுபடாத அ.தி.மு.க.வுக்கு உங்கள் ஆதரவு எதற்கு? அப்படியானால் உங்கள் ஆதரவினால்தான் எம்.ஜி.ஆர். முதல்வராக நீடிக்க முடிந்தது என்றல்லவா அர்த்தமாகிறது!

மூப்பனார்: அப்படியல்ல. அ.தி.மு.க. பிளவுபடுவதைக் காங்கிரஸ் ஒருபோதும் விரும்பியதில்லை. அதனால்தான் — அது மீண்டும் ஒரே கட்சியாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் ஒரு முழுமையான சந்தர்ப்பம் கொடுத்து அப்படிச் சொன்னோம்.

கேள்வி: திருமதி ஜானகி ராமச்சந்திரன் டெல்லிக்கு வந்து பிரதமரைச் சந்தித்துத் தமது அமைச்சரவைக்கு ஆதரவு கேட்ட போது அவரிடம் சொல்லப்பட்டது என்ன?

மூப்பனார்: அவரது அமைச்சரவையைக் காங்கிரஸ் ஆதரிக்கிறது என்று சொல்லப் படவில்லை. அதனால்தான் அவர் பிரதமரைச் சந்தித்த பிறகு, சந்தித்த பத்திரிக்கையாளர்களிடம் தாம் மறுபடியும் டெல்லி வரப் போவதாகச் சொன்னாரே தவிர, காங்கிரஸின் ஆதரவைப் பெற்று விட்டதாகச் சொல்லவில்லை.

கேள்வி: இப்போது காங்கிரஸுக்கும் ஜெயலலிதா அணிக்கும் இடையிலான தேர்தல் கூட்டு பற்றி அவ்வப்போது செய்திகள் வெளிவருகின்றன. பிளவுபடாத அ.தி.மு.க.—வுக்குத்தான் காங்கிரஸின் ஆதரவு என்ற நிலையில், பிளவுபட்ட அ.தி.மு.க.வின் ஓர் அணியான ஜெயலலிதா அணி


உங்கள் குழந்தைக்கு ஊட்டுங்கள் முட்டையின் புரதச் சத்தூட்டத்தை!
ஃபாரெக்ஸ்®-எக்
6 மாதம் முதல்
புதிய ஃபாரெக்ஸ் எக் — இது, உங்கள் குழந்தையின் முழு நிறைவான வளர்ச்சிக்குத் தேவையான புரதச் சத்தைக் கொண்டுள்ளது. இது, நன்றாக முன்பே பக்குவப் படுத்தப்பட்டது. ஆகவே இது, குழந்தையின் மென்மை யான வயிற்றின் ஜீரண சக்திக்கு ஏற்றதாகும்.
ஃபாரெக்ஸ்—சுவையுடன் வளரும் வழி
Farex-egg
இதோ ஃபாரெக்ஸ் வளர்ச்சி வழி: 1. பால் சேர்த்த ஃபாரெக்ஸ் சீரியல் 2. ஃபாரெக்ஸ்-வெஜ் 3. ஃபாரெக்ஸ்-எக்

யோடு கூட்டு என்கிற செய்திகளைக் காங்கிரஸ் உடனடியாக மறுக்கவில்லையே! உங்களது கூற்றில் நீங்கள் தெளிவாக இருந்தால் உடனடியாக அவற்றை மறுத்திருக்க வேண்டாமா?

மூப்பனார்: முந்தைய நிலை வேறு. இப்போதைய நிலை வேறு. பிளவுபட்ட அ.தி.மு.க. என்பது முந்தைய நிலை. இப்போது அவை பிளவுபட்ட அ.தி.மு.க. அல்ல. இரண்டும் தனித் தனிக் கட்சிகளாகி விட்டன. எனவே, அப்போது நாங்கள் சொன்னதை இப்போது பொருத்திப் பார்க்க முடியாது.

கேள்வி: ஆக, ஜெயலலிதா அணியுடன் கூட்டு என்பது உறுதியாகி விட்டதா?

மூப்பனார்: அது பற்றி முடிவெடுக்க வேண்டியது கட்சித் தலைமை. நான் இங்கே காங்கிரஸைப் பலப்படுத்துவதற்காகத்தான் வந்திருக்கிறேன். அதைத்தான் செய்து கொண்டிருக்கிறேன்.

கேள்வி: உங்களைப் பொருத்தவரை தமிழகத்தில் காங்கிரஸ் தனியாகப் போட்டியிடுவதையே விரும்புவதாகவும், கட்சி மேலிடம்தான் உங்களுக்கு மாறுபட்ட கருத்தைக் கொண்டிருப்பதாகவும் சொல்லப்படுகிறதே?

மூப்பனார்: எந்தவொரு கட்சியும் தனித்துப் போட்டியிட்டு ஆட்சியமைப்பதைத்தானே விரும்பும்! அந்த வகையில்தான் நான் கட்சியைப் பலப்படுத்திக் கொண்டிருக்கிறேன்.

கேள்வி: கட்சி மேலிடம் கூட்டணியமைக்கச் சொன்னால் என்ன செய்வீர்கள்?


மூப்பனார்: மேலிடம் சொன்னதற்குக் கட்டுப்படுவேன்.

கேள்வி: காங்கிரஸ் கட்சி தமிழகத்தில் கூட்டணிதான் அமைக்கப் போகிறது என்றால், அதற்குக் கட்சியின் அகில இந்தியப் பொதுச் செயலாளர்களில் ஒருவராக இருந்த உங்களை இங்கு மாநிலத் தலைவராக அனுப்புவானேன்? அது உங்களைப் பதவி இறக்கம் செய்தது போல் ஆகாதா?

மூப்பனார் (சிரிக்கிறார்): எங்கிருந்தால் என்ன, கட்சிப் பணிகளைத்தான் செய்கிறேன். ஒருபோதும் அது பதவியிறக்கம் ஆகாது.

கேள்வி: காங்கிரஸ் — ஜெயலலிதா கூட்டணி உறுதிதானா?

மூப்பனார் (மறுபடியும் சிரிக்கிறார்): நீங்கள் எத்தனை முறை திருப்பித் திருப்பிக் கேட்டாலும் கூட்டணி பற்றி முடிவெடுக்க வேண்டியது கட்சித் தலைமைதான்; நான்



"இந்த ஹோட்டலில் மட்டும் அப்படி என்ன சௌகரியம்?"

"நாம் ஆர்டர் பண்ணின அயிட்டம் தயாரானவுடன் வீட்டுக்குக் கார்டு போடுவாங்க!"

— குற்றாலம் அபிதா.

அல்ல.

கேள்வி: கடந்த இருபதாண்டு கால திராவிடக் கட்சிகளின் ஆட்சியில்தான் தமிழகம் மிகவும் பின் தங்கிப் போய் விட்டது என்று ஆளுக்கு ஆள் பேசுகிறீர்கள். நீங்கள் சொல்வதில் உண்மை இல்லாமல் இல்லை. ஆனால் அதை இத்தனை நாட்களாகச் சொல்லாமல் இருந்ததேன்?

மூப்பனார்: எங்கள் விமர்சனங்களை நாங்கள் ஒரு போதும் சொல்லாமல் இருந்ததில்லை. எம்.ஜி.ஆர். இருந்த போது அ.தி.மு.க.—வோடு நாங்கள் கூட்டணி அமைத்துக் கொண்டிருந்தாலும் அவர் மேலவையைக் கலைத்த போது நாங்கள் அதை ஆதரிக்கவில்லை. தனிப்பட்ட முறையில் கூட நான் அவரிடம் எடுத்துச் சொன்னேன். இருப்பினும் அவரோடு நாங்கள் கூட்டணி அமைத்துக் கொண்டதற்குக் காரணம், அவர் இலங்கைப் பிரச்னையிலும் தேசியப் பிரச்னைகளிலும் எங்களுக்கு முழு ஒத்துழைப்புக் கொடுத்தார் என்பதுதான். அதனாலேயே மாநிலப் பிரச்னைகளில் நாங்கள் அவரோடு ஒத்துப் போய் விட்டோம் என்பதல்ல.

கேள்வி: முன்பு நீங்களும் கலைஞர் மு. கருணாநிதியும் பரஸ்பரம் சொத்துக்களைப் பரிமாறிக் கொள்ளத் தயார் என்று சொல்லிக் கொண்டீர்கள். இன்னும் மாற்றிக் கொள்ளவில்லையே!

மூப்பனார்: நான் சொன்னதில் இப்போதும் பின் வாங்கவில்லை. எந்த நிமிடமும் நான் தயாராக இருக்கிறேன்.

கேள்வி: கலைஞர் மு. கருணாநிதி ஒரு முறை, 'மூப்பனார் ராஜ்ய சபை உறுப்பினராக இருந்தாலும் அவர் ராஜ்ய சபையில் பேசியதாகப் படித்ததேயில்லை. அதனால் அவர் பேசியதேயில்லையா என்று முரசொலி மாறனிடம் கேட்டேன். அதற்கு மாறன், 'பேசாமல் என்ன? ராஜ்ய சபை உறுப்பினராகப் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்ட இரு முறையும் மூப்பனார் ராஜ்ய சபையில் பேசியிருக்கிறாரே!' என்று



சொன்னதாக உங்களைக் கிண்டல் செய்திருக்கிறாரே?

மூப்பனார்: ராஜ்ய சபையில் பேசித்தான் பணிகளைச் செய்ய வேண்டும் என்ப இல்லை. பேசாமலும் பேசுபவர்களைக் காட்டிலும் அதிகமான பணிகளைச் செய்ய லாம்.

கேள்வி: காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால் இந்தி மொழி தமிழகத்தில் திணிக்கப்படும் என்கிற அச்சம் மக்களிடையே இருக்கிறது என்பதை ஒப்புக் கொள்வீர்களா?

மூப்பனார்: அதெல்லாம் இங்கேயுள்ள வர்கள் செய்யும் பொய்ப் பிரசாரம். பண்டித நேருவின் உறுதி மொழியைக் காங் கிரஸ் ஒரு போதும் மறந்து விடாது; அதை மீறியும் செயல்படாது.

கேள்வி: போஃபர்ஸ், நீர்மூழ்கிக் கப்பல் பேரம்.... என்று காங்கிரஸுக்கு எதிராகப் பூதாகரமான விவகாரங்கள் எழுந்து நிற் கின்றன. இந் நிலையில் காங்கிரஸ் வெற்றி பெறும் என்று நம்புகிறீர்களா?

மூப்பனார்: நீங்கள் சொல்லுகிற விஷயங்களெல்லாம் எதிர்க் கட்சிகளின் திட்டமிட்ட பிரசாரமே தவிர, அவை எதுவும் காங்கிரஸ்காரர்கள் செய்த ஊழல் என்று நிரூபிக்கப்படவில்லை.

கேள்வி: அந்த பேரங்களில் இடைத் தரகர்கள் யாரும் இல்லை என்றது மத்திய அரசு. ஆனால் இடைத் தரகர்கள் இருந் திருக்கிறார்கள் என்பதுதான் வெளிப்படை யாகத் தெரிகிறதே?

மூப்பனார்: அப்படிப்பட்ட இடைத் தரகர்கள் யாராக இருந்தாலும் கண்டு பிடிக்கப்பட்டுத் தண்டிக்கப்படுவார்கள் என்றும் அரசு அறிவித்திருக்கிறதே! பிறகு என்ன?

கேள்வி: இடைத் தரகர்களே இல்லை — கமிஷனே தரப்படவில்லை என்று அரசு சொன்னது பொய்யாகத்தானே போய் விட்டது?

மூப்பனார்: எது உண்மை என்று தெரிந்த பிறகு அதை விசாரிக்க, மேலும் துப்பறிய அரசு தயாராகி விட்டதே!

கேள்வி: காங்கிரஸைப் பொருத்தவரை உள் கட்சிப் பூசல்களுக்குக் குறைச்சலே இல்லை. இது வெற்றி வாய்ப்புகளைப் பாதிக்காதா?

மூப்பனார்: நான் முன்பே சொன்னேன், ஓர் அகில இந்தியக் கட்சியின் பரந்துபட்ட ஊழியர்கள் மத்தியில் அங்கங்கே சிறு சிறு கருத்து மாறுபாடுகள் தோன்றுவது இயற் கையே என்று. அது ஒரு போதும் வெற்றி வாய்ப்பைப் பாதிக்காது. இப்போது ஜன தாக் கட்சிக்குள் இல்லாத பூசலா? ஆனால், அதெல்லாம் உங்களைப் போன்ற பத்திரி கையாளர்களுக்குப் பெரிதாகத் தெரி யாது!

கேள்வி: எதிர்க் கட்சியிலுள்ள பூசல் களை நாங்கள் ஒரு போதும் மறைத்த தில்லை. ஓர் ஆரோக்கியமான ஜனநாயக அரசுக்கு ஒரு வலுவான — ஒன்றுபட்ட எதிர்க்கட்சி அவசியம் என்றுதான் நடு நிலையிலுள்ள பத்திரிகைகள் விரும்புகின் றன.

மூப்பனார்: வலுவானதோர் எதிர்க் கட்சி வேண்டும் என்பதில் எங்களுக்கும் இரண்டு கருத்துக்கள் இல்லை. அப்படி இல்லையே என்பதுதான் எங்களுடைய வருத்தமும்.


கேள்வி: காங்கிரஸின் தூய்மையை நிரூபிப்பதற்காக — ஓர் அகில இந்தியக் கட்சி என்னும் வகையில் — மற்ற கட்சிகளுக்கு முன்னோடியாக, வரப் போகும் தேர்தலில் போட்டியிடும் காங்கிரஸ் கட்சி வேட்பாளர் களின் சொத்துக் கணக்கை வெளியிட்டால் என்ன? அப்படி வெளியிட்டால், வெற்றி பெற்ற பிறகு, அவர்கள் தவறான வழிகளில் சொத்துச் சேர்க்க முடியாதல்லவா!

மூப்பனார்: நீங்கள் சொல்லும் இந்த யோசனை அருமையானதோர் யோசனை. தங்களது சொத்துக் கணக்குகளைக் காட்டு வதில் காங்கிரஸ்காரர்களுக்கு எந்தவித மான பிரச்னையும் இல்லை. நீங்கள் சொன்ன இந்த அருமையான யோசனையை அமல்படுத்த நான் கட்சி மேலிடத்தில் இது குறித்துப் பேசுகிறேன்; என்னால் ஆன அனைத்தையும் செய்கிறேன்.

பேட்டி: **இளங்கோவன்.**

அட்டை வண்ணப்படமும், படங்களும்:

கே. வி. ஆனந்த்.



ஹெக்டே
அஜீத் சிங்
தேவ கவுடா அதிருப்தியாளர் கோஷ்டி
பட்டாசு நம்மையே திருப்பித் தாக்குதே!
தொகுதிகள்
எல்லாமே நமக்குத் தான்! ரெடி பண்ணிக்கு!
தமிழக இ.காங்கிரஸ்
மூப்பனார்
"எல்லாத் தொகுதியிலும் போட்டி!" - மூப்பனார்
அவுங்க என்ன ஆட்டி வைக்கிறது? நாங்க தான் ஆட்டி வைப்போம்!



கல்கி

1988 ஜுலை 17
மலர் 46 இதழ் 51
விபவ ஆடி 2



பயங்கரமான மானுடத் துயர்

மனிதகுல முன்னேற்றத்துக்கு விஞ்ஞான வளர்ச்சி பயன்படும்போதே கூடவே அபாயங்களும் விளைகின்றன. உதாரணமாகப் பயிர்ப் பூச்சிக் கொல்லி மருந்து, உணவுச் சத்துடன் நமது உடலுக்குள் புகுந்து உயிராபத்தான புற்று நோய் போன்றவற்றைத் தோற்றுவிக்கலாம். அணுமின் நிலையங்களில் விபத்து ஏற்பட்டுக் கதிரியக்கம் பரவாது என்பதற்கு நூறு சதவிகித உத்தரவாதம் இல்லை. மேலும் கதிரியக்கக் கழிவுப் பொருள்களை என்ன செய்வது என்பதற்கு இன்னமும் விஞ்ஞானிகள் தீர்வு காணவில்லை.

ஆக்கபூர்வமான விஞ்ஞான வளர்ச்சியிலேயே இத்தகைய அபாயங்கள் உண்டென்றால் அழிவு விஞ்ஞான வளர்ச்சி என்னென்ன கொடுமைகளைத்தான் செய்யாது! அணு ஆயுதப் போர், உலகையே உயிர் வாழத் தகுதியற்றதாக்கி விடும் என்பது ஒருபுறமிருக்க, ஒரு சின்ன கணிதத் தவறு, அல்லது ஒரு சிறு மதிப்பீட்டுத் தவறு அப்பாவி மக்களைப் பலிவாங்கி விடுகிறது. இம்முறையில்தான் 298 பயணிகளுடன் சென்ற இரானிய விமானம் ஒன்று அமெரிக்கக் கப்பலிலிருந்து புறப்பட்ட ஏவுகணையால் தாக்கித் தகர்க்கப்பட்டது. ஒருவர் மிஞ்சாமல் அத்தனை பேரும் மாண்டார்கள்.

முன்பெல்லாம் எதிரி விமானம் வந்தால் அதனைக் கண்ணுக்கு மெய்யாகப் பார்ப்பார்கள். அது குண்டு பொழிவதைக் காண்பார்கள். தற்காப்புக்காகக் கப்பலின் மேல்தளத்திலிருந்தோ, நிலத்திலிருந்தோ பீரங்கிகளை இயக்கி, அந்த விமானத்தைச் சுட்டு வீழ்த்துவார்கள். ஆனால் இன்று விஞ்ஞான வளர்ச்சி காரணமாக, எதிரி விமானம் வருவதை ரேடார் திரையில் ஒரு புள்ளி வடிவமாகத்தான் பார்க்கிறார்கள். ஒரு பட்டனைத் தட்டத் தானியங்கு முறையில் ஏவுகணை புறப்பட்டுப் போய், அந்த விமானத்தைத் தேடிக் கண்டுபிடித்துத் தாக்கி அழிக்கிறது! இரானியப் பயணிகள் விமானம் பொசுக்கப்பட்டது இம்மாதிரிதான். பயணிகள் விமானம் செல்ல வேண்டிய பாதையிலிருந்து சிறிது இடம் மாறித் திரிய, அமெரிக்கக் கப்பலின் காப்டன் எதிரி விமானம் கப்பலைத் தாக்க வருவதாகக் கருதிப் பதறிப் போய் இயங்க, ஏவுகணை பாய்ந்து சென்று விமானத்தை அழித்து விட்டது. குற்றம்தான்; அறிவற்ற செயல்தான்; உள்ள உபகரணங்களைச் சரியாகப் பயன்படுத்திப் போர் விமானம்தானா என்று உறுதிப்படுத்திக் கொள்ளாத மூடத்தனம்தான்; என்றாலும் வேண்டுமென்றே செய்யப்பட்ட குற்றமல்ல. ஒரு பாவமும் அறியாத 298 பயணிகளையும் அவர்களைச் சுமந்த விமானத்தையும் அழிக்க வேண்டும் என்று அரக்கனாக இருந்தாலொழிய வேறு யாரும் எண்ண மாட்டார்கள். கப்பல் காப்டனோ, 'இமாலயத் தவறு செய்து விட்டேன்; இந்தத் துயரப் பளுவை என் வாழ்நாள் முழுவதும் நான் சுமக்க வேண்டும்; எனக்கு இனி மன நிம்மதியே கிடையாது' என்று அழுதிருக்கிறார்.

ரேகனும் ஆரம்பத்தில் 'பயங்கரமான மானுடத் துயர்' என்றுதான் அறிக்கை விட்டார். ஆனால் பிறகு, அமெரிக்க அரசு ஏதேதோ சால்ஜாப்புகளையும், சப்புக் கட்டைகளையும் கூறி அசிங்கப்படுத்தி விட்டது.

இந்தப் பயங்கர விபத்து உருவாக்கும் துயரம், ஓர் ஆத்மப் பரிசோதனையை ஊக்குவித்து, பெர்ஷிய வளைகுடா பகுதியில் போர் நிறுத்தத்துக்கு வழிவகுக்குமானால், ஈரான் — ஈராக் போர் ஒரு முடிவுக்கு வர உதவுமானால் நல்லது. அப்போது 298 அப்பாவி மக்களின் உயிர்த்தியாகம் கூட அர்த்தமுள்ளதாகிவிடும்! ஆனால், ''பழிக்குப் பழி'' என்றுதான் கொமேனி பேசுகிறார்! பார்க்கப் போனால் இந்த விபத்து, அழிக்கும் ஆயுத விஞ்ஞானத்தின் வளர்ச்சிக்கே மங்களம் பாடுவதாக அமைய வேண்டும். இல்லையெனில் இன்று அமெரிக்கக் கப்பலில் நடந்த ஒரு தவறு, நாளை அணு ஆயுத ஏவுகணைகளை உடைய ஒரு நீர்மூழ்கிக் கப்பலில் நேராது என்பதற்கும், அணு ஆயுத உலகப் போர் மூண்டு, இந்தப் பூமண்டலம் முழுவதுமே அழிந்து போகாது என்பதற்கும் எந்த விதமான உத்தரவாதமும் இல்லை.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. — பாரதியார்.

புதுவைப் பல்கலைக் கழகம்

128, ரங்கப்பிள்ளைத் தெரு, பாண்டிச்சேரி

தமிழியல் துறை

திரு. சங்கரதாஸ் சுவாமிகள்

நாடகத்துறை நிறுவனம்

தமிழ்த் தாயின் திருவடிகளுக்கு இன்னுமோர் மலர்க் காணிக்கை. புதுவைப் பல்கலைக் கழகம் தமிழியல் துறையில் புதிய இயல் ஒன்றை (நாடகக்கலை பட்ட மேற்படிப்பு பெருஞ்சான்றிதழ்ப் படிப்பு) இக்கல்வியாண்டு (1988-89) முதல் தொடங்கவுள்ளது. இந்தப் பட்டமேற்படிப்பு மிகவும் புதுமையான முறையில் புதிய உத்திகளுடன் அமைக்கப்பட்டுள்ளது.

தமிழக நாடகக் கலைத் தந்தை திரு. சங்கரதாஸ் சுவாமிகட்கும் புதுவைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்ற செய்தி யாவரும் அறிந்ததே. எனவே, அமரர் திரு. சங்கரதாஸ் சுவாமிகள் பெயரால் இந்த பல்கலைக்கழக நாடகத்துறை நிறுவனம் அமையும்.

நாடகக்கலை ஓராண்டு பட்ட மேற்படிப்பு பெருஞ்சான்றிதழ்ப் படிப்பில் சேர்வதற்கான தகுதி:

(One year Post Graduate diploma Course in Theatre Art)

ஏதாவது ஒரு பல்கலைக்கழகத்தில் இளங்கலைப் பட்டம்(Graduate) பெற்றிருக்க வேண்டும். நாடகத்துறையில் ஆர்வமுடையவராக இருக்க வேண்டும்.

வயது: 25க்கும் மிகாமல் (1.09.'88 அன்று)

பல்கலைக்கழகத் தமிழியல் துறையின் கீழ் நடத்தப்பெற இருக்கும், புதுமை நிறை நாடகக்கலை இயல் துறைக்குத் **தில்லிப் பல்கலைக்கழகப் பேராசிரியரும், புகழ்மிகு நாடகப் படைப்பாசிரியருமாகிய டாக்டர். இந்திரா பார்த்தசாரதி** அவர்கள் பொறுப்பேற்க உள்ளார்கள்.


ஆர்வமும், தகுதியும் உள்ள அனைவரும் புதுவைப் பல்கலைக்கழகப் பதிவாளருக்கு விண்ணப்பிக்கலாம். தனி வெள்ளைத்தாளில் பெயர், வயது, தகுதிகள், படிப்பு, முன் அனுபவம், முகவரி ஆகிய தன் விபரங்களுடன் கையொப்பமிட்டு விண்ணப்பிக்கவும். பட்டப்படிப்புத் தேர்வுத் சான்றிதழ் நகலும் இணைக்கவும். தேர்ந்த நாடகக்கலை வல்லுநர்கள் குழு நேர்முகத் தேர்வு செய்யும். பின்னர் 1988 செப்டம்பர் மாதம் வகுப்புக்கள் துவங்கும்.

விண்ணப்பக் கட்டணம்: ரூ.50/- (ரூபாய் ஐம்பது மட்டும்) வங்கி வரைவோலை புதுவைப் பல்கலைக்கழக நிதி அலுவலர் பெயருக்கு வாங்கி அனுப்ப வேண்டும். தாழ்த்தப்பட்ட அட்டவணை இனத்தவர், மலைச்சாதியினருக்கு இந்தக் கட்டணம் கிடையாது. அவர்கள் அட்டவணை இனத்தவர் என்பதற்கான சான்றிதழ் இணைக்க வேண்டும்.

வரைவோலையுடன் விண்ணப்பம் கீழ்க்கண்ட முகவரிக்கு வந்து சேர வேண்டிய கடைசி நாள் **ஆகஸ்டு 10, 1988.** முகவரி: பதிவாளர், புதுவைப்பல்கலைக்கழகம், 128, ரங்கப்பிள்ளை வீதி, பாண்டிச்சேரி 605 001.

புதுச்சேரி
16.6.'88

பி.ஆர். ராமநாதன், ஐ.ஏ.எஸ்.
பதிவாளர்.



''உங்க நர்ஸரி ஸ்கூல் இந்தியாவி லேயே முதலிடம் வகிக்குதுங்கறீங்களே. எதுல?''

''டொனேஷன் வாங்கறதுல!''

— மேல்மங்கலம் பத்ரா.




''ஒரு கடையில மட்டும் வருஷம் முழு வதும் தள்ளுபடி உண்டு!''

''எந்தக் கடைங்க?''

''ரேஷன் கடைதான்! ஒரு கிலோ வாங் கினா 100 கிராம்; ஒரு லிட்டர் வாங் கினா 100 மி. லி. தள்ளுபடி பண்ணித் தானே தர்றாங்க!''

— மேல்மங்கலம் பத்ரா.



''உங்க கட்சியோட தோல்விக்கு அடிப்படைக் காரணம் என்ன?''


''வேறு என்ன? தேர்தல் நடந்தது தான்!''

— கடுவை. கோபால்சாமி.

''அந்தத் தலைவருக்குத் தீவிரமான கொள்கைப் பிடிப்பு இருக்கிறதாச் சொன்னியே, அப்படி என்ன கொள்கை?''

''அவரோட கட்சி ஜெயிச்சா வேற யாரும் முதலமைச்சரா வரக் கூடாதுங் கறதுதான்!''


— என். வி. ரமணி.



''ஆபரேஷன் முடிஞ்சுடுச்சுன்னு எப் படிச் சொல்றீங்க....?''

''அதான் நர்ஸுகளெல்லாம் கோரஸா... 'ஜன கன மண' பாடறாங்களே!''

— குத்தாலம் அபிதா.



''உங்க ஆபீஸ் வாசல்ல பண்டிகை காலத் தள்ளுபடி 25%—ன்னு எழுதி யிருக்கே, அது எதுக்கு?''

''வேறே எதுக்கு? லஞ்சத்துக்குத் தான்!''

— கடுவை. கோபால்சாமி.



செக்ஷன் 302 படி குற்றவாளி யார்?

—போட்டி முடிவு



'பெண் என்பவள் விலைபொருள் அல்ல; உன் அநாகரிக எண்ணங்களை அரங்கேற்ற அவளை மேடையாகப் பயன்படுத்தாதே. பெண்ணிடமிருந்துதான் பிறந்தாய். பெண்ணைத்தான் மணக்கப் போகிறாய். பெண்ணுக்குத் தந்தையும் ஆகலாம். பெண்ணை மதி. அவள் உணர்வுகளை மதி.''

மிக அதிகமான வாசகர்கள் பட்டுக்கோட்டை பிரபாகரின் மேற்சொன்ன வரிகளையே 'நறுக்'கென்ற நாலு வரிகளாகத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். எனவே, அவர்கள் தீர்ப்பை நாமும் ஏற்று, இதனையே மிகச் சிறந்த வரிகளாக முடிவு செய்கிறோம்.

மேற்சொன்ன வரிகளையும் எழுதி, மற்றும் இரு கேள்விகளுக்கும் சரியான விடைகளை அளித்தவர்கள் மொத்தம் முப்பத்திரண்டு வாசகர்கள்.


முதல் அறிவிப்பிலேயே, ''ஒருவருக்கு அதிகமாகச் சரியான விடைகள் எழுதினால் இருக்கவே இருக்கிறது வகுத்தல் வாய்ப்பாடு'' எனக் குறிப்பிட்டிருந்தோம். எனவே, பரிசுத் தொகையை ரூ. 1024/– ஆக உயர்த்தி, ஒவ்வொருவருக்கும் ரூ. 32/– பரிசு வழங்குகிறோம். கூடிய விரைவில் பரிசுத் தொகை, வென்றவர்களை வந்தடையும்.

வெற்றி பெற்றவர்களுக்கு வாழ்த்துக்கள். வெற்றி பெறாவிட்டாலும் பல்லாயிரக் கணக்கில் போட்டியில் பங்கு கொண்டு, போட்டியை மகத்தான வெற்றியாக்கிய அனைவருக்கும் நன்றி. முடிவு தேதிக்குப் பிறகு வந்த பல கடிதங்கள் பரிசீலனைக்கு ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

வெற்றி பெற்றவர்கள் விவரம்:

1. மிஸ். ஓம். கே. ஷோபா, 23, பிள்ளையார் கோவில் தெரு, புது டவுன், வாணியம்பாடி—655 752. 2. ஜோ. வில்லியம், 2/83, ஆசிரியர் குடியிருப்பு, மேல்பட்டி வ. ஆ.—635 805. 3. எல். மாறன், 96, வன்னியர் வீதி, மேல்பட்டி — 635 805. வ. ஆ. மாவட்டம். 4. பி. எம். பிரபாகரன், 2/17, மெயின் ரோடு, திருமருகல்—609 702. 5. ஆர். உமாமகேசுவரி, 27, நக்கீரன் தெரு, மேற்கு மாம்பலம், சென்னை—33. 6. ஆர். ஜென்னி, 27, நக்கீரர் தெரு, மேற்கு மாம்பலம், சென்னை — 33. 7. ஆர். சித்ரா, 2/51-ஏ, வடக்கு வீதி, திருக்கண்ணமங்கை—610 104. 8. டி. வீரப்பன், வேடித் தெரு, அய்யம்பெருமாள்பட்டி, சேலம்—5. 9. கலையரசி இராமதாஸ், 104, எல். ஐ. ஜி. அண்ணா நகர், கடலூர் — 607 001. 10. பி. சங்கர், 80, டைப் — III, ஹார்பர் எஸ்டேட், தூத்துக்குடி—4. 11. திருமதி சபுராஜன், 22, சுதர்சனம் தெரு, கடலூர் — 607 001. 12. வி. மாணிக்கம், 35, தனியூர் சாலிய தெரு, கொரநாடு, மயிலாடுதுறை — 2. 13. பி. சகுந்தலா, W/o. திரு. வைத்தியநாதன், 6/74, நடு வீதி, கண்டாச்சிபுரம், விழுப்புரம் — 605 701. 14. ரா. சாந்தா, தமிழாசிரியை, காமராஜர் மகளிர் உயர்நிலைப்பள்ளி, மணக்காடு, அஸ்தம்பட்டி, சேலம்—7. 15. வ. சந்திரமோகன், சி — 25, டி. வி. எஸ். நகர், காஜாமலை, திருச்சி—620 023. 16. டி. எம். ராஜலக்ஷ்மி, 45, தங்கசாலைத் தெரு (மாடி), சென்னை — 79. 17. சுயத்தாலு அன்பர், பெயர், விலாசமில்லை. 18. பி. நாராயணசாமி, 372/A—1, மெயின் ரோடு, பசுமலை, மதுரை — 625 004. 19. குமாரி எஸ். சத்தியபாமா, 96, முனுசாமி முதலியார் அவென்யூ, காஞ்சிபுரம் — 631 501. 20. பி. கருணாநிதி, 47, சன்னதித் தெரு, திருவொற்றியூர், சென்னை — 19. 21. அன்னலட்சுமி கண்ணன், 15, ஆர். எஸ். ரோடு, நாகர் நகர், திண்டுக்கல் — 3. 22. மா. பால்ரங்கசாமி, தொழுநோய் மருத்துவமனை, ஆரோக்கியபுரம், தூத்துக்குடி — 628 002. 23. என். தங்கமாலா, 19, ஆசிரியர் காலனி, புதுக்கோட்டை — 622 001. 24. ஜி. பன்னீர்செல்வம், 14, கார்ப்பெட் தெரு, கிழக்கு சேலம் போஸ்ட், சேலம் — 1. 25. எம். ஸ்ரீதரன் C/o. சந்திரசேகர் அண்ட் கோ., 2, என். எம். எஸ். காம்பவுண்ட், காந்தி மார்க்கெட், ஈரோடு — 638 001. 26. என். செல்வநாயகி, 17, அந்தோணியார் கோவில் தெரு, பீமநகர், திருச்சி — 620 001. 27. டி. பழனீஸ்வரி தினகரன், புஷ்பவள்ளி பவனம், 7, பங்கஜம் காலனி, மதுரை—625 009. 28. ஆர். மேரி, 14/A, குமரன் குறுக்குத் தெரு, காமராஜபுரம், மதுரை — 9. 29. வி. காந்தி, 6, கிழக்கு குளக்கரை தெரு, திருவள்ளூர் — 602 001. 30. ஆர். நாட்சாயணி, D/o. ஏ. ராதாகிருஷ்ணன், 68, ஓடைப் பிள்ளையார் கோவில் அருகில், காந்தி நகர், வேலூர் — 632 006. 31. என். சதீஷ் பாபு, S/o. என். நமினார், 6/23—பி, பீஸ் காட்டேஜ் அனெக்ஸ், காசக்காரனூர் சேலம்—636 005. 32. வசுதா கிருஷ்ணசாமி, 34, வாகதேவபுரம் தெரு, மேற்கு மாம்பலம், சென்னை — 33.

ஜெயசக்தி யின் 10 வது ஆண்டு விழா!



புதிய குரூப்புகள்	அன்பளிப்புகள்
ரூ. 125 x 40 = ரூ. 5,000/-	ரூ. 25 மதிப்புள்ள கூப்பன்
ரூ. 200 x 25 = ரூ. 5,000/-	ரூ. 25 மதிப்புள்ள கூப்பன்
ரூ. 250 x 40 = ரூ. 10,000/-	ரூ. 50 மதிப்புள்ள கூப்பன்
ரூ. 400 x 25 = ரூ. 10,000/-	ரூ. 50 மதிப்புள்ள கூப்பன்
ரூ. 625 x 40 = ரூ. 25,000/- ரூ. 1000 x 25 ரூ. 25,000/-	ரூ. 125 மதிப்புள்ள கூப்பன் அல்லது 15 கி வெள்ளி காசு
ரூ. 250 x 100 = ரூ. 25,000/-	ரூ.125 மதிப்புள்ள கூப்பன் அல்லது 15 கி. வெள்ளி காசு
ரூ. 2000 x 25 = ரூ. 50,000/-	ரூ. 250 மதிப்புள்ள கூப்பன் அல்லது ஈகிள் பிளாஸ்க்
ரூ. 1250 x 40 = ரூ. 50,000/-	ரூ. 250 மதிப்புள்ள கூப்பன் அல்லது ஈகிள் பிளாஸ்க்
ரூ. 500 x 100 = ரூ. 50,000/-	ரூ. 125 மதிப்புள்ள கூப்பன் அல்லது 15 கி வெள்ளி காசு
ரூ. 4000 x 25 = ரூ. 1,00,000/-	ரூ. 600 மதிப்புள்ள கூப்பன் அல்லது 2 கிராம் தங்க காசு
ரூ. 2500 x 40 = ரூ. 1,00,000/-	ரூ. 600 மதிப்புள்ள கூப்பன் அல்லது 2 கிராம் தங்க காசு
ரூ. 1000 x 100 = ரூ. 1,00,000/-	ரூ. 250 மதிப்புள்ள கூப்பன் அல்லது ஈகிள் பிளாஸ்க்

நுழைவு கட்டணம் தனி

கூப்பன்கள் சென்னை

ஜெயசக்தி மக்களின் சக்தியால் உருவான ஒரு ஸ்தாபனம். தனது பத்தாவது ஆண்டை வெகு விமரிசையாக மகிழ்ச்சியாக கொண்டாடுகிறது. ஒவ்வொரு சீட்டு சேரும் உறுப்பினர்களுக்கும் ஒரு உபயோகமான அன்பளிப்பு. சீட்டுகள் தங்கள் வசதிக் கேற்ப ரூ. 5000 முதல் ஒரு லட்சம் வரை.

இதுவரை தங்களுடைய பேராதரவில் திளைத்து வந்த எங்களை மேலும் ஊக்குவிக்க உங்களுக்காக எங்களுடைய புதிய சீட்டு குரூப்புகள். தங்கள் வாழ்வு என்றும் மகிழ்ச்சி கரமாகவே இருக்கட்டும்.

STOP & SHOP chain stores Ltd. ல் மாற்றத்தக்கவை

போனஸ்

- 50,000/- வரையிலான சீட்டு தொகை பட்டு வாடா தனி நபர்களின் உத்திரவாதத்திலும் ஜாமீனிலும்
- அறிமுகப் படுத்துவோருக்கும் கவர்ச்சிகரமான பரிசுகள்
- குறித்த காலத்தில் பணம் செலுத்து வோருக்கு இறுதியில் 1% போனஸ்
- இந்த அன்பளிப்புகள் ஜூலை 1 முதல் ஒரு மாத காலத்திற்கு மட்டுமே.



நம்பிக்கை

ஜெயசக்தி

சிட்ஸ் & பைனான்ஸ் (பி) லிட்.

39, நடேசன் தெரு, முதல் மாடி, தி.நகர், சென்னை-600 017.

போன் : 442218

கிளைகள்

கோவை
666, ராஜ வீதி
போன் :- 34369

மதுரை
41, வடக்கு வெளி வீதி,
முதல் மாடி
போன் :- 37233.

பாண்டிச்சேரி
11, துமாஸ்ட்ரீட் செட்டி தெரு
2வது மாடி
போன் : 26493/26471

திருச்சி
22, மதுரை ரோடு
முதல் மாடி
போன் :- 33397, 31376

பெங்களூர்
24/1-A, மார்கோஸா ரோடு, (10-வது கிராஸ்)
மல்லேஸ்வரம்
போன் : 366971

தூத்துக்குடி
10 & 11, விக்டோரியா சாலை

திருநெல்வேலி
18-K.சிவன் காம்ப்ளக்ஸ்,
S.N. ஹை ரோடு,
போன் :- 25785

பட்டுக்கோட்டை
121/B, தம்பையா தெரு.
போன் :- 453

வேலூர் (N.A)
கோல்டன் பில்டிங்
(தி.மு.க. அலுவலகம் பின்புறம்) பிளாட் 1613
மார்க்கெட் தெரு.
போன் : 26508

திருவண்ணாமலை
14/A, ஆனைகட்டி தெரு
போன் :- 2483

கும்பகோணம்
12, மேல சாரங்கபாணி தெரு
போன் :- 22647

தஞ்சாவூர்
எண். 2 & 3 முதல் மாடி
ராஜா பில்டிங்
தி.எ. காசி ரோடு
போன் :- 21636 22286.

ஜெயசக்தி - திட்டமிட்ட வளர்ச்சிக்கு

LOTUS/JCF/48/88/Tam

“ஒலிம்பிக்ஸில் கலந்து கொள்வதே ஒரு சாதனைதான்...”

நல்லுச்சாமி அண்ணாவி.

கரூருக்குப் பக்கத்தில் ஒரு குக்கிராமத்தில் பிறந்த இந்த இளைஞர், இன்று, அகில இந்திய உயரம் தாண்டலில் சாம்பியன்.

பதினாறு ஆண்டுகளாய் இருந்து வந்த பீம்சிங் என்ற அத்லெட்டின் 209 செ. மீ. உயரம் தாண்டிய சாதனையை, 1984—இல் அண்ணாவி 212 செ. மீ. உயரம் தாண்டி முறியடித்தார். பின்னர் 87 — இல் கேரளாவில் நடந்த தேசிய விளையாட்டுக்களில் இவரது பழைய ரெகார்டை இவரே உடைத்தார். அண்ணாவியின் புதிய சாதனை 216 செ. மீ!

அண்ணாவிக்கு நூற்று எண்பத்து எட்டு சென்டி மீட்டர் உயரமுடைய ஒல்லியான தேகம். விவசாயக் குடும்பம். அப்பா நல்லுச்சாமி, விவசாயத்தில் ஈடுபட்டாலும், சித்தப்பா பரமசிவம் கரூரில் உயர்நிலைப் பள்ளி உடற்பயிற்சி ஆசிரியர். ஓடுவது, தாண்டுவது என்று எல்லாவற்றிலும் சிறப்பாய் இருந்த அண்ணாவியை அதலெட்டாய் உருவாக்கும் முயற்சிக்கு வித்திட்டவர் சித்தப்பாதான்.

“லண்டனில் பெற்ற பயிற்சியால் மிகுந்த பலன் என்று சொல்ல முடியாது.

“பத்தாம் வகுப்பு படிக்கும் போது, நேரு யுவ கேந்திராவின் அதலெடிக் கோச் கவாங்கர் என்பவர் என்னை ஊக்குவித்தார்...” என்று சொல்லும் அண்ணாவி, 81 — 82 — இல் நாகர் கோவிலில் நடந்த பள்ளிகளுக்கிடையிலான குடியரசு நாள் விளையாட்டுப் போட்டியில் கலந்து கொண்டது தான் முதல் குறிப்பிடத்தக்க போட்டி. அங்கே இவர் தாண்டிய 181 செ. மீ., பள்ளிகள் அளவில் பெரிய சாதனை. பின்னர் திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் பி.யூ.சி. மற்றும் பட்டப்படிப்பு.

மாநில அளவில் பளிச்சிட்ட இவரது திறமையைக் கண்ட தென்னக ரயில்வே நிர்வாகம், 83 — இல் இவரை ஊக்குவிக்க ரிசர்வேஷன் கிளார்க்காக நியமனம் செய்தது.

தெற்கத்திய ரயில்வேயில் 'கோச்' ஆகப்





பணிபுரியும் காமராஜ். அண்ணாவிக்கு உசாக டானிக் தரும் நபர். அதேபோல அண்ணாவியை ஊக்குவிக்கும் இன்னொன்று பாந்தர் ஸ்போர்ட்ஸ் கிளப். அதன் தலைவரான சோமசுந்தரம், அண்ணாவியின் முன்னேற்றத்தில் மிகுந்த அக்கறை காட்டி வருவதுடன், அண்ணாவியின் பயிற்சிக்குத் தேவையானவற்றைத் தக்கவர்களிடமிருந்து பெற்றுத் தருவதிலும் ஈடுபட்டுள்ளார். அதன்படி, சமீபத்தில் வாங்கித் தரப்பட்டதுதான் இருபதாயிரம் ரூபாய் விலையுள்ள ரப்பர் மெத்தையிலான ஹை-ஜம்ப் பிட். பிரத்தியேகக் கோச்சாக இருக்கும் ராமகிருஷ்ணனின் கடுமையான கோச்சிங்கும் அண்ணாவிக்குப் பேருதவி.

பத்தாவது ஆசிய விளையாட்டுக்கள் கொரியாவில் நடந்தபோது இவர் பங்கேற்றார். தெற்காசிய நாடுகளுக்கான போட்டிகளிலும், மற்றும் செக்கோஸ்லோவாகியா, பிரான்ஸ் போன்ற ஐரோப்பிய நாடுகளிலும் நடந்த பல்வேறு போட்டிகளிலும் பங்கேற்றிருக்கிறார்.

இந்திய அரசு இவரை லண்டனுக்கு மூன்று மாத காலப் பிரத்தியேகப் பயிற்சிக்கு அனுப்பியது. அதுபற்றிக் கேட்ட போது அண்ணாவி சொல்கிறார்: "லண்டனில் நான் பெற்ற பயிற்சி, இந்தியச் சூழ்நிலைக்கு ஏற்றது அல்ல; எனவே அதனால் எனக்கு மிகுந்த பலன் என்று சொல்ல முடியாது."

இந்தியாவைப் பொறுத்த வரை அண்ணாவிதான் நெம்பர்—ஒன் என்றாலும், உலக அரங்கில் இவரது சாதனையைத் தூக்கிச் சாப்பிடுபவர்கள் பலர் இருக்கிறார்கள். கடந்த ஒலிம்பிக்ஸில் தங்கப் பதக்கம் பெற்றவர் தாண்டிய உயரம் 236 செ.மீ. வெள்ளிப் பதக்கம் பெற்றவர் தாண்டியது 229 செ. மீ. வெண்கலப் பதக்கக்காரர் 221 செ. மீ. ஒலிம்பிக்ஸில், வெற்றி பெற்றுப் பதக்கம்பெறுவது ஒருபுறமிருக்கட்டும்; ஒலிம்பிக் விளையாட்டில், முதல் ரவுண்டில் தேற வேண்டுமென்றாலே குறைந்தபட்சம், 220 செ. மீ. தாண்ட வேண்டுமாம். இதுவரை அண்ணாவியின் மிகச் சிறந்த பர்ஃபாமன்ஸை எடுத்துக் கொண்டால்கூட 219 செ. மீ, தான். இது குறித்துக் கேட்டபோது: "என்னால் இந்த ஒலிம்பிக்ஸில் பதக்கம் பெறுவது என்பது இயலாத காரியம்தான். அதற்காக, நான் தன்னம்பிக்கை இல்லாமல் பேசுவதாய் நினைத்துக் கொள்ளாதீர்கள். நான் கடுமையாய்ப் பயிற்சி செய்து கொண்டிருக்கிறேன். என் திறமையை இன்னும் வளர்த்துக் கொண்டு, இந்த வருட சியோல் ஒலிம்பிக் போட்டியில் கலந்து கொள்வேன்: குறைந்தபட்ச உயரத்தைத் தாண்டி, போட்டியில் பங்கேற்கும் தகுதியைப் பெறுவேன். என்னைப் பொறுத்தவரை அதுவே ஒரு பெரிய விஷயம்தான்."

இன்னொரு சுவையான செய்தி: அண்ணாவி மட்டுமல்ல; அவர் குடும்பத்தில் அவரது இரண்டு தம்பிகளும் ஹை—ஜம்ப் சாம்பியன்கள். தங்கையும், ஜூனியர் ஹை—ஜம்ப் சாம்ப்தான்!

சந்திப்பு: **எஸ். சந்திரமௌலி**

வண்ணப்படங்கள்: **'சுபா' ரவிஷங்கர்**

பாதிக் கதவு திறந்து அந்தப் பெண்ணின் வலதுபக்க முகம் தெரிந்தது. முரளி தொண்டையைச் செருமிக் கொண்டு கையில் இருந்த முகவரியை ஒரு தடவை சரி பார்த்துக் கொண்டான்.

"மிஸ்டர் பரணீதரன் வீடு இது தானே?"

பதில் இல்லை. அந்த அமைதி சாதாரணமாய் இல்லை. முரளி நிமிர்ந்து அந்தப் பெண்ணைப் பார்த்தான். மூளைக்குள் விர்ரென்று அக்னிக் குழாய்கள் வெடிக்கிற ஹிம்சை.

காயத்ரியா? எட்டு வருஷங்கள் காதலித்து — எனக்கு வேலை இல்லை என்கிற ஒரே காரணத்துக்காக அவள் அப்பா திருமணம் செய்து கொடுக்க மறுத்த காயத்ரியா? அவளுக்குக் கல்யாணமான மறு மாதம் முரளிக்கு வேலை கிடைத்தது. ஆனால்

என்ன இருந்தாலும்...

லாபமில்லை. காயத்ரி ஏற்கெனவே மிஸஸ் பரணீதரனாய் ஆகியிருந்தாள்.

ஐந்து வருஷங்கள் கழித்து எதிர்பாராமல் இந்தச் சந்திப்பு. கன்னம் புஸ் புஸ் என்று இருக்கும் காயத்ரி கலைந்து போய்த் தாடை எலும்பு துருத்த நின்றிருந்தாள்.

முரளிக்குப் போய் விடலாமா என்று யோசனை வந்தது. சிமெண்ட் ஏஜென்சி மானேஜர் பரணீதரன் — என் காயத்ரியின் புருஷனா?

"காயத்ரி..."

திகுரென்று மின்னிய மாதிரி காயத்ரி பார்த்தாள். கண்களில் பயம் தெரிந்தது. கண்ணோரத்தில் நீர் கட்டிக் கொண்டு பளபளத்தது.

"அவர் இல்லையா காயத்ரி?"

"ம்ஹூம்... டூர்..."

"நல்லாயிருக்கியா?"

"......"

கதவு வழியாய்த் தெரிந்த உத்திரத்தில் இருந்து தொட்டில் கயிறு இறங்கிற்று. ஷெல்ஃபில் ஃபாரக்ஸ் டப்பா திறந்திருந்தது. கலக்கிக் கொண்டு இருந்திருப்பாளோ?

"உள்ளே வரலாமா?"

"ஆங்?"

"உள்ளே வரலாமான்னு கேட்டேன்."

யோசனை கண்ணில் நிமிஷத்தில் படர்ந்தது. கதவை இறுக்கமாய்ப் பற்றிக் கொண்டாள். தயக்கமாய்க் கதவைத் திறந்து வழி விட்டாள்.

"வாங்க!"

வீடு துடைத்து விடப்பட்டு அங்கங்கே ஈரம் காயாமல் இருந்தது. ஈரம் காயாத தரை மாதிரி மனசு. வெயில் பட்டுக் காயாத மனசு. ஈர நினைவு.

காயத்ரி மறந்திருப்பாளா? எப்படி முடியும்? மனசை அத்தனை சுலபமாய்க் கழுவிவிட முடியுமா?

"காயத்ரி. சந்தோஷமா இருக்கியா?"

"காப்பி குடிக்கிறீங்களா?"

"சந்தோஷமா இருக்கியா காயத்ரி?"

காயத்ரி தொட்டில் கட்டியிருந்த மேல் கூரையைப் பார்த்தாள். தொண்டை நரம்பில் அழுகை கூடியது அதன் தெறிப்பில் புரிந்தது.

"எல்லாமே நடந்து முடிஞ்ச பிறகு, கேள்வி எல்லாமே வீண் முரளி. காப்பி குடிக்கிறீங்களா?"

"வேணாம். பேசணும் காயத்ரி உங்கிட்ட. நீ... நீ... சந்தோஷமா இல்லையா?"

"சந்தோஷமா இல்லைன்னு நான் சொன்னாலும் பிரயோஜனமில்லே. நீங்க நல்லா யிருக்கீங்களா? வேலை கிடைச்சிட்டுதுன்னு பக்கத்து விட்டு அலமேலு பிரசவத்துக்கு ஊருக்குப் போயிருந்தப்போ சொன்னா. பாம்பேலயாமே வேலை?"

"ம்... பரணீதரன் எந்த டைப் காயத்ரி?"

காயத்ரி சுவரோடு உராய்ந்து கொண்டு கீழே உட்கார்ந்தாள். மௌனமாய் — முரளியை வெறித்துப் பார்த்தாள். கண்களில் ஈரம் இருந்தது.

"என்ன துக்கம் உனக்கு காயத்ரி? நீ சந்தோஷமா இல்லை...? என்ன விஷயம்... சொல்லு?"

"கேப்பீங்களா முரளி... நான் சொல்ற எல்லாத்தையும் கேப்பீங்களா?"

"சொல்லு."

முந்தானையால் மூக்கைத் துடைத்துக் கொண்டாள். அழுகை வரத் துடித்த உதடுகளை அழுந்த அடக்கினாள்.

"அஞ்சு வருஷங்களுக்கு முன்னால என்னை நீங்க இழுத்துட்டு ஓடியிருக்கணும், முரளி."

அவ்வளவுதான். வேறொன்றுமில்லை. ஆனால் அந்த இரண்டு வரிகளில் இரண்டாயிரம் அர்த்தங்கள் இருந்தன. பக்கம் பக்கமாய்ப் பேசுவதைவிட ஒற்றைச் சொல்லின் ஆதிக்கம் ஜாஸ்தி.

தமயந்தி

''காயத்ரி... என்ன பேசறே நீ?''

''நான் சந்தோஷமா இல்லை முரளி. யாரும் என்னைப் புரிஞ்சுக்கலை. என் புருஷன் என்னைப் புரிஞ்சிக்கலை. நான் கஷ்டப் படுறேங்கிறதை என்னைப் பெத்த அம்மா, அப்பா புரிஞ்சுக்கலை. குடிச்சிட்டு உதைக்கிறார் முரளி. இவர் ஒரு நாள் அடிச்சு, பக்கத்திலே உள்ளவங்க தடுத்து இப்ப அடிக்கிறதில்லை. ஆனா... அசிங்கமான வார்த்தையால் கொல்றாரு. நான் செத்துடணும் முரளி... செத்துடணும்.''

தலையைச் சேலைத் தலைப்பிற்குள் புதைத்து அழுதாள். மெதுவாய் அந்தத் தேம்பும் முதுகை நீவி விட வேண்டும் போலிருந்தது. ஒரு நிஜமான ஸ்பரிசம் போதும், மனம் ஆறுதலடைய.

முரளி எழுந்தான். இனிமேலும் இங்கிருந்தால் காயத்ரிக்கு ஆறுதல் சொல்ல நேரிடும். விபரீதமாய் அது முடியக் கூடும். கசப்பான முடிவிற்காக ஆரம்பத்தைத் தவிர்த்து விடுவது நல்லது.

''நான் கிளம்பறேன் காயத்ரி.''

''ஒரு வாய் காப்பி குடிச்சிட்டுப் போங்களேன்... ப்ளீஸ்.''

மறுக்க மனசில்லை.

காயத்ரி காப்பி போட்டுக் கொண்டிருக்க முரளி தொட்டிலை எட்டிப் பார்த்தான். சுருண்டு கிடந்து தூங்கிக் கொண்டிருந்தது குழந்தை. சின்னக் காயத்ரி.

இந்த காயத்ரியும் வளர்ந்து காதலிப்பாளா? காதல் மறுக்கப்பட்டு வேறு இடத்தில் கல்யாணம் செய்து கொண்டு புருஷனால் வதைக்கப்படுவாளா?

இவள் தகப்பன் இவள் காதலைப் புரிந்து கொள்வானா? இவளைப் புரிந்து கொள்வானா? மாட்டான். பரணீதரன் புரிந்து கொள்ள மாட்டான். இன்னொரு காயத்ரி உருவாகக் காரணமாய் இருப்பான்.

''காப்பி இந்தாங்க.''

''குழந்தை பேர் என்ன காயத்ரி?''

''துளசி.''

முரளி காப்பியை உள்ளிழுத்தான். சீனி தொண்டைக்குள் இனிப்பாய்ப் பரவியது. சூடு மங்கிப் போய் நாக்கில் இனிப்பு தங்கியது.

''காயத்ரி...''

''உம்... சீனி இன்னும் வேணுமா?''

''ம்ஹூம். அதில்லே...''

பின்ன என்ன முரளி... பால் இன்னமும் சேர்க்கணுமா?''

முரளி அவளையே உற்றுப் பார்த்தான். தம்ளரை மேஜை மேல் வைத்து விட்டு அவள் கையைப் பற்றினான்.

''என் கூட வந்துடறியா காயத்ரி... நிஜமாக் கேக்கறேன். சத்தியமாக் கேக்கறேன்.''

''மு...ரளி... நான்...''

''யோசி காயத்ரி, நல்லா யோசி. உன் குழந்தைக்கு நல்ல தகப்பன் தேவை. உனக்கு நல்ல புருஷன் தேவை. வா, காயத்ரி, வந்திடு...''



காயத்ரி அரை மணி நேரம் சோபாவில் சாய்ந்து கிடந்து யோசித்தாள். முரளி நியூஸ் பேப்பர் வாசித்தான்.

அரை மணி நேரம் கழித்துக் காயத்ரி தெளிந்து போய் எழுந்தாள்.

''முரளி...''


''என்ன காயத்ரி?''

'நான் வர்றேன். உங்க கூட வர்றேன்.''

அடுத்த நாள் சாயங்காலம் முரளியின் சிநேகிதன் ரவியின் கடையில் சந்திப்பதாய் முடிவு செய்யப்பட்ட போது காயத்ரியின் மனசை விட்டு அழுத்தமாய் விலகியிருந்தது

—பரணீதரன் கட்டிய தாலி.

நாலு மணி ஆகப் பதினைந்து நிமி



டங்கள் இருந்தன. நாலு மணிக்கு ரவியின் கடைக்குக் காயத்ரி வந்து அங்கிருந்து கிளம் புவதாய் ஏற்பாடு.

முரளி கடை வாசலில் நின்று தெருவைப் பார்த்தான். காயத்ரி வருவாளா? பரணி தரனுக்குத் துரோகம் செய்யக் கூடாது என்று திடீரென்று தோன்றி வராமல் இருந்து விடுவாளோ? இல்லை, வருவாள். நிச்சயம் வருவாள்.

காயத்ரி நிறையக் கஷ்டப்பட்டிருக்கிறாள் — பரணிதரனால். அவன் அடிகளினால், வார்த்தைகளினால்,நிச்சயம் வருவாள். ஒரு சுதந்திர வாழ்க்கையில் காலூன்றக் கட்டாயம் வருவாள்.

கல்லாவில் உட்கார்ந்திருந்த ரவி சந் தேகமாய்ப் பார்த்தான்.

''என்னாச்சுடா... சுத்திச் சுத்தி வர்றே?''

''ஒண்ணுமில்லே.... சும்மா....''

அவசர அவசரமாய் ஒரு பெண் வியர்க்க விறுவிறுக்க ஓடிவந்தாள். உடம்பு முழுக்கப் பதற்றம் இருந்தது.

''ஒரு ஃபோன் பண்ணிக்கலாமா ஸார்?''

''லோக்கல்தானே?''

''ம்... டவுனுக்குத்தான்...''

ரவி அவள் பக்கமாய் டெலிபோனை நகர்த்தி வைத்தான். அந்தப் பெண் பதற்ற மாய் நம்பரைச் சுழற்றினாள்.

''ஹலோ... கவிதா ஏஜென்சியா? கொஞ்சம் அக்கவுண்ட் செக்ஷன் ஆபீச ரைக் கூப்பிட முடியுமா?''

அவரைக் கூப்பிட ஆள் போயிருக்கும் போல. இவள் நகம் கடிக்க ஆரம்பித்தாள். ஈரம் பாய்ந்த நெற்றியைத் துடைத்தாள். எல்லாம் அவசரம், அவசரம்.

''ஹலோ... நான் ராஜம் பேசறேன். வந்து... நம்ம அரவிந்த் மரத்துலருந்து விழுந்து பயங்கர அடிங்க. தலைல நாலு ஸ்டிக்கர்ஸ். கை காலுல ப்ராக்சர்.''

குரல் ரப்பராய் இழுபட்டு நாலு பேர் சுற்றி இருக்கிறார்கள் என்கிற பிரக்ஞை யின்றி அழுதாள். கஷ்டப்பட்டு அழுகையை அடக்கிக் கொண்டு திரும்பப் பேசினாள்.

''ஆஸ்பத்திரியில சேர்த்திருக்குங்க. மணி தான் சேர்த்தான். உடனடியா வாங்க. எனக்குப் பதறுது. மயக்கத்தில அரவிந்த் 'அப்பா, அப்பா'ன்னு புலம்பிக்கிட்டிருக் கான்....''

''......''

''வேலையை அப்புறம் பார்த்துக்கோங்க.. ப்ளீஸ்... ஆடிட்டிங்னா வேறே ஆள் கிட்ட ஒப்படைக்க முடியாதா? வந்திடுங்க... ஆயிரம் தான் உங்க தம்பி, என் தம்பின்னு உறவு இருந்தாலும் அரவிந்துக்கு அவன் அப்பா கூட இருந்தா வர்ற பலம் வரா துங்க.''

எதிர்முனையில் கணவன் ரொம்ப நேரம் பேசியிருப்பான் போல். கடைசியாய் முகம் மலர்ந்தாள். அழுகை மறந்து போய்ச் சந்தோஷமாய்ச் சிரித்தாள்.

''வர்றீங்களா.... நான் காத்திருக்கேன். ஆஸ்பத்திரி வாசல்லேயே காத்திருக்கேன்.''

போனை வைத்து விட்டுக் கசங்கின இரண்டு ரூபாய்த் தாளை ரவியிடம் நீட்டி னாள். புடைவைத் தலைப்பால் முகம் துடைத்துக் கொண்டு அவசர அவசரமாய்ப் படியிறங்கினாள்.

முரளி வாசலுக்கு வந்து அவள் மறைவ தையே பார்த்தான்.

'ஆயிரம்தான் உங்க தம்பி, என் தம்பின்னு உறவு இருந்தாலும் அரவிந்துக்கு அவன் அப்பா கூட இருந்தா வர்ற பலம் வராதுங்க.'

காயத்ரிக்கு வேண்டுமானால் நான் பலமாய் இருக்கலாம். துளசிக்கு முகம் தெரிந்ததில் இருந்து பரணிதரன்தான் தகப்பன். பிறந்ததில் இருந்து அதன் மூளை யில் பரணிதரன் உருவம்தான் தகப்பன் ஸ்தானத்தில் பதிந்திருக்கும். அந்த உருவம் மாறினால் நிச்சயம் அது கஷ்டப்படும். 'யார் நிஜத் தகப்பன்' என்று மனமொடியச் சங்கடப்படும்.

நான் வேறொருத்தரை என் தகப்பனாய் ஏற்றுக் கொள்வேனா? மாட்டேன். என் னால் முடியாது.

துளசிக்கு ஒரு நல்ல தகப்பன் இல்லாமல் போகலாம். அது சமூக விரோதமல்ல; 'ஓடிப் போனவளின் மகள்' என்று பேர் வரக் கூடாது. அது அவள் வருங்காலத்துக்கு நல்ல தில்லை. ஒரு நல்ல தகப்பன் மகளுக்குத் தப்பான பெயர் வர விட மாட்டான். நான் நல்ல தகப்பன். துளசிக்கு அவப்பெயர் வர விட மாட்டேன்.

பக்கத்தில் உள்ளவர்கள் தடுத்ததால் காயத் ரியை அடிப்பதை நிறுத்தின பரணிதரன் இனி அவளை மனத்தளவிலும் கொடுமைப் படுத்துவதை நிறுத்தும் காலம் வரலாம். துளசியைப் புரிந்து வாழும் நல்ல தகப்ப னாய் மாறலாம்.

மாறும் வரை காயத்ரியும் துளசியும் போரிட வேண்டும். யதார்த்தப் போர் புரிய வேண்டும்.

முரளி எழுந்தான். கல்லாவில் இருந்த ரவியைத் தனியாய்க் கூப்பிட்டான்.


''என்னடா?''

முரளி அவன் கண்களை உற்றுப் பார்த் தான்.

''ஒரு பொண்ணு குழந்தையோட இங்கே வந்து, 'முரளி இருக்காரா?'ன்னு கேட்டா, 'அவன் பாம்பே போயிட்டான். இனிமே வர மாட்டானாம்'னு சொல்லிடு. அவளைத் திரும்பிப் போகச் சொல்லிடு ரவி.''

''ஏதும் தப்புக் காரியம் இல்லையே?''

''தப்புக் காரியத்தைத் தடுத்து நிறுத்துற காரியம் ரவி....'' என்றான் முரளி.


CALCUTTA MADRAS
BOMBAY

தனிநபரைச் சார்ந்திராத கம்யூனிஸ்ட் கட்சிகள்...

ஏந்த ஓர் அரசியல் கட்சியும் ஒரு தனி நபரைச் சார்ந்து இருக்கக் கூடாது. துரதிர்ஷ்டவசமாக இந்தியாவிலும், குறிப்பாகத் தமிழ் நாட்டிலும் தனிநபர்களைச் சுற்றியே அரசியல் களன் அமைக்கப்படுகிறது. விதிவிலக்காக இருப்பவை கம்யூ



னிஸ்ட் கட்சிகள். விவாதம், கூட்டு முடிவு, கூட்டுச் செயல்பாடு என்ற அமைப்பு நிலைபாடுகளில் செயல்படுபவை அவை.

சொந்த வாழ்வில் எளிமையைப் பின்பற்றுகிற, மாற்றுக் கருத்துகளுக்கும் மதிப்பளிக்கிற, கூரிய மதி நுட்பம் வாய்ந்த, ஐம்பதாண்டு கால அரசியல் செறிவுடைய, மாணவர் பருவத்தில் சுதந்திரப் போராட்ட வேள்வியில் ஈடுபட்ட காரணத்திற்காக அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலிருந்து விலக்கப்பட்ட, ஒரு தேனீர் குடிப்பதென்றால் கூடத் தம் சொந்தச் செலவிலேயே குடிக்க விரும்பும் பெரும்பாங்குடைய, மாசுமருவற்ற மாணிக்கம் (இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தமிழ் மாநிலக் குழுச் செயலாளர் தோழர் ப. மாணிக்கம்) தமிழக முதல்வராய் வர வேண்டும் என்பது என் பேரவா.

— இரா. பூபதி, பள்ளத்தூர் — 623 107.

இவர்தான் முதல்வர்:

மாநில அளவில் மார்க் சிஸ்ட்கள் ஆட்சிக்கு வருவதால் குறைந்தபட்சம் கீழ்க்கண்ட மக்கள் நலன் திட்டங்களை நிச்சயம் நிறைவேற்றுவார்கள்.

1. எல்லோருக்கும் கட்டாயக் கல்வி.
2. வேலை கிடைக்காதவர்களுக்கு உதவித் தொகை.
3. உண்மையான கிராமப்புற ஜனநாயகம்.
4. கிராமப்புற ஏழை மக்களுக்கு வேலை வாய்ப்புத் திட்டங்களை ஏற்படுத்தி, வேலைக்குக் கூலியாகப் பண்மும் அரிசியும் வழங்குதல்.
5. மகளிர்க்குச் சம உரிமை.
6. ரேஷன் முறைகளை முறைப்படுத்திக் கிராமப்புறங்களுக்கும் விஸ்தரித்தல்.
7. கிராமப்புறத்தில் கைத் தொழில்களை உருவாக்கி, அவர்களின் வாங்கும் சக்தியை அதிகரித்தல்.
8. நில உச்ச வரம்பில் வராத நிலங்களைப் பறித்து, நிலமற்ற ஏழை மக்களுக்கு வழங்குதல்.



9. உழுபவனுக்கே நிலத்தைச் சொந்தமாக்குதல்.
10. தொழிலாளர்களின் நலன்கள் பாதிக்காமல் காத்தல்.


நல்லசிவம் கவர்ச்சித் தலைவர் அல்லர். சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டு அரசியலுக்கு வந்தவர். தொழிலாளருக்காகவும் விவசாயிகளுக்காகவும் நடந்த போராட்டங்களை முன்னின்று நடத்தியவர். பஞ்சாலையில் தமது தொழிற் சங்க வாழ்வைத் துவக்கியவர். பலமுறை சிறை சென்றவர். இதுவரை, தமது சொந்த வாழ்விலும் பொது வாழ்விலும் எந்தவிதமான குற்றச் சாட்டுக்கும் ஆளாகாத தூய்மையாளர். கட்சிக் கொள்கையில் பிடிப்பும் சமுதாய மாற்றத்தில் அக்கறையும் கொண்ட இவரே முதலமைச்சராக வரவேண்டும் என்று விரும்புகிறேன்.

— ஆர். ராஜாராம், சென்னை — 91.

படங்கள்: சுபா



Colour Transparency: YOGA



டீ உலகில் உயர் வட்டம்

சக்கரா டீ

உயர் வகுப்பினர் பாராட்டும்
தேநீர்ச் செல்வம் சக்கரா டீ.
சொகுசான சுவைமண, திட
குணங்களின் முழுமை
வட்டம். தேநீரிலே
சுக போகத்தின் உயர்
வட்டம்: சக்கரா டீ.

உயர் வட்ட ரசிகர்களுக்கு
உயர் வளமுள்ள தேயிலை

சக்கரா டீ



டாட்டா டீ லிமிடெட்

உலகிலேயே மிகப்பெரிய டீ கம்பெனி.

daCunha/TT/246/87/TM

பொன்னியின் செல்வன்

அத்தியாயம் 23

வானதி

கொடும்பாளூர் இளவரசியின் அழகை வர்ணிக்கும்படி கவிஞர்களைக் கேட்டால், அவர்கள் அந்த மங்கை நல்லாளின் அழகை அந்தி மாலையின் சௌந்தரியத்துக்கு ஒப்பிடுவார்கள். பகற் பொழுது சென்று மாலை மங்கி வரும் போது மனத்தில் ஒரு சோகமும் ஏற்படுகிறது; கூட ஓர் அமைதியான இன்பமும் தோன்றுகிறது. ஆதவனின் இறுதிக் கிரணங்கள் மெலிந்து மறைந்த பிறகு இரவின் இருள் நாலாபுறமும் கவிந்து வருகிறது. இதனால் மனத்தில் தோன்றும் சோர்வைப் போக்கிக் கொள்வதற்கு வானத்தை நோக்கினால் போதும். கண்ணிமைக்கும் நேரத்தில் வானமாதேவி ஏற்றி வைக்கும் கோடானு கோடிச் சுடர் விளக்குகள் எவ்வளவு ஆனந்தத்தை அளிக்கின்றன! சூரியனுடைய தகிக்கும் ஜோதியைப் போல் அவை கண்களைச் கூசச் செய்வதில்லையே? கண்களால் அவற்றைப் பார்த்து இன்புறலாமே? சந்திரனும் உதயமாகி விட்டாலோ, கேட்க வேண்டியதில்லை. முத்துச் சுடர் போன்ற முழுமதியின் நிலவில் உலகம் பூரிக்கின்றது; உள்ளமும் உடலும் பூரிக்கின்றன. மாலை வந்ததும் தாமரைகள் கூம்புவது என்னவோ உண்மைதான். ஆனால் விண்மீன்களுடன் போட்டியிடுவது போல் மல்லிகை மொட்டுக்கள் வெடித்து மலர்ந்து அவற்றின் நறுமணத்தினால் வானமும் பூமியும் போதை கொள்கின்றனவல்லவா?

அஸ்தமித்ததும் பட்சிகளின் குதூகலத்வனிகள் ஓய்ந்து விடுகின்றன என்பது உண்மைதான். ஆனால், அதோ தேவாலயத்திலிருந்து வரும் சேமக்கலைச் சத்தமும் நாதஸ்வர வாத்தியத்தின் இன்னிசையும் இப்போது எவ்வளவு மதுரமாயிருக்கின்றன! மணிமாடங்களின் மீதிருந்து மென்மையான விரல்கள் மீட்டும் வீணையும் யாழும் எத்தகைய இன்ப கீதத்தை எழுப்புகின்றன!

கொடும்பாளூர் இளவரசி வானதி

அமரர் கல்கி


யின் அழகில் இப்படியே சோகத்தின் சாயலும் களிப்பின் மெருகும் இனம் தெரியாதபடி கலந்து போயிருந்தன. அழகுக்கு ஒத்தபடி அவளுடைய சுபாவமும் இருவகைப்பட்டு இருந்தது. ஒரு சமயம் அவளைப் பார்த்தால் துயரமே உருக்கொண்ட சந்திரமதியையும் சாவித்திரியையும் போல் இருக்கும். இன்னொரு சமயம் பார்த்தால் அரம்பையும் ஊர்வசியும் தேவருலகில் இப்படித்தான் ஆடிப் பாடிக் கொண்டு இருந்திருப்பார்கள் என்று தோன்றும். கோவலனுடைய காதலில் களித்த மாதவியைப் போல் ஒரு சமயம் அவள் இன்ப உயிர்ச் சிலையாக விளங்குவாள். மற்றொரு சமயம் கணவனைப் பறி கொடுத்த கண்ணகியின் சோக வடிவம் இதுதானோ என்று கருதும்படி இருக்கும். ஒரு சமயம் மாலை வடிவேலவரின் மையலுக்கு உள்ளாகி இதயம் கலந்து நின்ற வள்ளியைப் போல் தோன்றுவாள். இன்னொரு சமயம் தேவலோகமெல்லாம் களிக்கூத்தாடும்படி கார்த்திகேயருக்கு மாலையிட்டு மகிழ்ந்த தேவயானை இவளேதான் என்று எண்ணி மகிழும்படி ஆனந்த உருவாகி விளங்குவாள்.


சேர்ந்தாற்போல் பல தினங்கள் வானதியின் முகத்தில் ஒரு சிறிய புன்னகையைக் கூடக் காண முடியாது. வேறு சில நாட்களில் அவள் ஓயாது சிரித்துக் கொண்டேயிருப்பாள். அந்தச் சிரிப்பின் ஒலி கோடானு கோடி நுண் துளிகளாகிக் காற்று வெளியில் கலந்து உலகத்தையே ஆனந்த பரவசப்படுத்தும்.

வானதியின் இத்தகைய இருவகைச் சுபாவத்துக்குக் காரணம், அவளுடைய பிறந்த வேளையும் வளர்ந்த காலமும் என்று ஊகிக்கலாம். அன்னையின் கர்ப்பத்தில் அவள் இருந்த போது கொடும்பாளூர் சிறிய வேளார் கொடிய போர்களில் ஈடுபட்டிருந்தார். வெற்றிச் செய்தியும் தோல்விச் செய்தியும் மாறி மாறி வந்து கொண்டிருந்தன. இவை அவளுடைய அன்னையின் உள்ளத்தில் களிப்பையும் துயரத்தையும் மாற்றி மாற்றி உண்டாக்கின. வானதி பிறந்த சில காலத்துக்குப் பிறகு அவளுடைய அன்னை காலமானாள். பிறகு, வானதியை அவளுடைய தந்தை கண்ணுக்குக் கண்ணாக வளர்த்து வந்தார். ஆனால் இதுவும் நீடித்திருக்கவில்லை. வீராதி வீரராகிய வானதியின் தந்தை அருமை மகளை முன்னிட்டுக் கூட அரண்மனையிலேயே உட்கார்ந்திருக்க விரும்பவில்லை. வீர பாண்டியன் ஓடி ஒளிந்த பிறகு, அவனுக்குத் துணை வந்த ஈழத்துப் படைகளைத் துரத்திக் கொண்டு இலங்கை சென்றார். அங்கே போர்க்களத்தில் உயிர் நீத்து, சரித்திரத்தில் 'ஈழத்துப் பட்ட சிறிய வேளார்' என்ற பட்டப் பெயர் பெற்றார்.

பின்னர், வானதியின் வாழ்க்கை சில காலம் ஒரே துயரமயமாயிருந்தது. தாயை இழந்து தகப்பனாரால் வளர்க்கப்பட்ட பெண்கள் தான் அந்தச் சோக உணர்ச்சி எத்தகையது என்பதை அறிய முடியும். பெற்றோரில்லாப் பெண் கொடும்பாளூர் அரண்மனையில் சீராட்டி வளர்க்கப்பட்டாலும் அவளுடைய உள்ளத்தில் தந்தை பெற்றிருந்த இடத்தை யாரும் பெற முடியவில்லை. அதற்குப் பலரும் பல விதமாக ஆறுதல் கூறினார்கள். "வருந்தாதே, குழந்தை! உன் தந்தை உன் வயிற்றில் வந்து மீண்டும் வீர மகனாகப் பிறப்பார். உலகம் வியக்கும்படியான அற்புத வீரச் செயல்களைப் புரிவார்!" என்று ஒருவர் கூறினார். இவ் வார்த்தைகள் வானதியின் உள்ளத்தில் ஆழ்ந்து பதிந்து வேரூன்றின. அருமைத் தந்தையைப் பிரிந்ததினால் ஏற்பட்ட துயரத்தையும் சோர்வையும் கற்பனை மகனைப் பற்றி எண்ணுவதிலே போக்கிக் கொள்ள முயன்றாள். அதில் ஓரளவு வெற்றியும் அடைந்தாள்.

தனக்குப் பிறக்கும் குமாரன் எப்படி எப்படி இருப்பான், எந்தெந்த மாதிரி நடப்பான், எத்தகைய வீரச் செயல்களைப் புரிவான் என்ற மனோ ராஜ்யத்தில் நாள் கணக்காக மூழ்கி விடுவாள். கற்ப





னைக் கண்ணின் மூலமாக, அந்த வீர மகன் தூர தூர தேசங்களுக்குச் சென்று மாபெரும் யுத்தங்களில் வெற்றி பெறுவதைப் பார்த்தாள். வேகமாகத் திரும்பி வந்து அவன் அடைந்த வெற்றியின் காணிக்கைகளையெல்லாம் தன்னுடைய காலடியில் சமர்ப்பிப்பதைப் பார்த்தாள். அவன் மணிமுடி தரித்து வீர சிம்மாசனத்தில் அமர்ந்திருப்பதைப் பார்த்தாள். ராஜாதி ராஜாக்கள் வந்து அவனுக்குக் கப்பம் கட்டி அடி பணிவதைப் பார்த்தாள். அவனுடைய திருமுகத்தைக் கண்டதும் ஜனத்திரள்கள் பூரண சந்திரனைக் கண்ட மாகடலைப் போல் பொங்கி எழுந்து அலை மோதி ஆரவாரிப்பதைப் பார்த்தாள். நூறு நூறு கப்பல்களில் வீரர்களை ஏற்றிக் கொண்டு அவன் கடல்களைக் கடந்து சென்று அப்பாலுள்ள நாடுகளிலே வெற்றிக் கொடி நாட்டுவதைப் பார்த்தாள். "அன்னையே! நான் அடைந்துள்ள இத்தனை பெருமைக்கும் காரணம் நீயே அல்லவோ!" என்று தன்னிடம் அடிக்கடி அவ் வீர மகன் வந்து கூறுவதையும் கேட்டாள்.

அந்த அறியாத பேதைப் பெண் சில சமயம் தன் ஆலிலை வயிற்றைத் தொட்டுத் தடவிப் பார்த்துக் கொள்வாள். தன் கற்பனை மகன் ஒருவேளை வயிற்றில் வந்து விட்டானோ என்றுதான். பழந்தமிழ் நாட்டில் ஆண்கள், பெண்கள் அனைவரும், பாரதக் கதையைக் கேட்டு அறிந்திருந்தார்கள். குந்தி தேவி குழந்தை பெற்ற விதத்தைப் பற்றியும் கேட்டிருந்தார்கள். அதுபோல், எந்தத் தெய்வம் வந்து தனக்குக் குழந்தை வரம் கொடுக்கப்

போகிறது என்று எண்ணி எண்ணி அவள் வியப்பதுண்டு. அப்போதெல்லாம் யாரையும் மணந்துகொள்வதைப் பற்றியே அவள் எண்ணவில்லை. வயது வந்த பிறகு, உலகம் ஓரளவு தெரிந்த பிறகு, கணவன் ஒருவனை மணந்தேயாக வேண்டும் என்றும், அவன் மூலமாகவே குழந்தைப் பேற்றை அடைய வேண்டும் என்றும் அறிந்தாள். அப்போதும் கணவனைப் பற்றி அதிகமாக மனோராஜ்யம் செய்யவில்லை.

பழையாறை அரண்மனைக்குப் போன பிறகு அவளுடைய வாழ்க்கையிலும் மனப்போக்கிலும் மாறுதல் ஏற்பட்டது. குந்தவை தேவியின் பெருமிதம் கலந்த அன்பு அவளுக்கு ஆறுதலும், குதூகலமும் அளித்தன. குந்தவையின் நாகரிக நடை உடை பாவனைகளும் சாதுர்யப் பேச்சுக்களும் வானதியை அவள் இதுவரை அறியாத வேறொரு உலகத்துக்குக் கொண்டு போயின. அவளைப் போலவே பழையாறை அரண்மனைக்கு வந்திருந்த மற்ற அரசகுலப் பெண்களின் அசூயை அவளுக்கு வாழ்க்கையில் ஒரு புதிய ஆர்வத்தை



உண்டாக்கியது. அவர்கள் அசூயைப் படும்படியாகத் தன்னிடம் ஏதோ மகிமை இருக்க வேண்டும் என்று அவளுடைய உள் மனம் உணர்த்தியது. அதே சமயத்தில் அவளுடன் இயற்கையாகப் பிறந்த இனிய சுபாவமும் பெருந்தன்மையும் எல்லாருடனும் நல்லபடியாக நடந்து கொள்ள அவளைத் தூண்டியது. இத்தனைக்கும் நடுவில் வானதி தனக்குப் பிறக்கப்போகும் வீர மகனைப் பற்றி இன்பக் கனவு காண்பதை மட்டும் விட்டு விடவில்லை.

இதற்கிடையிலே தான் அவள் பொன்னியின் செல்வரைப் பார்க்கும்படி நேர்ந்தது. அதன் பலனாக அவளுடைய மனக்கோட்டைகள் எல்லாம் பொல பொல என்று தகர்ந்து விழுந்தன. கணவனை அடைந்த பின்னர்தான் மகனைப் பெற முடியும் என்று அவள் அறிந்திருந்தாள். கணவன் யாராயிருந்தாலும், எப்படிப்பட்டவனாயிருந்தாலும் சரிதான் என்ற அலட்சியப் பான்மை அதற்கு முன்பு அவள் அடி உள்ளத்தில் இருந்தது. ஆனால், இந்தப் பொல்லாத மனத்தை என்ன செய்வது? இது சோழ நாட்டு மக்களின் கண்ணுக்குக் கண்ணான இளவரசரிடமல்லவா போய் விட்டது! ஐம்பத்தாறு தேசத்து மன்னர்களும் 'என் பெண்ணை மணந்து கொள்!' என்று கெஞ்சிக் கூத்தாடக் கூடிய பெருமை வாய்ந்தவர் அல்லவா அவர்! அத்தகையவர் தன்னைத் திரும்பியும் பார்ப்பாரா? அவரை மணந்து கொள்ளும் பாக்கியத்தைப் பற்றி அவளால் கனவுகூடக் காண முடியாதே? இளவரசரிடம் இந்தப் பேதை மனம் சென்ற பிறகு, இன்னொருவரை மணந்து கொள்வதுதான் எப்படிச் சாத்தியம்! ஆகையால், தன் வயிற்றில் பிறக்கப் போகிற வீர குமாரனைப் பற்றி இத்தனை காலமும் அவள் கட்டிவந்த மனக் கோட்டைகள் எல்லாம் சிதறிப் போகத்தானே வேண்டும்? இதையெல்லாம் நினைக்க நினைக்க, அவளுடைய உள்ளம் வெடித்து விடும் போலிருந்தது. மறுபடியும் பழையபடி சோக வடிவமானாள். அவளுடைய மனத்தை அறிந்து கொண்ட இளையபிராட்டி அவளிடம் விசேஷ அன்பும் ஆதரவும் காட்டினாள். தன்னாலியன்ற வரையில் வானதியை உற்சாகப்படுத்த முயன்றாள். பொன்னியின் செல்வரிடம் அவளுடைய உள்ளம் சென்றது அப்படியொன்றும் பிசகான விஷயமில்லையென்றும், நடக்க முடியாத காரியமும் அல்லவென்றும் குறிப்பாக உணர்த்தி வந்தாள். குடந்தை ஜோதிடர் வானதிக்குப் பிறக்கப் போகும் மகனைப் பற்றிக் கூறியது அவளுடைய உள்ளக் கனலுக்குத் தூபம் போட்டு வளர்த்தது. அவளுடைய மனோ ராஜ்யம் மேலும் விரிவடைந்து கொண்டே வந்தது. மனச்சோர்வும் குதூகலமும் மேலும் துரிதமாக மாறி மாறி ஏற்பட்டன. ஏக்கத்தினால் ஏற்பட்ட மனவேதனை பொறுக்க முடியாமலிருந்தது போல், மகிழ்ச்சியினால் ஏற்பட்ட கிளர்ச்சியையும் அவளால் சகித்துக் கொள்ள முடியவில்லை. இரண்டும் மிதமிஞ்சிப் போன போது மயக்கம் போட்டு விழுந்தாள்; இயற்கை அருளிய இந்த மயக்க மருந்து சாதனத்தினால் அவள் த்ன் உயிரைக் காப்பாற்றிக் கொண்டு வந்தாள்.

தஞ்சைக்குச் சென்றிருந்த போது, வானதி பார்த்த பராந்தகச் சக்கரவர்த்தி நாடகமும், அன்றிரவு அவள் கேட்ட அபயக் குரலும் கண்ட பயங்கரக் காட்சியும் அவளுடைய மனக் குழப்பத்தை அதிகமாக்கின. கொடும்பாளூர் வம்சத்துக்கும் பழுவூர் சிற்றரசர் குலத்துக்கும் ஏற்பட்டிருந்த தீராத பகையின் அளவை அவள் அன்று நன்கு அறிந்து கொண்டாள். பழுவூர்க்காரர்கள் சோழ நாட்டில் அப்போது அடைந்திருந்த செல்வாக்கின் அளவையும் தெரிந்து கொண்டாள். இளவரசர் அருள்மொழிவர்மர் விஷயத்தில் தன் மனோரதம் ஈடேறப் பழுவேட்டரையர்கள் அனுமதிப்பார்களா? அவர்கள் அனுமதித்தாலும் அவர்கள் வீட்டுப் பெண்கள் சும்மா யிருப்பார்களா? பழுவூர் இளைய

ராணி சம்மதிப்பாளா? அவளுடைய செல்வாக்கும் சக்தியும் உலகம் அறிந்தவை. நந்தினியை நினைக்கும்போதெல்லாம் அழகிய நாகப்பாம்பின் நினைவு வானதிக்கு வந்தது. இளைய பிராட்டியின் பேரில் அவளுடைய பகைமையைப் பற்றி அறிந்து கொண்டிருந்தாள். அது தன் பேரிலும் பாயும் அல்லவா? ஏன்? பொன்னியின் செல்வரையே அந்த விஷ நாகம் தீண்டினாலும் தீண்டக்கூடும்! நள்ளிரவில், நோயாகப் படுத்திருக்கும் சக்கரவர்த்தியின் முன்னால் நந்தினியையொத்த வடிவம் ஒன்று நின்றதே! அது உண்மையில் நந்தினிதானா? சக்கரவர்த்தி அப்படியெல்லாம் பீதி நிறைந்த குரலில் ஓலமிட்ட காரணம் என்ன? இளைய பிராட்டி இதைப் பற்றியெல்லாம் ஏன் தன்னிடம் எதுவும் பேசுவதற்கு மறுக்கிறாள்! ஆமாம்! இளைய பிராட்டியின் மனமும் மாறிப் போயிருக்கிறது. தன்னிடம் முன்னெல்லாம் போல் அவ்வளவு கலகலப்பாகப் பேசுவதில்லை. அடிக்கடி தன்னை விட்டு விட்டுத் தனிமையை நாடிப் போய் விடுகிறார். அவரை ஏதோ பெருங் கவலை பீடித்திருக்கிறது. ஒருவேளை பொன்னியின் செல்வரைப் பற்றிய கவலைதானோ என்னவோ? அதனாலேதான் தன்னிடம் அதைப் பற்றிச் சொல்வதற்கு மறுக்கிறார் போலும்!

என்றைக்குக் கூடத் திடீரென்று இளைய பிராட்டி காணாமற் போய் விட்டார். அவர் இல்லாத சமயங்களில் இந்தப் பெண்கள் என்ன பாடு படுத்துகிறார்கள்? என்ன கொட்டம் அடிக்கிறார்கள்? கவலையென்பதை அறியாதவர்கள். எது எப்படிப் போனாலும் அவர்களுடைய கொம்மாளத்துக்குக் குறைவு ஒன்றும் கிடையாது. அவர்களுடைய கேலிப் பேச்சுக்களை வானதியினால் எப்போதுமே சகித்துக் கொள்ள முடிவதில்லை. அதுவும் இந்த இரண்டு மூன்று தினங்களாக ஒரே சோகக் கடலில் வானதி ஆழ்ந்திருந்தபடியால் அவர்களுடைய வீண் பேச்சுக்கள் அவளுடைய காதில் நாராசமாக விழுந்தன. இளைய பிராட்டி எங்கே தான் போயிருப்பார் என்று தேடிக் கொண்டு புறப்பட்டாள். மூத்த மகாராணியின் அரண்மனையில் ஏதோ சபை கூடியிருக்கிறதென்றும் அங்கே போயிருக்கிறார் என்றும் தெரிந்து கொண்டாள். ஆகையால் அந்த அரண்மனைக்குச் சென்றாள். வானதி போவதற்குள் அங்கே சபை கலைந்து விட்டது. பெரிய மகாராணியும் அவருடைய செல்வப் புதல்வர் மதுராந்தகரும் அந்தரங்கமாகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்று அறிந்தாள். எதனாலோ இந்தச் செய்தி வானதிக்கு மேலும் கவலையை உண்டாக்கியது. அங்கிருந்து மறுபடியும் புறப்பட்டாள். அரண்மனை வாசலில் ஜனத்திரளின் பெரும் இரைச்சல் கேட்டது. விஷயம் இன்னதென்று தெரியவில்லை. இளையபிராட்டியை உடனே பார்க்க வேண்டும் என்ற ஆர்வம் மிகுந்தது. அரண்மனையில் சேடிப் பெண்களை ஒவ்வொருத்தியாக விசாரித்தாள். சற்று முன்னால் ஆழ்வார்க்கடியான் என்னும் வீர வைஷ்ணவனுடன் இளைய பிராட்டி அந்தரங்கமாகப் பேசிக் கொண்டிருந்ததாகவும், பிறகு அரண்மனைத் தோட்டத்து ஓடையை நோக்கிச் சென்றதாகவும் ஒரு சேடி கூறினாள். இளைய பிராட்டி தனிமையை நாடிச் செல்லும் சமயங்களில் யாரும் வந்து தொந்தரவு செய்வதை இப்போதெல்லாம் அவர் விரும்புவதில்லை. ஆகையால் ஓடைப் பக்கம் இளையபிராட்டியைத் தேடிக் கொண்டு போகலாமா வேண்டாமா என்று வானதி தயங்கினாள். அச்சமயம் வாரிணி என்னும் மங்கை ஓட்டமாக ஓடி வந்தாள். "பொன்னியின் செல்வர் கடலில் மூழ்கி விட்டாராம்!" என்ற பயங்கரச் செய்தியைச் சொல்லிவிட்டு அலறி அழுதாள். மற்றப் பெண்களும் இதைக் கேட்டு ஓவென்று கதறத் தொடங்கினார்கள். வானதிக்கோ முதலில் எவ்வித உணர்ச்சியும் உண்டாகவில்லை. சும்மா நின்றவளை மற்றப் பெண்கள் உற்று நோக்கினார்கள்.

"அடி பாவி! உன்னுடைய துரதிர்ஷ்டத்தினால்தான் இளவரசர் கடலில் மூழ்கினார்!" என்று அவ்வளவு கண்களும் அவளை நோக்கி இடித்துச் சொல்லுவது போல் காணப்பட்டது. வானதியினால் அதற்கு மேல் பொறுக்க முடியவில்லை. அங்கு நிற்கவும் முடியவில்லை. அரண்மனைத் தோட்டத்து ஓடையை நோக்கி ஓடினாள்.

ஓடையை நோக்கி ஓடிக் கொண்டிருந்த போது வானதியின் உள்ளமும் ஓடிக் கொண்டிருந்தது. "இளவரசர் கடலில் மூழ்கி விட்டார்!" என்ற வார்த்தைகளின் பொருள் அவளுக்கு விளங்கியது. அதனால் ஏற்பட்ட அதிர்ச்சியை மீறிக் கொண்டு மற்றோர் எண்ணம் மேலெழுந்தது. சென்ற சில தினங்களாகத் தண்ணீரைப் பார்க்கும்போதெல்லாம் அதில் இளவரசரின் முகம் பிரதிபலித்துக் கொண்டிருந்தது. கரையில் நின்று பார்க்கும்போதெல்லாம் அவருடைய முகம் தத்ரூபமாகத் தண்ணீரில் தோன்றும். தொடுவதற்குப் போனால் மறைந்து விடும். அதன் காரணம் என்னவென்பது வானதிக்குப் புலனாயிற்று. இளவரசர் கடலில் முழுகிய போது என்னை நினைத்துக் கொண்டிருக்கிறார். என்னை அழைத்துமிருக்கிறார். அதை அறியாமல் பாவி நான் கரையிலேயே நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தேன்! ஆஹா! என்ன தவறு செய்து விட்டேன்! போனதை நினைப்பதில் இனிப் பயனில்லை. இனிச் செய்ய வேண்டியது என்ன? பேதைப் பெண்ணே! இனிச் செய்ய வேண்டியதைப் பற்றி யோசிக்கவும் வேண்டுமா! யோசிப்பதற்கு என்ன இருக்கிறது? அரண்மனைத் தோட்டத்தையடுத்துள்ள ஓடை அரசலாற்றில் கலக்கிறது. அரசலாறு கடலில் போய்ச் சங்கமமாகிறது. கடலின் அடியில் காத்திருக்கிறார் இளவரசர். எனக்காகத்தான் காத்துக் கொண்டிருக்கிறார். கடலின் அடியில் முத்துக்களாலும் பவளங்களாலும் ஆன அற்புத மாளிகையில் எனக்காகக் காத்துக் கொண்டிருக்கிறார். அவரைச் சந்திக்கப் போகாமல் இந்த உலகத்தில் எனக்கு வேறு என்ன வேலை....? யாருக்காக இங்கே நான் இருக்க வேண்டும்.....?

இவ்வாறு வானதி தீர்மானம் செய்ததும் வானதியின் உள்ளத்தில் ஒருவித அமைதியே உண்டாகி விட்டது; அவளது பரபரப்பு அடங்கி விட்டது; துயரம் நீங்கி விட்டது; கவலை தீர்ந்து விட்டது.


நேரே ஓடைக் கரைக்குச் சென்றாள். பளிங்குக் கல்லினாலான படிக்கட்டுகளில் இறங்கி நின்றாள். சுற்று முற்றும் பார்த்தாள். அதோ தூரத்தில் படகு ஒன்று வருவது தெரிந்தது. அதில் இருப்பவர் இளைய பிராட்டிதான். அவருடன் இருக்கும் ஆடவன் யார்? குடந்தை ஜோதிடர் வீட்டில் முதலில் சந்தித்து, இலங்கைக்கு ஓலை எடுத்துச் சென்ற வாலிபன் போலத் தோன்றுகிறது. இளவரசரைப் பற்றிய செய்தியைக் கொண்டு வந்தவன் அவன்தான் போலும்! அதனாலேதான் அவனை இளைய பிராட்டி தனியாக அழைத்துப் போயிருக்கிறார். விவரங்களைக் கேட்டு அறிந்திருக்கிறார். எனக்குத் தெரிந்தால் கஷ்டப்படுவேன் என்று என்னை விட்டு விட்டுப் போயிருக்கிறார். அவர் வந்து விட்டால் என் இஷ்டப்படி செய்ய முடியாது. ஏதாவது சமாதானம் சொல்லப் பார்ப்பார்; ஆறுதல் கூறப் பார்ப்பார். நான் இளவரசரைப் போய்ச் சேர்வதைக் கட்டாயம் தடுத்து விடுவார். ஆனாலும் அவரிடம் சொல்லாமல், கடைசியாக ஒரு தடவை விடைபெற்றுக் கொள்ளாமல், போவது நியாயமா? தாய் தந்தையற்ற இந்த அனாதைப் பெண்ணிடம் இத்தனை அன்பாக இருந்தாரே! அவருக்கு ஒரு நன்றி வார்த்தையாவது சொல்ல வேண்டாமா....? முடியாது! முடியாது! இனி ஒரு கணமும் காத்திருக்க முடியாது! இதோ தண்ணீரில் அவர் முகம் தெரிகிறது! இதோ அவருடைய முழு உருவமும் பொலிகிறது. என்னை அவர் அழைக்கிறார்; புன்னகை செய்து கூப்

பிடுகிறார். "உன்னை நான் மணம் புரிந்து கொள்ளுவதற்கு எல்லாத் தடைகளும் நீங்கி விட்டன! வா!" என்று அழைக்கிறார். இன்னும் ஏன் தாமதம்?..... ஆகா! தலை ஏன் இப்படிச் சுற்றுகிறது? பாழும் மயக்கம் வருகிறதா, என்ன? மயக்கம் வந்தால் பாதகமில்லை. கரையில் விழாமல் இந்த ஓடைத் தண்ணீரில் விழுந்தால் போதும்!.....

வானதியின் மனோரதம் நிறைவேறியது. அவள் தண்ணீரிலேதான் விழுந்தாள். கொதித்துக் கொண்டிருந்த உடம்பு இனிதாகக் குளிர்ந்தது. இதயமும் குளிர்ந்தது. கீழே கீழே கீழே போய்க் கொண்டிருந்தாள். எத்தனை தூரம் எத்தனை காலம் போனாள் என்று சொல்ல முடியாது. சில வினாடி நேரமாகவும் இருக்கலாம்; நீண்ட பல யுகங்களாகவும் இருக்கலாம்.

ஆம்; கடலின் அடியிலுள்ள அற்புத லோகத்துக்கு அவள் வந்து விட்டாள். நாகலோகம் என்பது இதுதான் போலும்! ஆகா! எத்தகைய அழகிய மாளிகைகள்! எத்தனை அடுக்கு மெத்தைகள்! முடிவில்லாமல், சிகரம் எங்கே இருக்கிறதென்று தெரியாமல் அல்லவா, இம்மாளிகைகள் உயர்ந்து விளங்குகின்றன! இங்குள்ள வெளிச்சம் எதனால் இவ்வளவு குளிர்ந்து மனோ ரம்மியமாயிருக்கிறது? தண்ணீருக்குள் புகுந்து வருவதால் ஒளிக் கிரணங்களும் குளிர்ந்திருக்கின்றன போலும்! ஒளி எங்கிருந்து வருகிறது? மாளிகைச் சுவர்களிலிருந்தே வருகின்றது போலிருக்கிறது! ஆம், அதில் வியப்பில்லைதான்! தங்கத்தினாலும் முத்துக்களாலும் வைர வைடூரியங்களாலும் நாக சர்ப்பங்களின் சிரோ ரத்தினங்களாலும் ஆன விசித்திர மாட மாளிகைகள் குளிர்ந்த வெளிச்சத்தைப் பரப்புவது இயல்புதானே?

அதோ கூட்டமாக வருகிறவர்கள் யார்? அவர்களுடைய தேகங்கள் எப்படிக் காந்தி மயமாயிருக்கின்றன? முகங்களிலேதான் என்ன தேஜஸ்? இவர்களெல்லாம் தேவலோகத்து ஸ்திரீ புருஷர்களைப் போல் அல்லவா தோற்றமளிக்கிறார்கள்? நாம்



வந்திருப்பது ஒருவேளை நாகலோகமில்லையோ? தேவலோகத்துக்கு வந்து விட்டோமோ!.....

பிறகு, கனவுக்குள் ஒரு கனவைப் போல் சில நிகழ்ச்சிகள் அதிவேகமாக நடந்தேறின. சிங்கார அலங்காரங்கள் செய்யப்பட்டிருந்த மணி மண்டபம் ஒன்றுக்கு வானதியை அவர்கள் அழைத்துச் சென்றார்கள். மண்டபத்தின் மத்தியில் பொன்னியின் செல்வர் தமது பொன் முகத்தில் புன்னகை பொலிய நின்று வானதியை வரவேற்றார். தேவ துந்துபிகள் முழங்க, மணிகளும் மலர்களும் பொழிய, மங்கள கோஷங்கள் ஒலிக்க, இளவரசரும் வானதியும் மாலை மாற்றித் திருமணம் புரிந்து கொண்டார்கள். அந்த ஆனந்தத்தின் மிகுதியைத் தாங்க முடியாமல் வானதி மூர்ச்சையாகி விழுந்தாள். வெகு நேரம் நினைவின்றிக் கிடந்த பிறகு இரு கரங்கள் அவளைத் தூக்கி எடுத்தன. அக்கரங்கள் பொன்னியின் செல்வருடைய திருக் கரங்கள் என்று முதலில் வானதி கருதினாள். அவர் தான் தன்னைத் தூக்கி எடுத்து வாரி அணைத்து மடியில் போட்டுக் கொண்டு மூர்ச்சை தெளிவிக்கிறார் என்று எண்ணினாள். ஆனால் கைகளிலே வளையல்கள் தட்டுப்பட்டதும் சிறிது ஐயம் உதித்தது. "வானதி! வானதி! இப்படிச் செய்து விட்டாயே?" என்ற குரலும் பெண் குரலாக ஒலித்தது. மிக மிகப் பிரயத்தனம் செய்து வானதி சிறிதளவு கண்ணிமைகளைத் திறந்து பார்த்தாள். குந்தவையின் முகம் அவள் கண்ணில் பட்டது.

"அக்கா! அக்கா! என் கலியாணத்துக்கு நீங்கள் வந்திருந்தீர்களா? தங்களைக் காணவில்லையே?" என்று வானதியின் வாய் முணுமுணுத்தது.

நியூட்ரமுல்

ஒவ்வொரு
கோப்பையும் உரமூட்டும்



மிக நேர்த்தியான பால், மால்ட்,
கோக்கோ இவற்றின் சேர்க்கையே
போதும்...நியூட்ரமுல்



பரம்பரையின் சக்திக்கு!
நியூட்ரமுல் எல்லா
வீரர்களின் உடலும்
உள்ளமும் உரம்
பெற!

குஜராத் கோ-ஆபரேட்டிவ் மில்க்
மார்க்கெட்டிங் ஃபெட., லிட்.,
ஆனந்த்-388 001.

daCunha/GCM/147/88/TAM

மனசுக்குள் மத்தாப்பு.



முப்பத்தி நாலு.

உங்களைப் பொறுத்தவரை மேற்படி நம்பருக்கு என்ன முக்கியத்துவம் என்று புரியாமல் இருக்கலாம். ஆனால்...

முப்பத்தி நாலு என்று நம்பரிட்ட நோயாளியைத் தாய் போல் நினைத்துப் பராமரித்த டாக்டர் சரண்யாவைக் கேளுங்கள்! அதே நம்பரில் பிற்பாடு அட்மிட் ஆன பிரபுவை விசாரியுங்கள்; அப்புறம் புரியும்!

கதை பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் ஆரம்பித்து, பைத். ஆஸ்பத்திரியில் வணக்கம் போடுகிறது. காதலி கண்ணெதிரே மின்சாரத்தில் பொசுங்கியதால் பைத்தியமாகும் பிரபுதான் கதையின் அச்சாணி.

பிரபுவிடம் தேய்த்த பித்தளையின் பளபளப்பு. சைஸ் இடம் கொடுக்காத இளமைக் காட்சிகளில் முகத்தின் நைஸ் வைத்துச் சமாளிக்கிற பாங்கே பாங்கு. காதலித்து, டான்ஸ் ஆடி, பாட்டுப் பாடி, கடைசியில் புஸ்வாணம் ஆகும் லிஸி கொள்ளை அழகுதான். கொள்ளை இளமைதான். ஆனால் ஜன்னல் வழியே ரோட்டைப் பார்க்கும் போது, கடந்து போனவர் அளவே மனத்தில் பதிகிறார். காரணம், காதல் மெட்ராஸ் ஏரிகளைப் போல ஆழமே இல்லாததுதான். சரண்யா டாக்டர். சிகிச்சைக்கு வந்த நோயாளியைக் குணப்படுத்தும் சாக்கில் காதல் வலையைப் பின்னி அவரும் மாட்டிக் கொள்வது டாக்டர் தொழிலுக்கே ஒரு சொட்டேர்!

யப்பா, செந்தாமரையை நினைத்தாலே நடுங்குகிறது. காமிராவில் அகல லென்ஸ் போட்டு, அவர் கோபத்தை இவ்வளவு க்ளோஸப் ஆக்கியிருக்க வேண்டாம். சரியான முகட்டு அப்பா. அவரும் பைத். ஆஸ்பத். டாக்டர். ஷாக் வைத்தியர்.

கதை ஒருவாறு புரிந்திருக்கும்.

சில நைஸ் காட்சிகள்.

பைத்தியங்களின் வாராந்திரக் கூட்டம்.

'ஏதாவது வேணுமா? மினிமம் பத்துப் பேர் கேட்டால்தான் புதுசாக எதுவும் கொடுக்க முடியும்' என்று நர்ஸ் அறிக்கை விடுகிறார். பிரபுவுக்கு மியூஸிக் வேண்டும். அதற்காகச் சுற்றியுள்ள பைத்தியங்களையெல்லாம் கெஞ்சிக் கெஞ்சி அட்ஜஸ்ட் பண்ணித் தூக்கினால்கூட ஒன்பது பேர் தான். பத்தாவது ஆளுக்காகப் பிரபு பதறி, உதறி ஓடுவதைப் பார்த்து டாக்டர்களில் ஒருவரான சரத்பாபு கைதூக்கும் கட்டம்!

காதலியை அசத்த வேண்டும் என்பதற்காக, கேக் விற்பனை செய்யும் கடையில் அத்தனையிலும் தம் காதல் சேதியைப் பிரபு எழுதி வைக்கும் காட்சி!

அம்மாவின் இறந்த தினத்திற்காக மெழுகுவர்த்தி கேட்கும் மகனுக்காகப் பிரபு ஆஸ்பத்திரியை விட்டு ஓடிப்போய் வாங்கி வரும் ஸீன்!

ஜனகராஜ் குதிரைக் கனைப்பு டயலாக்கை வைத்துக் கொண்டு ஆடியன்ஸை அப்படியே அள்ளி இழுக்கிறார்.

சரத்பாபு கண்ணியத்தின் மறு பதிப்பு.

பாடல்கள் புதுமையில்லாவிட்டாலும் இனிமை.

கடைசி கடைசியாய்க் கதையில் ஓர் அதிர்ச்சி இருக்கிறது. சும்மா தூக்கி நிறுத்தும் ஜெர்க். எனவே......

பார்த்தால் தப்பில்லை.

— ஜெயமன்மதன்

கரையும் முகங்கள்

காப்பி கொண்டு வந்தார்கள். நல்ல சூடாக இருந்தது. அம்மா சூட்டோடு குடித்தாள். ஏற்கெனவே வியர்த்து வழிந்திருந்த பிடரிப் பக்கம் அதிகமாய் வியர்த்தது. தலை கலைந்து போய், கண்ணீர் ஒடிய கண்களாய் அம்மா இருந்தாள். வித்யா பக்கத்தில் இருந்தவர்களை எல்லாம் பார்த்தாள். சாந்தி பெரியம்மா, அவளுடைய மகள், சித்தி, இன்னும் நிறையத் தெரிந்த பெண்கள் எல்லாம் இருந்தார்கள். பெரியம்மா கூட்டத்தை விட்டுத் தள்ளி உட்கார்ந்து கொண்டு டர்க்கி டவலால் முகத்தைத் துடைத்துக் கொண்டிருந்தாள்.

இப்போதுதான் பிணத்தை எடுத்துப் போயிருந்தார்கள். இறந்து போனது சித்தப்பா. காலையில்தான் தந்தி வந்தது. விடியற்காலை நாலு மணிக்குத் தந்திக்காரர் வந்தார்.

வித்யாதான் கையெழுத்துப் போட்டுத் தந்தியை வாங்கினாள். அம்மா தந்தியைப் பார்த்த ரெண்டு நிமிஷத்திற்கு அழுதாள். முதல் பஸ் காலை நாலரைக்கு உண்டு என்பதால் உடனடியாகப் புறப்பட்டோம்.

முதல் பஸ் என்பதாலோ என்னவோ கூட்டமேயில்லை. இன்னமும் விடுபடாத இருள் எங்கும். தெருவெங்கும் பனி. டிரைவர் சீட்டு ஓரத்தில் சாய்ந்து கொண்டு சிகரெட் பிடித்துக் கொண்டு இருந்தார். புகை வளைய வளையமாய்ப் போனது. கழுத்தைச் சுற்றி மப்ளரைக் கட்டியிருந்தார். அம்மா, ராதா, வித்யா மூன்று பேருமே ஓடும் பஸ்ஸில் குலுங்கி விழாமல் இருக்க நடு சீட்டாய்ப் பார்த்து உட்கார்ந்தார்கள்.

அம்மா தலையைக் கலைத்து விட்டது போல ஆக்கிக் கொண்டாள். வித்யா சீட்டோரத்தில் உட்கார்ந்து கொண்டாள். சித்தப்பா சாவு பெரிய அதிர்ச்சியைக் கொடுக்கவில்லை. நேற்று வரைக்கும் அவரைத் திட்டிக் கொண்டு இருந்தார்கள், பாகம் பிரித்த போது அப்பாவை ஏமாற்றியவர் என்று.

ஒரு தரம் வீட்டில் வைத்து அப்பாவுக்கும், அவருக்கும் சண்டை வந்து அவர் அப்பாவை அடித்து விட்ட பிறகு, வீட்டுப் பக்கமே வருவது கிடையாது. அதற்கு முன்னால் வருவார். அவர் எங்களோடு பேசும் போது, எங்களோடு இருக்கும் போது அம்மா சொன்னபடி இவ்வளவு கொடுமைக்காரரா, ஏமாற்றுக்காரரா என்று சந்தேகம் வரும்.

ஆள் நல்ல உயரம். சீரான உடல்வாகு. சுருள் முடிகள். ஒரு காலத்தில் நல்ல அழகுடன் இருந்தார் என அம்மாவே சொல்லியிருக்கிறாள்.

'உடம்புன்னா... அப்படியொரு உடம்பு.. வெள்ளித் தட்டிலே வெயில் படுகிற மாதிரி ஒரு மினுமினுப்பு. குளிச்சுட்டு வந்தா... நிறம் சொட்டும்...' என்பார்கள்.

அம்மா பஸ் கிளம்பும் வரைக்கும் ஏதாவது ஒன்றைக் கேட்டுக் கொண்டேயிருந்தாள்.

"தோசை மாவை என்ன பண்ணினே? பின்னாடி ஜன்னல் தாழ் போட்டிருக்கா? எலி வந்தா சாமான் போயிரும்... பின்னாடி கதவைப் பூட்டியாச்சா? காலம் கெடக்கிற கெடப்பில கொள்ளை போகப் போவுது."

பஸ் கிளம்பி ஊருக்கு வெளியே வந்த போது, விடிய ஆரம்பித்திருந்தது. விடியலில் தான் ஊர் அழகாயிருந்தது. ஒரு திருப்பத்தில் பார்க்கும் போது கோவில் கோபுரம் மட்டும் தெரிந்தது. பாதித் தூரம் போன பின்னாடி தான் அம்மா கேட்டாள்.

"பணத்தை எடுத்துக்கிட்டுப் பீரோவைப் பூட்டிச் சாவியை எங்கே வெச்சே வித்யா?"

"நான் பூட்டலம்மா... நீதானே சேலை மாத்திக்கிட்டு இருந்தே அங்கே...."

"பூட்டலயா.... ராதா பூட்டினாளான்னு கேளு...."

அவள் விழித்தாள். அம்மா முணு முணுக்க ஆரம்பித்தாள்.

"திறந்தே கிடந்தா... பின் கதவைத் திறந்து ஆள் வந்தா என்னடி பண்றது? இருக்கிறதே நாலு பவுன்... அதுவும் போனா, என்னடி பண்றது... யாராவது போய் வர்றீங்களா?"

"அப்பா வரட்டும் போகச் சொல்லலாம். பின்னாடிதான பூட்டியிருக்குல்லே... ஆள் வர முடியாதும்மா...."

"அதில்ல வித்யா... தென்னை மரம் இருக்குல்ல அதில ஏறி... மொட்டை மாடிக்கு வந்திடலாம்... அங்கேஇருந்து அடுப்படிக்குப் புகை போக்கி வழியா வந்திடலாம்... என்னடி பண்றது?"

அம்மா அதைப் பற்றியே யோசித்துக் கொண்டு வந்தாள்.

சித்தப்பாவின் ஊர் வந்து சேர்ந்தோம். வீட்டின் முன்னே கூட்டம். பெஞ்சு போட்டிருந்தார்கள். தூக்கம் கலையாத முகங்கள் அதில். கணேசன் சித்தப்பாவின் மூத்த பையன் சைக்கிளில் சாய்ந்து நின்று கொண்

ச.ராமகிருஷ்ணன்

டிருந்தான். பந்தல் போடுவதற்காக மூங்கில் நட்டுக் கொண்டிருந்தார்கள்.

தெருவில் வரும் எங்களைக் கணேசன் பார்த்து விட்டான். சைக்கிளை விட்டுத் தள்ளி வந்து கத்தினான். அழுகைக் குரல். உடைந்து போன கரகரப்புக் குரல். அவனைப் பார்த்ததும் அம்மா பெருங்குர லெடுத்து அழ ஆரம்பித்தாள். பெண்ணைப் போல, எல்லாப் பாவனைகளோடும் அழுதான் கணேசன்.


நடுக் கூடத்தில் பிணத்தைக் கிடத்தியிருந் தார்கள். சுற்றிலும் பெண்கள். அம்மாவைப் பார்த்ததும் கூட்டம் அழ ஆரம்பித்தது. அம்மா ஓடினாள். பருத்த தேகத்தோடு, தலையைக் கையால் அடித்தபடி அவள் அழ ஆரம்பித்தாள்.

சித்தி அதிகச் சத்தத்தோடு அவர் உடலில் மோதி, மோதி அழுதாள். சித்தியின் பெண் கள் 'அப்பா, அப்பா' என அரற்றினார்கள். ரேவதிக்கெல்லாம் அழுது அழுது முகம் வீங்கியிருந்தது. வித்யா அவள் கிட்டத்தில் போய் உட்கார்ந்து கொண்டாள். ரேவதி அவள் மேல் சாய்ந்து கொண்டு, அழ ஆரம் பித்தாள். வித்யாவிற்கு அழுகையே வர வில்லை, ரேவதியின் தலையைத் தடவிக் கொடுத்தாள்.

சித்தப்பாவைப் பார்த்தாள். முகம் சின்ன தாய் இறுகிப் போயிருந்தது. நெற்றியில் நாலணாக் காசு. பெருவிரல்களைச் சேர்த் துக் கட்டிய நூல்பட்டை காற்றில் ஆடிக் கொண்டிருந்தது.

ஒரு மூச்சு எல்லாம் அழுதார்கள். பத்து மணி சுமாருக்கு அப்பா வந்தார். வாயில் மேல் துண்டை அடைத்தபடி, விம்மியபடி, உள்ளே வந்தார். அருகில் வந்ததும் அழுகை அதிகமானது. கொஞ்ச நேரத்திற்குப் பிறகு அப்பாவைக் கைத் தாங்கலாக வெளியே கூட்டிப் போனார்கள். அழுகை ஓய்ந்து போய்க் காரியங்கள் செய்ய ஆரம்பித்திருந் தார்கள்.

ரேவதி, வித்யாவோடு பின்னால் போய் வந்தாள். வரும் போது அடுப்படியில் இருந்த சாத்தூர்ப் பாட்டி காப்பி கொடுத்தாள். ரேவதி வாங்கிக் குடித்துக் கொண்டாள். வெளியே போடப்பட்டிருந்த பந்தலில் ஆட்கள் கூட்டமிருந்தது. அப்பா உள்ளே வந்தார். இந்த முறை அழுகை இல்லை, அம்மாவையும், வித்யாவையும் கூப்பிட்டார்.



அருள்வாக்கு



இப்போதுள்ள வித்யைகளும் போதனை முறைகளும் வெற்று லௌகிகத்துக்கும் அகங்காரத்துக்குமே ஆஸ்பதமாக இருக்கின்றன என்பதால், ஆத்மார்த்தமான சாஸ்திரங்களை, கலைகளை, வித்யைகளைக் குறைவாகப் பேசக் கூடாது. இவை எல்லாம் அகங்காரத்தைக் கரைத்து, லோக க்ஷேமத்தையும் ஆத்ம க்ஷேமத்தையும் தரவே நம் தேசத்தில் ஏற்பட்டிருந்தன. இப்போதும் கூடப் புதிது புதிதாக விருத்தியாகியிருக்கிற வித்யைகள், டெக்னாலஜி ஆகியவற்றால் எத்தனையோ லோக க்ஷேமத்தை உண்டாக்கலாம்; நல்லறிவை வளர்த்துக் கொள்ளலாம். எல்லா 'எலிமெண்ட்'—களுக்கும் மூலமான 'எனர்ஜி' ஒன்றேதான் என்று கண்டுபிடித்து விட்ட 'அடாமிக்' (அணு) ஸயன்ஸிலேயே நன்றாக ஊறினால் அதுவே கூட ஆத்மிக அத்வைதத்துக்குக் கொண்டு போய் விட்டு விடும். ஓயாமல் ஆசைவாய்ப்பட்டுப் பறப்பாகப் பறந்து கொண்டிராமல் ஆன்றோர்கள் போட்டுத் தந்த வாழ்க்கை முறையை நாம் மேற்கொண்டு வித்யைகளை அப்பியசித்து வந்தால் இன்றும் அவை புறத்துக்கு நல்லது செய்யும்; உள்ளுக்கு ஞானமும் தரும்.

மருந்தோடு பத்தியமும் முக்கியம். வித்யை என்கிற மருந்துக்கு அடக்கம்; விநயம் என்கிற பத்தியம் அவசியம். இப்போது அது இல்லாததால் மருந்தே விஷமாயிருக்கிறது. ஆனால் அடக்கத்தோடு பயின்றால் வித்யையே உண்மையில் ஞானம் தரும் அமிருதமாகும்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

வெளியே எழுந்து வந்தார்கள். வீட்டின் பின்னால் வந்து அப்பா நின்று கொண்டார்.

"லீவு கிடைக்கலே... ஆபீஸர் வரான். பீரோவப் பூட்டாம வந்துட்டயாமே. ராதா சொன்னா... ஏண்டி இப்படிப் புத்தி போகுது?"

"அவசரத்திலே மறந்துட்டேன்... நீங்க எப்ப கிளம்பறீங்க?"

"ராத்திரி கிளம்பிப் போயிட்டு நாளைக்கு வாரேன். நீ நாளைக்கு வா, போதும். மத்தவங்க என்ன சொல்றாங்க? செலவு யார் செலவாம்?"

"அது உங்க தம்பியைக் கேக்கணும்... எங்கிட்ட கேட்டா?"

அம்மாவும், வித்யாவும் திரும்பவும் பழைய இடத்திற்குப் போய் உட்கார்ந்தார்கள். பிறகு ஒரு பாட்டம் அழுதாள் அம்மா. யார் யாரோ வந்து போனார்கள்.

பிணத்தை எடுத்துப் போகும் போது வாசல் வரைக்கும் அழுது கொண்டே போனார்கள். அப்பா கூடப் போனார். கணேசனும் அவன் தம்பிகளும் பந்தம் பிடித்துக் கொண்டு போனார்கள். அதற்குப் பின்னாடிதான் காப்பி வந்தது. அம்மா குடித்து முடித்தாள்.

சித்தியும் அவளுடைய மூத்த மகளும் அதே இடத்தில் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டார்கள். மற்றவர்கள் கலைந்து போனார்கள் வீடெங்கும். வித்யா பக்கத்தில் இன்னொரு சித்தி வந்து உட்கார்ந்து கொண்டாள். அவசரத்தில் அவள் கூட ஜன்னலைப் பூட்டவில்லை, அணில் வந்துடும் என்றாள். அம்மாவும் அவள் வயசுப் பெண்களும் மூலையில் உட்கார்ந்து ஏதோ பேசிக் கொண்டிருந்தார்கள்.

வித்யா கொஞ்ச நேரத்துக்குப் பிறகு எழுந்து மொட்டை மாடிக்கு வந்தாள். ஏற்கெனவே ரமா அங்கேயிருந்தாள்; உடன் அவள் அத்தை பையன் சண்முகம். அவர்கள் திரும்பிப் பார்த்து விட்டுப் பேசிக் கொண்டார்கள். வித்யா மட்டும் காற்று வாங்கினாள். சித்தப்பா எப்பவோ ஒரு தரம் அவளுக்குப் படம் வரையச் சொல்லித் தந்தது ஞாபகம் வந்தது.

காரியத்தை முடித்து விட்டு அப்பா வந்தார். குளித்து ஈரத்துணியில் இருந்தார். அம்மா உள்ளேயிருந்து மாற்று வேஷ்டி கொண்டு வந்தாள். எட்டு மணி வாக்கில் தம்பியிடம் சொல்லி விட்டு எங்கள் வீட்டிற்குப் போக அம்மாவிடம் சாவி வாங்க வந்தார். அம்மா கிசுகிசுத்த குரலில் சொன்னாள்.

"மாவு புளிச்சுப் போயிருக்கும். ரவை போட்டுக் காலைல தோசை சுட்டுச் சாப்பிட்டுக்கோங்க. வரும் போது ஜன்னல் அடியில் சின்னப் பொந்து இருக்கும். பேப்பர் வச்சு அடைச்சுட்டு வந்துடுங்கோ. தவளை அல்லது அணில் வந்துடும். பீரோவைப் பூட்டிருங்க...."

"சரி சரி" யென்ற அப்பா ரோட்டில் போய்க் கொண்டிருந்தார். பிணம் தூக்கிகள் ரூபாய்க்காக எதிரே வந்து கொண்டிருந்தார்கள்.



இருள் வரும் நேரம்

14

'பாபு...! பாபுன்னு ஏதும் பேர் கேட்டதா ஞாபகமில்லையாம். குருன்னுதான் ஒருத்தன் கூப்பிட்டானாம். ஒருத்தன் தைரியமா இருந்தாப்பலயும் மற்றொருத்தன் பயப்படறாப்பலயும்தோணித்துன்னுசொன்னா."

'குரு...ங்கறது பெங்களூர்ல இளைஞர்கள் அதிகமா உபயோகப்படுத்தற வார்த்தை. 'வாத்தியாரே' 'உஸ்தாத்'ங்கிற மாதிரி... இது ஒருத்தன் பெயராகவும் இருக்கலாம். ஆனா பெரும்பாலும் இது அர்த்தமில்லாத பொதுப் பெயர்தான்.''

சோமசேகர் அட்டெண்டர் கொண்டு வந்த தேநீரைக் குடித்துவிட்டுக் கோப்பையை மேசைமேல் வைத்து. "தாங்க்ஸ்! போலீஸ் மேல உங்க கோபம் எல்லாம் போயிட்டுதா?'' என்றார்.

''இல்லை. ரூமுக்கு வர்றவங்க யாராயிருந்தாலும் டீ கொடுக்கிறது என் வழக்கம்.

சோமசேகர் புன்னகை செய்து. ''கமிஷனரே உங்களைப் பார்க்க வரப் போகிறதாச் சொன்னார்.''

''தேவையில்லை'' என்றார் ராம்பிரகாஷ் கடுமையாக.

''ப்ரொபஸர், உங்களை மாதிரி பொறுப்புள்ள படிச்ச சனங்களே தங்கள் கடமையைச் செய்யத் தயங்கினா...!''

அருகில் உட்கார்ந்திருந்த வர்ஷா சட்டென்று முகம் சிவந்து படபடவென்று பேச ஆரம்பித்தாள்:

''நீங்க எவ்வளவு தூரம் உங்க கடமையைச் செய்திருக்கீங்க? யோசிச்சுப் பாருங்க சோமசேகர். போலீஸ் என்கிறது எதுக்காக இருக்குது? மக்களுக்குப் பாதுகாவலுக்காக, நகரத்தில் குற்றங்களைத் தவிர்க்க, போக்குவரத்தைக் கவனிக்க, கூட்டங்களை ஒழுங்குபடுத்த... சுருக்கமாச் சொல்லப் போனா, நகரத்தில உயிர் வாழறதில அவஸ்தையோ, கவலையோ, பயமோ இல்லாம இருக்கத்தான் உங்களுக்கெல்லாம் சம்பளம் கொடுத்து வெச்சிருக்காங்க, இல்லையா? அந்தக் கடமையை நீங்க எத்தனை தூரம் நிறைவேற்றியிருக்கீங்க? சொல்லுங்க? மாலை ஏழு மணிக்கே நகரத்தினோட மிகப் பிரதானமான பார்க் அருகில், மாநில அரசின் மைய அலுவலகமான விதான் சௌதாவில இருந்து முந்நூறு மீட்டர் தள்ளி, ரெண்டு ஆளுங்க ஒரு குடும்பப் பெண்ணைக் கற்பழிச்சிருக்காங்க! ஒரு மாசமாச்சு, இன்னமும் கண்டுபிடிக்கத் தெரியலை, உங்களுக்கு. 'பாபு' 'குரு'ன்னு கன்னட மொழியிலே உள்ள பிரயோகங்களைப் பற்றி விவாதிக்கவும், டீ குடிக்கவும் வந்திருக்கீங்க. ஏன் ஸார் நீங்க ராஜினாமா செய்யக் கூடாது?''

''ரொம்ப ஹார்ஷ் மிஸ் வர்ஷா. எங்களோட பொஸிஷனையும் நீங்க யோசிச்சுப் பார்க்கணும்.''

''உங்களோட நிலைமை என்னன்னு நீங்க சொல்லீங்கங்கிறது நல்லாவே தெரியும்! போலீஸ்காரங்க பத்தாது. பட்ஜெட் பத்தாது. இதையேதான் திருப்பித் திருப்பிச் சொல்லிக்கிட்டிருக்கீங்க. இருக்கிற போலீஸ்காரங்களை வெச்சுக்கிட்டு என்ன சாதிச்சீங்க? சொல்லுங்க.''

சோமசேகர் புன்னகை செய்து. ''இது நாள் வரைக்கும் ஏதும் சாதிக்கலைதான். ஆனா இந்த ரெண்டு பேரையும் ஒங்க முன்னால கொண்டாந்து நிறுத்தலைன்னா எனக்கு வீட்டில பேர் கெட்டுப் போய்டும். என் டாட்டர்கூட உன் கட்சிதான் வர்ஷா! அவ வர்றதுக்குள்ள நான் கிளம்பிடறேன். ப்ரொபஸர், தாங்க்ஸ் ஃபார் தி டீ! அடுத்த முறை உங்களைச் சந்திக்க வர்றப்ப இன்னும் கொஞ்சம் தீர்மானமான தகவல்களுடன் வர்றேன். பை வர்ஷா. சுமியைப் பார்த்தால் நான் வந்திருந்ததாச் சொல்லாதே. என்ன?'' என்றார்.

அவர் போனதும் ராம்பிரகாஷ் வர்ஷாவைப் பார்த்து, "இவங்க கண்டுபிடிப்பாங்கன்னு நம்பறியா வர்ஷா?'' என்று கேட்டார்.

''இல்லை ப்ரொபஸர், சான்ஸே இல்லை. கண்டுபிடிச்சாலும் உங்க மனைவி கோர்ட்டில வந்து டிபோஸ் பண்ணுவாங்களா?''

''அவ இருக்கிற மனநிலையில எது வேணா செய்வா.''

''பாவம்.''

சுஜாதா

''எஸ். அவளால இந்த நிலைமையைச் சமாளிக்கவே...''

''நான் அம்ருதாவுக்காகப் பரிதாபப் படலை. உங்களுக்காக! எப்படி நீங்க இந்த நிலைமையைச் சமாளிக்கிறீங்க?''

''நானா! நானும் தட்டுத் தடுமாறிக்கிட்டு இருக்கேன். எனக்கும் முன் அனுபவம் இல்லை பார்த்தியா?''

''என்ன ஸார்! இதுக்கெல்லாம் முன் அனுபவம் கிடைக்குமா என்ன...?''

''நான் சொல்லிக் கொடுக்கிற சைக்காலஜி படி நான் செய்யறது அத்தனையும் தப்பு. பொறுமை இல்லாம அவகிட்ட நடந்துக்கிறேன். சீக்கிரமே கோவிச்சுக்கிறேன். சண்டை போடறேன். ஆத்திரப்படறேன். என்னவெல்லாம் செய்யக்கூடாதோ, அதையெல்லாம் செய்துக்கிட்டு இருக்கேன். இப்ப நீ வேற வந்து விஷயத்தைக் குழப்பறே.''

''நான் என்ன ஸார் தப்புச் செஞ்சேன்?''

''நீ ஏதும் தப்பு செய்யவில்லை. ஆனால் உன்னைக் கண்டாலே, உன்னோட பேசினாலே எனக்கு ஒரு மாதிரி குற்ற உணர்ச்சி ஏற்படறது.''

''ஏன், ப்ரொபஸர்?'' என்றாள் வர்ஷா அறியாமையுடன்.

''என்னை நேரா நிமிர்ந்து கூடப் பார்க்க மாட்டேங்கறீங்க, ஏன்?''

''தைரியமில்லை.''

''இதில தைரியம் என்ன?''

ராம்பிரகாஷ் வர்ஷாவை இப்போது நேராகப் பார்த்தார்.

''வர்ஷா, நாம இப்ப பாசாங்குகளையெல்லாம் கழற்றி வெச்சுரலாமா?''

வர்ஷா மௌனமாக இருக்க, ''எனக்கு உன்மேல ஒரு வசீகரம் இருக்கிறது என்னவோ உண்மைதான். அத்தனை டென்ஷனுக்கு மத்தியிலும் உன்னைப் பார்த்தால் எனக்குள்ளே சின்னதா ஒரு பட்டாம்பூச்சி அடிச்சுக்கறது. அதே போல உனக்கும் என் மேல ஒருவித. ஒருவித. அதை என்ன சொல்றது...? 'க்ரஷ்'ங்கறதுக்குத் தமிழ்ல என்ன?'' என்று தொடர்ந்தார்.

''தமிழ் வேண்டாம், சொல்லுங்க.''

''நாம் இரண்டு பேரும் வெளியுலகத்தில ஒரு மாதிரியும், உள்ளுக்குள்ள வேற மாதிரியும் நடந்துக்கறோம். உள்ளே இருக்கிற உணர்ச்சிகளை வார்த்தைகளால வடிக்கிறதுக்குப் பயப்படறோம். ஆனா வார்த்தைகள் இல்லாவிட்டாலும் நம்ம ரெண்டு பேருக்குள் உள்ள உறவைப் பற்றிச் சந்தேகமே இல்லை. வர்ஷா வாட் டு யூ வாண்ட், சொல்லு?''

வர்ஷா புன்னகையுடன்: ''அதுக்குத்தான் வார்த்தைகளே தேவையில்லைன்னு சொல்லிட்டீங்களே...?''

''டு யூ வாண்ட் ஸெக்ஸ்?''

''ஒய் நாட்?'' என்றாள்.

''அதுக்கு என்னை விடத் தகுதியா, இளமையா எத்தனையோ பேர் இருக்காங்க.''

வர்ஷா ராம்பிரகாஷின் கைகளைப் பற்றித் தன் மேல் வைத்துக் கொண்டு, அவரை நேராகப் பார்த்தாள்.

''எக்ஸ்க்யூஸ் மி'' என்று குரல் கேட்க, பாலா நின்று கொண்டிருந்தான். ''ஸாரி, நான் அப்புறம் வர்றேன்!''

இருவரும் அந்தக் குறுக்கீட்டினால் பாதிக்கப்பட்டு, முகத்தில் சற்றே ரத்த மிழந்து சுதாரித்துக் கொள்வதற்குள், பாலா புறப்பட்டு அறையை விட்டு விலகிவிட, ''பாலாவைக் கூப்பிடு'' என்றார் ராம்பிரகாஷ்.

வர்ஷா வெளியே போய் எட்டிப் பார்த்துவிட்டு, ''அவன் போய் விட்டான்'' என்றாள்.

பாபுவும் பால்குண்டுவும் பார்க்கை விட்டு வெளியே வந்து, கல்யாண மண்டபத்தைக் கடந்து, ''எஸ். எல். வி.'' வரை அந்தப் பெண்ணைத் தொடர்ந்தார்கள். ''என். ஆர். காலனி பொண்ணு, பாபு. தினம் காலே ஜுக்கு நடந்துதான் வருது. எப்படியாவது ஆட்டோவில கொண்டாந்துட்டாப் போதும்! இப்படியே நேராப் போனா தர்ட் ஸ்டேஜைத் தாண்டிரலாம். அங்க மலை மேல ஒரு கோயில் இருக்குது. வருஷம் ஒரு முறைதான் திறப்பாங்களாம்.''

பாபு சும்மா இருந்தான். ''குரு, மாட்டிக்கப் போறோம்.

''ஏன்டா?''

''போலீஸ்காரங்க விசாரிச்சுக்கிட்டு வர்றாங்களாம். பேப்பர்ல போட்டிருக்கான்.''

''ஒரு மாதம் ஆயிடுச்சுடா. கேஸை மூடிடுவாங்க.''

''மாட்டிக்கிட்டா என்ன ஆகிறதாம்?''

''மாட்டிக்கிட்டாக் கூட யார்றா அன்னைக்கு நம்மைப் பார்த்தாங்க, சொல்லு.''

''யாராவது பார்த்திருப்பாங்க.''

''இருட்டிலயா?''

''அந்தம்மா என்னைப் பார்த்தா, வெளிச்சம் இருக்கிறப்ப.''

''அந்தம்மா கோர்ட்டில வந்து சாட்சி சொல்லுவாங்கறியா?''

''அப்படிச் செய்திருக்காங்களாம். என் ப்ரெண்டு நடராஜன் சொன்னான். வரிசையா வெச்சு அடையாளம் காட்டச் சொன்னாங்களாம். ஒரு அம்மா வந்திருந்ததாச் சொன்னான்.''

''பாரு, பாபு, நீ பயப்படவே பயப்படாதே. நமக்குத் தெரிஞ்ச வக்கீலு இருக்காரு. செம தோஸ்த்து எங்கண்ணனுக்கு. அந்தாளு கிட்ட கேஸை ஒப்படைச்சுட்டாப் பிச்சுப் புடுங்கிடுவாரு.

''பணம் ஆகுமே.''

''பணத்தைப் பற்றிக் கவலையை விடு. அதையும் ஒருமுறை சொல்லித் தர்றேன்.''

''எதை?''

''பணம் பிடுங்கறது, திருடறது எப்படின்னு. லைப்ல நம்ம பிலாசபி இதான். தப்பிச்சுக்க வழி இருக்குதான்னு பார்த்துட்டு அந்தக் குற்றங்களையெல்லாம்



செய்யலாம், தெரியுதில்லை?''

''தெரியலைப்பா. எனக்கு எல்லாமே குழப்பமா இருக்குது குரு. எங்கம்மா பண்ணுறது நியாயம்ங்கறே!''

''அதில என்ன தப்புங்கறே? பணம் சம்பாதிக்க எத்தனையோ வழிங்கள்ல அதுவும் ஒண்ணு. திருடறாளா, பொய் சொல்றாளா? லட்சுமி அம்மா மேல எனக்கு எப்பவுமே மரியாதை உண்டு பாபு.''

''பெரியப்பாங்கறவனை வெட்டணும் குரு.''

''அவன் என்னடா பண்ணுவான்? அவனும் பிழைப்புக்குத் தொழில் செய்யறான்.''

''பொண்ணுங்களையே வெட்டணும்!''

''எதுக்குடா?''

''வெட்டணும். அவ்வளவுதான்!''

''**எ**ஸ். எல். வி.யில் அந்தப் பெண் சினேகிதிகளுடன் சிற்றுண்டி முடித்து விட்டு மெல்லச் சாலையின் சரிவில் என். ஆர். காலனியை நோக்கிச் செல்ல முற்பட, ''வாடா,'' என்றான் பால்குண்டு.

''என்ன குரு?''

''முடிச்சுரலாம். சட்டுன்னு போய் வண்டி எடுத்துட்டு வாடா!''

''கண்டோன்மெண்ட்டு போக நேரமாகும்.''

''எத்தினி நேரமாகும்?''

''ஒரு அவராவது.''

''இந்தப் பொண்ணு வீட்டுக்குப் போயிட்டு மறுபடியும் தையல் கிளாஸோ, டைப்பு கிளாஸோ, காந்தி பஜார் போகும். இங்கேதான் காத்திருக்கேன். நீ போய் வண்டி எடுத்துக்கிட்டு வா.''

''போலீஸ்காரங்க?''

''அட சட்! பயந்து சாவாதடா? எந்தப் போலீஸ்காரனும் நம்மைப் பிடிக்க முடியாது. பொண்ணைப் பாரு, உங்கம்மா மாதிரி அழகா இல்லை?''

பாபுவை இந்த வார்த்தைகள் என்னவோ செய்தன. அவளைப் பக்கவாட்டில் பார்க்கும் போது, சின்ன வயதில் தன் அம்மா அப்படித்தான் இருந்திருப்பாள் என்று தோன்றியது. ''இரு, குரு, போய் வண்டியை எடுத்துக்கிட்டு வந்துர்றேன்!''

பாபு அங்கிருந்து பஸ் பிடித்துச் சிவாஜி நகர் போய்க் கராஜுக்குச் சென்ற போது நான்கு வண்டிகள் இருந்தன. ஒன்று ஸ்டெப்னி மாற்றிக் கொண்டிருந்ததை நிஸ்ஸார் கண்காணித்துக் கொண்டிருக்க, ''வாய்யா, பாபு, என்ன இத்தனை நாளாக் காணோம்?'' என்று கேட்டான்.

''உடம்பு சரியில்லை, நிஸ்ஸார் பாய்.''

''இப்ப எதுக்கு வந்தே? வண்டி எடுக்கறதுக்கா?''

''ஆமாம் பாய். ராத்திரி கொண்டாந்து விட்டுர்றேன்.''

''போலீஸ் தாணாவுக்குப் போனியா?''

''இன்னும் போவலை பாய், என்ன விஷயம்?''

''ஒரு ரேப் கேஸ். நம்ம வண்டியில ஆகியிருக்குதாம்.''

''யாரு டிரைவர்?''

''தப்பாத்தான் இருக்கணும். நம்ம வண்டி சோக்ராங்கள்லாம் சரீப் ஆசாமிங்கன்னு போலீஸ்கிட்டச் சொல்லிப் போட்டேன். எதுக்கும் ஒரு ஃபார்மாலிட்டிக்குப் போய் வந்துரு. நிக்க வச்சுக் கொஸ்சன் கேட்டாங்களாம். நடராஜ் சொன்னான்.''

பாபு வண்டி எடுத்துப் போன பின் போலீஸ் வண்டி அங்கு வந்து நிற்க, தர்மராஜன் இறங்கினார். ''ஏன்யா, மத்த டிரைவருங்க வந்தாங்களா?''

''யாருங்க?''

''அதான் பாபு... வேலாயுதம்... ரங்கசாமி...''

''பாபு இப்பத்தான் வண்டி எடுத்துப் போறாங்க. மூலை திரும்பியிருக்க மாட்டான். ஸி ஏ டபிள்யூ முப்பத்து நாலு முப்பத்து அஞ்சு வண்டி.''

''உடனே புறப்பட்டாப் பிடிச்சுடலாம்!'' தர்மராஜன் ஜீப்பில் ஏறிக் கொண்டார்.

(தொடரும்)

பிரதமர் நம் நாட்டுக்கு விஜயம்!

ராம்சே மக்டொனால்ட் பிரிட்டனின் முதல் லேபர் பிரதமர். இவர் அடிக்கடி வெளிநாடுகளுக்கு விஜயம் செய்வதில் ஆர்வமுள்ளவர். எதிர்க்கட்சிகள் எவ்வளவோ கண்டனம் செய்தும் இவர் காதில் ஏறவில்லை. ஒரு முறை கானடா நாட்டிற்கு விஜயம் செய்துவிட்டு இங்கிலாந்திற்குத் திரும்ப இருந்த நேரத்தில், 'டைம்ஸ்' பத்திரிகை, ''மக்டொனால்ட் இங்கிலாந்திற்கு விஜயம்'' என்று தலைப்புக் கொடுத்துச் செய்தியை வெளியிட்டது. இந்தத் தலைப்பு பிரதம மந்திரியைத் தாக்க வேண்டிய இடத்தில் தாக்கியது. அதிலிருந்து அவருடைய வெளிநாட்டுப் பயணங்கள் குறைந்தன.



(டைம்ஸ் ஆப் இந்தியா: வாசகர் கடிதம்)
தகவல்: செம்பூர் சந்துரு.

தன்னம்பிக்கை



ஒவ்வொரு மனிதனும் முதலில் தன்னிடம் நம்பிக்கை வைக்க வேண்டும். என்னால் இயலாது என்று ஒரு நாளும் சொல்லாதீர்கள். நீங்கள் வரம்பில்லா வலிமை பெற்றவர்கள். எதையும், எல்லாவற்றையும் சாதிக்கும் ஆற்றல் படைத்தவர்கள் நீங்கள்.

மனித வரலாற்றை முழுவதும் பார்க்கும் போது ஆணோ, பெண்ணோ வரலாற்றில் சிறப்புடன் விளங்கினார்கள் என்றால் அதற்கு முக்கியக் காரணம் அவர்களது தன்னம்பிக்கை தான் என்று சுவாமி விவேகானந்தர் வீர முழக்கமிடுகிறார்.

ஆனால் நம்மில் பலர் ஓரளவு கல்வித் தகுதியிருந்தும் மற்றவர்களிடம் ஆங்கிலத்தில் பேசத் தயங்குகிறார்கள்.

தவறாகப் பேசி விடுவோமோ என்ற பயமும், முறையான பயிற்சியின்மையுமே இத்தயக்கத்திற்கான முக்கியமான காரணங்களாகும்.

உங்களது இத்தயக்கத்தைப் போக்கி நீங்கள் ஆங்கிலத்தில் சரளமாக உரையாட, இலக்கணப் பிழையின்றி கடிதங்கள், கட்டுரைகள் எழுத விவேகானந்தா கல்வி நிலையத்தினர் தபால் மூலம் மிகச் சிறந்த முறையில் பயிற்சியளித்து வருகிறார்கள். நேர்முகப் பயிற்சியும் உண்டு. இப்பயிற்சியைப் பற்றி மேலும் தகவல் அறிய விரும்புவோர் கீழ்க்கண்ட முகவரிக்குக் கடிதம் எழுதி இலவசமாக தகவல் புத்தகத்தைப் பெற்றுப் பயிற்சியில் சேர்ந்து பயன் பெறலாமே!

விவேகானந்தா கல்வி நிலையம் (Regd)
9, மேட்லி ரோடு, தி. நகர், சென்னை-600 017

வட்ட மேஜை

நாகரிகம் தெரியாதா? பண்பாடு புரியாதா?

* ஒரு பத்திரிகை, அதுவும் மாநில மொழியில் வெளியாகும் வாரப் பத்திரிகை பிரதமரின் பிரத்தியேகப் பேட்டியைப் பெறுவது என்பது சாமானிய விஷயமல்ல. அந்தச் சாதனைக்காக உங்களை வாழ்த்தும்போதே, இவ்வளவு அநாகரிகமாக நீங்கள் நடந்து கொண்டிருப்பது கண்டு வருந்துகிறேன். தலையங்கத்தைத்தான் குறிப்பிடுகிறேன். உங்கள் அபிப்பிராய சுதந்திரத்தில் நான் தலையிட விரும்பவில்லை. ஆனால் பிரதமரை ராஜினாமாச் செய்து தேர்தலைச் சந்திக்குமாறு கூறும் அந்தத் தலையங்கத்தைப் பிரதமரின் பேட்டியையொட்டியே பிரசுரித்திருக்க வேண்டுமா? ஒரு வாரம் தள்ளிப் போட்டு அடுத்த இதழில் பிரசுரித்திருக்கக் கூடாதா? பண்பாடு உங்களுக்குக் கற்றுத் தரப்படவா வேண்டும்? வீட்டுக்கு வந்த விருந்தினரை அவமதித்து அனுப்புவது போலிருக்கிறது உங்கள் போக்கு.

சென்னை — 17, என். ராஜ்யலட்சுமி.

* "கல்கிக்குப் பிரதமர் அளித்த பிரத்தியேக பேட்டி" பல சிக்கலான — முக்கியமான பிரச்னைகளின் முடிச்சுக்களை அவிழ்த்து விட்டது. ராஜீவின் தொலை நோக்கு கண்டு வியந்தேன். அவருடைய அரசியல் கணிப்பும், சமுதாய முன்னேற்றத் திட்டங்களும் பயனுள்ளவை. எல்லாக் கேள்விகளுக்குமே கூடியவரை மழுப்பாமல், பொறுமையாக, உறுதியாகப் பதிலளித்திருக்கிறார் நமது பிரதமர்.

மேல்பட்டி. எம். வி. வெங்கடேஸ்வரன்.

* மாநாடு நடத்தியும் பார்த்தாயிற்று; இடைத் தேர்தல் நடத்தியும் பார்த்தாயிற்று... ஜனங்கள் 'கை' கொடுக்கிற மாதிரி தெரியவில்லை. இப்படியே போனால் இ. காங்கிரஸ் இருக்கிற இடம் கூடத் தெரியாது போலிருக்கு. என்ன செய்யலாம்... என்று பிரதமர் ராஜீவ் யோசிக்கும் தொனியில் வந்த கல்கியின் அட்டைப்படம் ஒரு 'சிம்பாலிக் ஷாட்!'

கிருஷ்ணகிரி — 1. சி. செளந்தரபாண்டியன்.

* பிரதமரின் பிரத்தியேகப் பேட்டி கண்டேன். பேட்டியில் கவர்னர் ஆட்சியில் அலெக்சாண்டர் செய்வது எல்லாம் காங்கிரஸ் கட்சியினால்தான் என்பது போல ராஜீவ் பேசியிருக்கிறார். அப்படியானால் அவர் செய்யும் நல்ல காரியங்கள் எல்லாம் அரசியல் ஸ்டண்ட்தானா? அலெக்சாண்டருக்கென்று தனித்தன்மை ஒன்றுமில்லையா. அவர் காங்கிரஸ் கட்சியின் கைப்பாவைதானா?

சென்னை — 7. சலங்கைதுரை.

* தேர்தல் முடிவுகள் இ. காங்கிரசுக்கு வழங்கிய பாடம் என்பதோடு நிறுத்திக் கொள்ளாமல், எதிர்க் கட்சிகளுக்கும் தகுந்த அறிவுரைகள் வழங்கியிருக்கிறீர்கள். தலையங்கத்தின் இரண்டாவது பகுதியில் 'போஃபோர்ஸ் பேரம் பற்றி நிரூபிக்கப்பட்டிருப்பதை ராஜீவ் அரசுக்கு எடுத்துரைத்து, அவரது அடுத்த உடனடி நடவடிக்கை குறித்தும் ஆலோசனை வழங்கி நடுநிலையானதோர் தலையங்கத்தைச் சிறந்த முறையில் எழுதியிருக்கிறீர்கள். பாராட்டுக்கள்.

திருச்சி — 16. எஸ். ராஜகோபால்.

* குதிரைப் பந்தயம் மீண்டும் வந்ததில் இவ்வளவு சமாசாரங்கள் நடந்திருக்கின்றனவா? அவற்றை எல்லோரும் தெரிந்து கொள்ளச் செய்த பெருமை கல்கியையே சாரும். குதிரைப் பந்தயம் மீண்டும் கொண்டு வர விருப்பப்பட்டவர்கள் 'எத்தனை ஏழை, நடுத்தரக் குடும்பங்கள் நசிந்து போகக் காரணமாக இருக்கிறோம்' என்று நினைத்துப் பார்த்தால் நல்லது.

கவுந்தபாடி. எஸ். துரைசாமி.

* தில்லியில் அறுபது அடி உயரத்தில் நிற்கப் போவது கிருஷ்ணன் சிலை மட்டுமல்ல; தமிழனின் கலைத்திறனும், கைவண்ணமும்தான். ஸ்தபதி முத்தையாவுக்குப் பாராட்டுக்கள்.

தஞ்சாவூர் — 1. கவிஞர் சுகன்.

* தேர்தல் வருமா? தெலுங்கு — கங்கைக் குடிநீர்த் திட்டம் நிறைவேறுமா? என்றெல்லாம் ஏகப்பட்ட பிரச்னைகளுக்கு நடுவில் இருக்கும் நமக்கெல்லாம் 'சுகாசினி திருமணத்துக்குப் பின் நடிப்பாரா?' என்ற கேள்விதான் ரொம்ப முக்கியமாக்கும்?

வடுவூர். எஸ். கண்ணன்.

* தி.மு.க.வின் தேர்தல் நிதி குறித்து மத்திய அமைச்சர் சிதம்பரம் பொறுப்பில்லாமல் பேசியிருந்ததற்குக் கார்ட்டூன் மூலம் வெகு அழகாகப் பதிலடி கொடுத்திருந்ததை நான் மட்டுமல்ல; வீட்டில் உள்ள அனைவரும் ரசித்து மகிழ்ந்தோம்.

வேலூர். லட்சுமி செங்குட்டுவன்.

* "கல்கி" 12.6.88 இதழில் வெளியான "திக்குத் தெரியாத காட்டில் ஜனதா" என்ற கட்டுரை என்னிடம் காட்டப்பட்டது. உங்கள் விமர்சன உரிமைகளில் நான் குறுக்கிட விரும்பவில்லை. ஆனால் தமிழக ஜனதா கட்சியின் செலவுகளைச் சரிக்கட்டுவதற்காகக் கர்நாடகாவிலிருந்து பணம் வருகிறதாம்' என்று கூறப்பட்டுள்ளது. இது சிறிது கூட உண்மை கலவாத ஒரு கூற்று. இதுவரை, தமிழக ஜனதா கட்சியின் செலவுகளுக்காக ஒரு காசு கூட பிற மாநிலங்களிலிருந்து — அதிலும் கர்நாடக மாநிலத்திலிருந்து பெற்றதில்லை!

'திக்குத் தெரியாத காட்டில் ஜனதா" என்பதை விட "திக்குத் தெரியாத நாட்டில் ஜனதா' என்பது பொருந்தும். என்னிடம் — எங்கள் கட்சியிடம், குறைகள் சில இருக்கலாம். ஆனால் கறைகள் எதுவும் கிடையாது!

சென்னை — 4. இரா. செழியன்.

தகுதி

சத்யா ஸ்ரீனிவாசன்



“டிட் யூ கால் மீ ஸார்...'' என்றபடி தம்முன் வந்து பணிவாக நின்ற புதிய டெபுடி ஜெனரல் மானேஜர் கேசவனைச் சில வினாடிகள் உற்றுப் பார்த்தார், அந்த வங்கியின் சேர்மனும், மானேஜிங் டைரக்டருமான ராஜசேகரன்.

''எஸ்!'' என்று அவரை அமரச் சொல்லிவிட்டு மெதுவாக ஆரம்பித்தார். ''மிஸ்டர் கேசவன், நமக்குப் பிடிக்கிறதோ இல்லையோ, சில விஷயங்களை நாம் செய்தே ஆக வேண்டி உள்ளது'' என்ற பீடிகையுடன் ஆரம்பித்தவர், ''நம்ப பாங்க்லே இப்போ 'ஆபீஸர்ஸ் கேடர்'லே வேகன்ஸி எதுவும் இல்லைங்கற விஷயம் நமக்கும் தெரியும். ஆனாலும், இந்த வருஷமும் வழக்கம் போல் ப்ரமோஷன் கொடுத்தே ஆகணும்னு யூனியன்லேருந்து ரொம்ப பிரஷர் பண்றாங்க. போர்டுலேயும், 'ஏன் அனாவசியமா யூனியனோட 'ரெப்சர்' பண்ணிக்கணும், கொடுத்துத் தொலைச்சிடலாமே'ன்னு ஃபீல் பண்றாங்க'' என்றார். பிறகு தொடர்ந்து, ''நீங்க உடனே, தேவையான குவாலிபிகேஷன்ஸ், மினிமம் சர்வீஸ் எல்லாத்தையும் ஸெட் — அவுட் பண்ணி சர்க்குலர் போட்டுடுங்க. அப்புறம் அந்த பம்பாய் ஏஜென்ஸிக்கும் போன் பண்ணி, எக்ஸாம், இண்டர்வியூ எல்லாம் நடத்தி, 150 பேரை செலக்ட் பண்ணித் தர்றதுக்கு காண்டிராக்ட் போட ஏற்பாடு பண்ணிடுங்க...'' என்று முடித்தார்.

''எஸ் ஸார்'' என்று தலையசைத்துவிட்டு எழுந்த கேசவனை நிறுத்தினார் எம்.டி. ''எவ்வளவு ப்ரமோஷன்ஸ் தரப்போறோம்ங்கற விஷயத்தை இப்ப வெளியிட வேண்டாம். அதில் ஒரு சிக்கல் இருக்கிறது!'' என்று சொல்லிவிட்டுத் தம் வேலையைக் கவனிக்க ஆரம்பித்தார்.

தம் அறையை அடைந்த டி.ஜி.எம். தம் உதவியாளரை அழைத்துச் சர்க்குலர் டிராப்ட் செய்யச் சொல்லிவிட்டு, பம்பாய் நிறுவனத்துடன் தொடர்பு கொள்ள போனை எடுத்தார்.



நூற்றைம்பது பேரை மட்டும் 'ப்ர மோட்' செய்வது என்ற நிர்வாகத்தின் முடிவு, வழக்கம் போல், உள் ஆசாமிகள் மூலம் யூனியனுக்கு எட்டியது.

யூனியன் அலுவலகத்தில்......

"என்ன தலைவரே மூவாயிரம் எம்ப்ளாயீஸ் பிரமோஷனுக்காக வெயிட் பண்றாங்க. இதுலே இந்த பிச்சாத்து நூற்றைம்பது எங்கே காணும்? நீங்க இன்னும் கொஞ்சம் ஸ்ட்ராங்கா நின்னு ஐந்நூறாவது வாங்கியிருக்கணும்..." என்று தலைவர் ராமநாதனைச் சாடிக் கொண்டிருந்தான் அஸிஸ்டெண்ட் செகரெட்டரி கிருஷ்ணன்.

"ஆமாம் ஸார், ஆமாம் தலைவரே..." என்று வேறு சிலரும் சேர்ந்து கொள்ளத் தலைவர் பாடு தர்மசங்கடமாகப் போய் விட்டது.

கிருஷ்ணன் மீது அவருக்குக் கோபம் பற்றிக் கொண்டு வந்தது. கொஞ்ச நாட்களாகவே அவனுடைய போக்கு அவருக்குக் கட்டோடு பிடிக்காமல் இருந்தது. அவர் செய்யும் எந்தக் காரியத்தையும் குறை கூறுவதையும், கமெண்ட் அடிப்பதையும் வழக்கமாகக் கொண்டிருந்தான் கிருஷ்ணன்.

கமிட்டி அங்கத்தினர்கள் இருவரும் அவனுக்கு 'ஆமாம் சாமி' போட ஆரம்பித்திருந்தது அவருக்குக் கவலையை அளித்தது. 'எப்படியாவது கிருஷ்ணனுக்கு ஒரு வழி செய்யணும்' என்ற யோசனை அவர் மனத்தில் புகுந்து விட்டிருந்தது.

இந்த நூற்றைம்பது ப்ரமோஷன்களைப் பெறுவதே அவருக்குப் பெரும்பாடாகப் போய்விட்டிருந்தது. 'கோ ஸ்லோ,' 'நான் கோவாபரேஷன்' 'ஸ்டிரைக்' என்ற எல்லா அஸ்திரங்களையும் உபயோகித்து எம்.டி.யை நன்றாகப் பயமுறுத்தியே இதை வாங்கியிருந்தார். இவர் மட்டும் கிருஷ்ணன் சொல்வது போல் இன்னும் ஸ்ட்ராங்காக நின்றிருந்தால், நிலைமை தலைகீழாகக் கூட மாறியிருக்கலாம். எம். டி. எரிச்சலடைந்து 'இது ஒண்ணும் எங்க அப்பன் வீட்டு பாங்க் இல்லை' ப்ரமோஷனே கிடையாது. உன்னாலே முடிஞ்சதைப் பார்த்துக்கோ..." என்று சொல்லியிருந்தால்...! ஊழியர்களை உசுப்பி, போராட்டங்களை அறிவித்து அவற்றை நடத்தி முடிப்பது ஒன்றும் லேசான காரியம் அல்ல. இதெல்லாம் தெரியாமல் கிருஷ்ணன் குழந்தைத்தனமாகத் துள்ளுவது அவருக்குக் கோபத்தை வரவழைத்தது. இருந்தாலும் —

மெதுவாகப் புன்னகையை வரவழைத்துக் கொண்டு, "காம்ரேட்ஸ், உங்க ஆர்வத்தைப் பார்க்கும்போது எனக்கு மிகவும் மகிழ்ச்சியாயிருக்கு. இன்றைய நிலைமைக்கு என்னாலே இவ்வளவுதான் செய்ய முடிஞ்சுது. உங்கள்லே யாராவது என் ஸ்தானத்திலே இருந்திருந்தா அதிகமான ப்ரமோஷன்களை வாங்கியிருக்கலாம் என்று நீங்க ஃபீல் பண்ணினா நான் இப்பவே வழியை விட்டு விலகிக்கிறேன். நீங்க தாராளமா எம். டி. கிட்டே போயி மறுபடியும் பேச்சு வார்த்தையை ஆரம்பிக்கலாம்..." என்றார்.

'அய்யய்யோ, நாங்க அப்படி சொல்லலை தலைவரே. உங்களாலேயே இவ்வளவுதான் முடிஞ்சதுன்னா, நாங்க என்ன பண்ணப் போறோம், தப்பா நினைச்சுக்காதீங்க தலைவரே' என்று அனைவரும் ஒட்டு மொத்தமாய்ச் சொல்வார்கள் என்று எதிர்பார்த்த தலைவருக்கு அங்கே நிலவிய மௌனம் அதிர்ச்சியை அளித்தது.

உடனடியாகச் செயற்குழுவிலும், நிர்வாகக் குழுவிலும் 'களை' எடுக்கப்பட வேண்டிய அவசியத்தை உணர்ந்தார் தலைவர்.

சில நாட்களிலேயே, அந்த வங்கியின் ஆயிரத்துக்கும்மேற்பட்ட எல்லா கிளைகளுக்கும் ப்ரமோஷன் பற்றிய சர்க்குலர் அனுப்பப்பட்டுவிட்டது. சுமார் மூவாயிரம் கிளார்க்குகள் 'டெஸ்ட்' எழுதத் தயாராயினர். டெஸ்ட் நடத்தி, இண்டர்வியூ செய்து, நூற்றைம்பது பேரை செலக்ட் செய்து தரும் பணியில், பல லட்சக்கணக்கான ரூபாய்ச் செலவில் பம்பாய் நிறுவனம் அமர்த்தப்பட்டது. தேர்வு நாளுக்கு முதல் தினமே ஊழியர்கள் அவரவருக்கு என ஒதுக்கப்பட்டிருந்த 'சென்டர்'களைச் சென்று அடைந்தனர். அவர்களுக்குப் பயணப்படி, பேட்டா என்று பணம் தண்ணீராகச் செலவழிக்கப்பட்டது. தேர்வுகள் கோலாகலமாக நடந்தேறின.

ஒரு மாத காலத்தில் பம்பாய் நிறுவனம் ஊழியர்கள் பெற்றிருந்த மதிப்பெண்கள் கொண்ட லிஸ்டை அனுப்பி வைத்தது. அதில் தொண்ணூறு சதவீதத்திற்கு மேல் மதிப்பெண்கள் பெற்றிருந்த அறுநூறு பேரை மட்டும் இண்டர்வியூவுக்கு அழைத்து அவர்களில் நூற்றைம்பது பேரை செலக்ட் செய்யலாம் என்று யோசனையும் கூறியிருந்தது. ஆனால் அந்த யோசனை நிர்வாகத்தினருக்கும், யூனியனுக்கும் ஒத்துவரவில்லை. ஏனெனில் இருதரப்பினருக்குமே வேண்டிய பல முக்கிய நபர்கள் நாற்பத்தைந்து சதவிகிதத்திற்கும் கீழாகவே மதிப்பெண்களைப் பெற்றிருந்தனர். அவர்களையும் இண்டர்வியூவுக்கு அழைக்க விரும்பியது நிர்வாகம். அவர்கள் அனைவரும் பட்டியலில் ஆயிரத்து ஐந்நூறாவது இடத்திலும், அதற்குக் கீழேயும் இருந்தனர். அவர்களையும் இண்டர்வியூ பட்டியலில் சேர்ப்பதற்காகச் சுமார் ஆயிரத்து அறுநூறு பேரை இண்டர்வியூவுக்கு அழைக்கத் தீர்மானித்திருந்தது நிர்வாகம். பம்பாய் நிறுவனம் மேலும் கூடுதலான தொகையைப் பெற்றுக் கொண்டு ஆயிரத்து அறுநூறு பேரையும் இண்டர்வியூ செய்தது.



''போன வாரம்தானே எங்க வீட்டில் கொள்ளையடிச்சுக்கிட்டுப் போனே! பின்னே ஏன் திரும்பவும் வந்திருக்கே?''

''வைர மோதிரம் ஒன்றைப் பக்கத்து வீட்டுக்கு இரவல் கொடுத்திருந்ததால அது பிழைச்சதுன்னு பத்திரிகை பேட்டியில் சொல்லியிருந்தியே, அதை எடுத்துக்கிட்டு வா!''

— மணியன் தர்மலிங்கம்.

இம்முறையும் ஊழியர்கள் அவர்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த சென்டர்களுக்கு, இன்டர்வியூவுக்கு முன் தினமே சென்று, பிரபல ஹோட்டல்களில் தங்கினர். வங்கிப் பணம் தண்ணீராய்ச் செலவழிந்தது.

அடுத்த சில தினங்களில் ப்ரமோஷனுக்கு முற்றிலும் தகுதியானவர்கள் என்று நூற்றைம்பது பேர் கொண்ட லிஸ்ட்டைச் சமர்ப்பித்துத் தன் கடமையை முடித்துக் கொண்டது பம்பாய் நிறுவனம்.

'லிஸ்டு' கையில் கிடைத்த அன்று எம்.டி.யின் அறையில் இருந்தார் கேசவன். அவர் கையிலிருந்து லிஸ்டை வாங்கிப் பார்த்த எம்.டி. தம்முடைய டிராயரிலிருந்து ஒரு லிஸ்ட்டை எடுத்தார். இரண்டையும் 'கம்பேர்' செய்து பார்த்துவிட்டு, உதட்டைப் பிதுக்கினார் எம்.டி. பிறகு இரண்டு லிஸ்ட்டுகளையும் கேசவனிடம் அளித்தார்.

''மிஸ்டர் கேசவன், நான் கொடுத்திருக்கிற 'லிஸ்ட்லே' சுமார் முப்பது பேர் இருக்கின்றனர். அவர்கள் எல்லாம் ரொம்ப முக்கியமானவங்களுக்கு ரொம்பவும் வேண்டியவங்க. அவர்களுக்கு ப்ரமோஷன் கொடுத்தே ஆகணும்...'' என்றவர், ''எனக்கு இன்னும் மூணு வருடங்கள் எக்ஸ்டென்ஷன் கிடைக்கறதும், உங்களுக்கு ஜி. எம். ப்ரமோஷன் கிடைக்கறதும் போர்டு ஆப் டைரக்டர்ஸ்கிட்டே இருக்கு. இந்த முப்பது பேரும் அவங்களுக்கு வேண்டியவங்க!'' என்று சிரித்துக் கொண்டே சொல்லி விட்டு, ''ஆனா இவங்க யாரும் 'பம்பாய் லிஸ்ட்லே' இல்லை. நீங்க என்ன பண்றீங்க. பம்பாய் லிஸ்ட்லே கடைசியாக இருக்கிற முப்பது பெயர்களை அடிச்சுட்டு, இந்த முப்பது பெயர்களைச் சேர்த்துடுங்க'' என்று சர்வ சாதாரணமாகச் சொல்லி விட்டுத் தம் வேலையில் ஆழ்ந்து விட்டார்.

எம். டி. யின் அறையிலிருந்து வெளிப்பட்ட கேசவனை எதிர்க் கொண்டான் எக்ஸிக்யூடிவ் டைரக்டரின் ப்யூன்.

''ஸார் உங்களை ஈ. டி. வரச் சொன்னார்.''

ஈ.டி. இருபது பெயர்கள் கொண்ட ஒரு லிஸ்டைக் கொடுத்தார். ''இவங்க பேரெல்லாம் லிஸ்ட்லே வந்திருக்காது. இருந்தாலும் பெரிய இடத்து சிபாரிசு இருக்கு. அந்தத் தகுதியே போதும். இவங்க பேரையும் சேர்த்துடுங்க...'' என்றார் ஈ.டி.

ஈ. டி.யிடம் விடை பெற்றுக் கொண்டு தம் அறையை அடைந்த கேசவனை அவருடைய அறையிலேயே வரவேற்றார் யூனியன் தலைவர் ராமநாதன்.

''என்ன டி.ஜி.எம். ஸார் லிஸ்ட்டெல்லாம் வந்துடுச்சா? நம்ப கண்லேயும் காட்டறது?'' என்றபடி சுவாதீனமாக அவர் கையிலிருந்த மூன்று லிஸ்டுகளையும் பிடுங்காத குறையாக வாங்கிப் பார்த்தார். பிறகு மெதுவாகச் சிரித்துக் கொண்டார்.

''ஓஹோ, டிவிஷன், அடிஷன் எல்லாம் தொடங்கியாச்சா?'' என்றவர், ''ஸார், நமக்கு வேண்டியவங்க, வேண்டாதவங்கன்னு ஒரு லிஸ்டைத் தர்றேன். அவங்க பேரையும் சேர்த்துடுங்க...'' என்றார்.

''வேண்டாதவங்களா? ஏன்?'' என்றார் டி.ஜி.எம்.

''ஆமாம் ஸார், உள்ளேயிருந்தே நம் தலைமையைப் பறிக்க முயற்சி பண்றாங்க இல்லையா, அவங்களை எப்படி சரிக்கட்டறது? அவங்களை யூனியன்லேர்ந்து நீக்கிட்டா, பெரிசா தியாகின்னு சொல்லிக்கிட்டு, ஒரு கூட்டத்தைக் கூட்டிட்டு வேறே ஒரு யூனியன் ஆரம்பிச்சுடுவாங்க. இப்பவே நம்ப பாங்க்லே நாலு யூனியன் இருக்கே, போதாதா?'' என்ற தலைவர், ''இந்த சான்ஸை யூஸ் பண்ணி, துன்றவனுக்கு எல்லாம் ப்ரமோஷன் கொடுத்து அனுப்பிட்டா....? நமக்குத் தொல்லை இருக்காது பாருங்க...'' என்றார்.

வழக்கம் போல், சில பெயர்கள் அடிக்கப்பட்டுத் தலைவர் கொடுத்த பெயர்கள் இணைக்கப்பட்டன.

அந்த வங்கியில் நான்கு யூனியன்கள் இருந்தன. ஒவ்வொரு யூனியன் தலைவரும், தங்களுக்குரிய 'கோட்டாவை'க் கேசவனை மிரட்டியே பெற்றுச் சென்றனர்.

பின்னர் உள்ளூர் எம்.எல்.ஏ. சிபாரிசு, பெரிய பெரிய கஸ்டமர்களின் சிபாரிசு என்று சில பெயர்கள் சேர்க்கப்பட்டன.

ஒரிஜினல் லிஸ்ட் மறைந்து, புது லிஸ்டே உருவாகியிருந்தது.

இந்த நிலையில்....

'கண கண'வென ஒலித்தது கேசவனின் போன்.

''ஸார், டெல்லியிலிருந்து கால். பைனான்ஸ் செகரெட்டரி உங்ககிட்டே பேசணுமாம்...'' என்று ஆபரேட்டர் சொன்னதும், கேசவனுக்குக் கையும் ஓடவில்லை, காலும் ஓடவில்லை.

''கொடும்மா, சீக்கிரம் குடும்மா...'' என்று ஆபரேட்டரை அவசரப்படுத்தினார்.

அடுத்த கணம், ''ஐ யாம் வெங்கடேஸ்வரன் ஹியர்'' என்று ஒரு கம்பீரமான குரல்.

''மிஸ்டர் கேசவ், உங்க பாங்க்லே என்னமோ ப்ரமோஷன் டெஸ்ட் நடத்தினீங்களாமே? நம்ம ஸ்டெனோவோட ரிலேடிவ்ஸ் ரெண்டு மூணு பேரு டெஸ்ட் எழுதினாங்களாம். பார்த்து அவங்களுக்கு ப்ரமோஷன் கொடுத்துடுங்க. நான் அவசரமா மினிஸ்டரைப் பார்க்கப் போகணும். விவரத்தையெல்லாம் மிஸ் லீலாகிட்டே கேட்டுக்குங்கோ...'' என்றபடி, யாரையோ அழைத்து, ''நீயே பேசு'' என்பதும் கேட்டது.

அடுத்த வினாடி, ஓர் இனிமையான குரல் தமிழும், மலையாளமும் கலந்த மணிப்பிரவாளத்தில் ஐந்து பெயர்களைப் படித்தது.

'செகரெட்டரி ரெண்டுதானே சொன்னார். இந்தம்மா ஐந்து பெயர்களைப் படிக்கிறதே' என்று ஒரு கணம் யோசித்த கேசவன், 'இதைப் போய்ப் பெரிசுபடுத்திச் செகரெட்டரியிடம் கேட்டால் அவர் கோபித்துக் கொள்ளக் கூடும்' என்று பயந்து, ''சரிம்மா'' என்று சொல்லி விட்டுப் போனை வைத்தார்.


முகத்தில் அரும்பியிருந்த வியர்வையைத் துடைத்துக் கொண்டு, லிஸ்டைப் பார்த்த கேசவனுக்கு மீண்டும் வியர்க்க ஆரம்பித்தது.

பம்பாய் நிறுவனம் அனுப்பியிருந்த 'லிஸ்ட்' முழுவதுமாக மாற்றப்பட்டு விட்டிருந்தது. இந்த ஐந்து பெயர்களைச் சேர்க்க வேண்டுமானால், முதலில் இணைக்கப்பட்ட, 'சிபாரிசுத் தகுதி' பெற்ற ஏதாவது ஐந்து பெயர்களை அடிக்க வேண்டியிருக்கும். என்ன செய்யலாம் என்று குழம்பிப் போன கேசவன் ஈ.டி.யின் அறைக்கு ஓடினார்.

விஷயத்தைக் கேட்டு மெல்லச் சிரித்தார் ஈ.டி.

''அதனாலென்ன? என்கிட்டே இன்னும் ஐந்து பேர் லிஸ்ட் இருக்கு. அதையும் சேர்த்து நூற்றியறுபது பேருக்குப் ப்ரமோஷன் ரிலீஸ் பண்ணிடுங்க...'' என்றவர், ''நாம்பதான் இவ்வளவுதான் ப்ரமோஷன்ஸ்னு 'கமிட்' பண்ணிக்கலையே'' என்றார் சிரித்தபடி.

லிஸ்ட் அவ்வாறே வெளியானது.



• எட்பர்க்.

கூச்ச சுபாவம் உள்ளவர், விம்பிள்டன் வெற்றி வீரர் ஸ்டீஃபான் எட்பர்க். ஆட்டம் எப்படியோ, ஆர்ப்பாட்டம் அதிகமாக இருக்கும் இந்நாளில், ஸ்வீடன் நாட்டைச் சேர்ந்த ஸ்டீஃபான் அலாதி மனிதராக விளங்குகிறார். இவர் லண்டனில் வசித்து வருவதற்குக் காரணமே, பிராபல்யத்தை விரும்பாததுதான்! 'கூட்டத்தோடு கூட்டமாகக் கலந்து, ஒரு சராசரி மனிதனாகவே வாழ விரும்புகிறேன்' என்கிறார் இந்த அடக்கமான ஆட்டக்காரர். இவர் திறமைகளைக் கணித்த நிபுணர்கள் 1984லேயே இவர் விம்பிள்டன் மன்னராவார் என்று எதிர்பார்த்தார்கள். ஆனால், 'வெற்றி வந்து சேரட்டும்' என்று இவர் காத்திருந்த போது கடந்த சில ஆண்டுகளாக அது கை நழுவிப் போய்க் கொண்டிருந்தது. இந்த ஆண்டு,

விம்பிள்டன் வீரர்களை உருவாக்கும் தீரர்கள்

'வெற்றியைக் கைப்பற்றுவேன்' என்ற தீவிரத்துடன் பாய்ந்தார். கோப்பை சிக்கியது! மற்றொரு காரணம், பயிற்சியாளர் பிக்கார்ட். இவர், எட்பர்கின் **forehand** ஆட்டம் சரியில்லை என்று உணர்ந்து அதை அபிவிருத்தி செய்வதில் தீவிர கவனம் செலுத்த, அது நற்பயன் அளித்தது.



• ஸ்டெஃபி கிராஃப்.

ஒன்பதாவது தடவையாக விம்பிள்டன் வெற்றி' என்ற மார்டினா நவ்ரடிலோவாவின் சாதனை ஆசையில் மண்ணைப் போட்ட ஸ்டெஃபி கிராஃபுக்கு வயது பத்தொன்பதுதான். ஆனால் இவரை விட இளம் வயதில் (17) ஒருவர் 1952-ல் விம்பிள்டன் வெற்றியை அடைந்திருக்கிறார். மேற்கு ஜெர்மனியைச் சேர்ந்த ஸ்டெஃபியின் வெற்றிக்கு அடித்தளம் அமைத்தவர், பயிற்சியாளர் பாவெல் ஸ்லோஸில். இவர் செக்கோஸ்லோவாகியாவைச் சேர்ந்தவர். வயது முப்பத்திரண்டுதான். கூர்மதி படைத்த இவர், இந்த ஆண்டு ஸ்டெஃபி எந்த எந்த ஆட்டக்காரரைச் சந்திக்க வேண்டியிருக்கும் என்று திட்டமிட்டதுடன், அந்த ஆட்டக்காரர்களின் ஆட்டத் திறன்களை ஆராய்ந்து, அவர்களைப் போலவே அதே நுணுக்கங்களுடன் ஆடுவார். ஸ்டெஃபியைத் தம்மை எதிர்த்து ஆடச் செய்வார். இவ்வாறு அவர்களைச் சந்திக்க ஸ்டெஃபிக்குத் துணிச்சலும் பயிற்சியும் அளித்தார்.

ஆக மொத்தம், விம்பிள்டன் வீரர்கள் மட்டுமல்ல; அவர்களை உருவாக்கும் தீரர்கள் எவ்வளவு முக்கியம் என்பது புரிகிறதல்லவா!



வேத மகிமை

1. நாம் வேண்டியவற்றை அடைவதற்கும், வேண்டாதவற்றை விலக்கவும் உலகியலில் நம் அறிவுக்கு எட்டாத உபாயத்தை உணர்த்தவும வேதங்கள் உறுதுணையாய் இருப்பவை.
2. சிறு சிறு சாந்திகளாக இயற்றுவதைக் காட்டிலும் ஒரு தடவை யஜுர்வேதம் ஓதுவதாலும், கேட்பதாலும், அனைத்து சாந்திகளும் செய்யப்பட்டதாகிறது.
3. யஜுர்வேத பாராயணத்தால் ஏற்படும் நன்மைகள்

<u>காண்டம் 2</u> ஆயுள் விருத்தி, டி. பி. நோய் நிவர்த்தி தோல் வெண்மை நிவர்த்தி, பசு, தனம், நல்வம்ச ப்ராப்தி, வித்தை, கல்வி விருத்தி.

<u>காண்டம் 4</u> சந்துரு நிவர்த்தி, விவசாயத்தில் அமோக சாகுபடி, சமூக ஒற்றுமை.

<u>காண்டம் 5</u> திட ஆரோக்யம், புகழ்.

4. வேத பாராயணம் கீழ்க்கண்ட முறைகளில் பாராயணம் செய்யப்படுகிறது.

மூல பாராயணம் என்பது ஒவ்வொரு பதமும் ஒருமுறை
க்ரம பாராயணம் என்பது ஒவ்வொரு பதமும் இரண்டுமுறை
ஜடா பாராயணம் என்பது ஒவ்வொரு பதமும் ஆறுமுறை
கன பாராயணம் என்பது ஒவ்வொரு பதமும் பதிமூன்று முறை

சாதாரண மூல பாராயணத்தைவிட ஜடா பாராயணம் கேட்பவர்களுக்கு ஆயிரம் மடங்கு பலனளிக்கும். கன பாராயணம் கேட்கும் பலன் அதைவிட பல பல மடங்கு.

நன்றி: ஸ்ரீ இஷ்டசித்து விநாயகர் வேதபாராயண ஸபா

ஆயுர்வேத முறையில் புற்று நோய்க்கு சிகிச்சை



சிவசங்கர் ஸ்வாமியாகிய எனக்கு வயது 30. எனது வலது காலில் நியூரோ ஃபைப்ரோ சர்கோமா (Neuro Fibro Sarcoma) வியாதியினால் நான் அல்லல்பட்டுக் கொண்டிருந்தேன். பெங்களூரிலும் பம்பாயிலும் சஸ்திர சிகிச்சை நான்கு முறை செய்து கொண்டேன். கெமோ தெரபி (Chemo Therapy) எடுத்துக்கொண்டும் குணம் தெரியவில்லை. எனது முழுக் காலையும் வெட்டி எடுத்துவிட வேண்டும் என்று டாக்டர்கள் சொல்லியும் நான் அதற்குச் சம்மதிக்கவில்லை.

நான் நம்பிக்கை தளர்ந்த நேரத்தில் புற்று நோய் பற்றிய விளம்பரத்தைச் சில பத்திரிகைகளில் பார்க்கும்படி நேர்ந்தது. அதில் புற்றுநோய்க்கு ஆயுர்வேத முறையில் ஹைதராபாத் சிக்கட்பள்ளியில் உள்ள டாக்டர் பாபு ராவ் சிகிச்சை பற்றித் தெரிந்து கொண்டேன்.

நான் நேரில் சென்று இரண்டு வாரங்கள் மருந்து சாப்பிட்டதில் வெகுவாக குணம் தெரிந்தது. மேலும் ஆறு மாதங்கள் தொடர்ந்து மருந்து சாப்பிட்டேன். இப்பொழுது நான் பூரண குணம் அடைந்திருக்கிறேன். நான் இந்த விளம்பரம் செய்வதன் நோக்கம் என்னவென்றால் இதே வியாதியினால் கஷ்டப்படும் மற்ற நோயாளிகள் டாக்டர் பாபுராவை அணுகிச் சிகிச்சை பெற்றுக் குணம் பெறலாம்.

சுவாமி சிவசங்கர்,
மலர், பாரத் பெட்ரோலியம் கார்ப்பொரேஷன்,
ஓமார்கா போஸ்ட் தாலுகா, ஓஸ்மானாபாத் ஜில்லா, மஹாராஷ்ட்ரா.

கால அட்டவணை

விலாசம்	போன் நெம்பர்	பார்க்கும் கிழமைகள்
டாக்டர் எம். பாபு ராவ் வீடு கேன்ஸர் இன்பர்மரி 2—1610, செடம் ரோடு, மொமுலா கூடம், (பெட்ரோல் பங்க் அருகில்), குல்பார்கா (கர்னாடகா)	21452	பிரதி திங்கள் செவ்வாய்
C/o. ஹோட்டல் மிட்டவுன் அன்டேரி (மேற்கு ரயில்வே ஸ்டேஷன் எதிரில்), பம்பாய்.	6288882	பிரதி புதன்
கேன்ஸர் இன்பர்மரி 1—1—271/3, சிக்கட்பள்ளி பஸ் ஸ்டாண்டு அருகில், ஹைதராபாத் — 500 020.	64735	பிரதி வெள்ளி
C/o. ராம் இன்டர்நேஷனல், 114, கோடம்பாக்கம் நெடுஞ்சாலை, சென்னை — 600 034.	473350 473422	பிரதி சனி
C/o. ஹோட்டல் பிருந்தாவன் மஹாத்மா காந்தி ரோடு, பெங்களூர்.	573271	பிரதி ஞாயிறு

வீடு



மழையை, அதன் விஸ்தாரத்தை, அதன் சுகத்தை, குதூகலத்தை இவ்வளவு தத்ரூபமாக யாரும் படம் பிடித்திருக்க முடியாது. மழை நம்மோடு பேசுகிறது; சிரிக்கிறது. கடைசியில் எரிச்சலூட்டுகிறது.

எரிச்சல் ஏன்?

சுதா என்கிற நடுத்தர வர்க்கத்து வேலைக்குப் போகும் இளம் பெண் கனவுகளையும், எதிர்பார்ப்புகளையும் குழைத்துச் செங்கல்லும், சிமெண்டுமாக, ஊரெங்கும் வாங்கிய கடன்களின் அஸ்திவாரத்தில் எழுப்பும் தன் சொந்த வீட்டைத் திட்டமிட்டபடி கட்ட முடியாமல் குறுக்கிடுகிறதே, அந்த நேரத்தில் மழைமீது சரளமாக வெறுப்பு வருகிறது.

சினிமாத்தனம் எங்கும் எட்டிப்பார்த்துவிடக்கூடாது என்பதில் பாலு மகேந்திரா வெகு கவனமாயிருந்திருக்கிறார். ஜன்னல் வழியே பக்கத்து மனையில் மெல்ல மெல்ல விசுவரூபம் எடுக்கும் கட்டடத்தைப் பார்ப்பது போல் ஓர் உணர்வு நம்மைத் தொற்றிக் கொள்கிறது.

அர்ச்சனாவின் நடிப்பை அல்லது நடிப்பின்மையைப் பற்றி இனிமேல் விமர்சித்தால் அடிக்க வருவீர்கள்.

நாமாகச் சேர்ந்து ஸ்பெஷல் பரிசு கொடுப்பதென்றால், அர்ச்சனாவின் தாத்தாவாக நடமாடும் பாகவதர் பாத்திரத்திற்குத்தான் தர வேண்டும். ரிமார்க்கபிள்!

யாரோ செத்த செய்தி கேட்டதும், தான் குருவியாய்ச் சேர்த்த சொற்பப் பணத்தையும் பேத்திக்கு அவசரமாக உயில் எழுதி வைப்பதாகட்டும், கட்டப்பட்ட வீட்டில் நின்று பெருமைப் பெருமூச்சுக்களை விடுதலை செய்வதிலாகட்டும், தாத்தா கேரக்டர் மூலம் பாலுமகேந்திரா ஸைக்காலஜி புரொபசராகிறார். வெகு இயற்கையான, இயல்பான காதல், ஊடல், மனித உணர்வுகளைப் புரிய வைக்கும் காமிரா, கதைக்கு உயிர் கொடுக்கும் துணைப் பாத்திரங்கள் — பாராட்டுவதென்றால் எத்தனையோ அம்சங்களைப் பாராட்டலாம்!

யதார்த்தம் என்றால் நிதானம் என்பதால் படம் ஸ்லோவாகத்தான் ஊர்கிறது. வருடத்திற்கொருமுறை இந்த நிதானத்தை நாம் பொறுத்துக் கொள்வதில் தப்பில்லை.

— ஜெயமன்மதன்

ராஜீவை யார் என்று கேட்டார்களாமே?





ஒன்றரை நிமிடத்தில்......




* பாரதி. பா. மு. தாசன், போடிநாயக்கனூர்.

? 'தேர்தல் குறித்து அறிவிப்பு வெளியானால் உடனடியாக இருபத்து நான்கு மணி நேரத்தில் அமெரிக்காவிலிருந்து தமிழகம் திரும்புவேன்' என்று ஜானகி ராமச்சந்திரன் தெரிவித்திருப்பது குறித்து?

! இருபத்து நான்கு மணி நேரத்தில் அவர் வந்துவிடலாம்; தேர்தல் வர வேண்டுமே?

* எம். கல்யாணசுந்தரம், திருநாரையூர்.

? ஜெயலலிதா, கணக்குக் கேட்ட தம் கட்சிக்காரர்களைத் 'தெரு நாய்கள்' என்கிறார். திருநாவுக்கரசோ தாங்களெல்லாம் நன்றியுள்ள நாய்கள் என்கிறார். எது சரி?

! எது சரியோ; முன்பு, ராம்ஜெத்மலானி பற்றிக் குறிப்பிடும்போது நமது பிரதமர் ராஜீவ், குரைக்கும் நாய்களுக்கெல்லாம் தாம் பதில் சொல்லத் தேவையில்லை என்று சொல்லி, 'போதுமடா சாமி!' என்கிற வரை செமத்தியாக வாங்கிக் கட்டிக் கொண்டது நினைவிருக்கிறதா? அதே ஸ்டைலைத்தான் ஜெயலலிதாவும் காப்பியடித்திருக்கிறார் என்பதுதான் உண்மை. ஆனால் ஜெ.யைக் கேட்டால், முன்பு ராம்ஜெத்மலானியைக் குரைக்கும் நாய் என்று சொல்லுமாறு ராஜீவுக்குச் சொல்லிக் கொடுத்ததே தாம்தான் என்று கூறக்கூடும்!

* பூவண்ணன், இருமயம்.

? தமிழக மக்களெல்லாம் வயிற்றுப்பாட்டுக்கே அலைந்து திரிந்து கொண்டிருக்கும் போது, உமது அபிமானக் கட்சியினர் வசூல் செய்த இரண்டரைக் கோடி ரூபாயைப் பெரிய விஷயமல்ல எனக் கூறிய உம்மை மக்கள் எப்படி ஐயா மன்னிப்பார்கள்?

! தமிழக மக்கள் வறுமையில் வாடுகிறார்கள் என்பது உண்மைதான். அதற்காக எந்தக் கட்சியும் தேர்தல் நிதி வசூலிக்கக் கூடாதா? தேர்தல் நிதி வசூலிப்பது குறைய தேர்தல் முறைகளில் சீர்திருத்தம் தேவை. மக்களின் வறுமை ஒழிய ஆட்சிக்கு வருகிறவர்கள் சிறந்த திட்டங்களை வகுத்து அமுல் படுத்த வேண்டும். இரண்டையும் குழப்பி மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் சம்பந்தமேயில்லாமல் முடிச்சுப் போடுகிறீர்களே, வேடிக்கையாக இருக்கிறது! 'என்னுடைய அபிமானக் கட்சி' என்று நீங்கள் குறிப்பிடுவது அதைவிடப் பெரிய ஜோக்! அவர்கள் தேர்தல் நிதிக்கு என்னிடமிருந்து பைசாகூடப் பெயராது!

* அபராஜிதன், பாண்டி — 3. *

? பீகார் மாநிலத்திலுள்ள மலைக்கிராமங்களுக்குப் பிரதமர் சென்று குறைகளைக் கேட்ட போது அந்த மலைவாசிகள், 'நீங்கள் யார்? கலெக்டரா, தாசில்தாரா?' என்று கேட்டார்களாமே?

! சுதந்திரம் பெற்று நாற்பதாண்டுகளுக்கு மேலாகியும் இப்படியொரு நிலையா என்று நாம் அனைவருமே வெட்கப்பட வேண்டும். மக்களுக்குக் கல்வி அறிவு புகட்டுவதுதான் இன்று அரசின் முதல் கடமையாக இருக்க வேண்டும் என்பதை இந்தச் சம்பவம் கூடப் பிரதமருக்கு உணர்த்தவில்லையானால் வேறு எதுதான் உணர்த்தும்!

* கே. ஜோசப் மத்தியாஸ், மைசூர்.

? மத்திய அமைச்சராவதற்கு என்ன

தகுதி வேண்டும்?

! குறைந்தபட்சம் ஏதாவதொரு மாநிலத்தில் இ. காங்கிரஸ் முதல்வராய் இருக்க வேண்டும். அங்கு கட்சிக்குள் கோஷ்டிகளை வளர்த்துக் கூடவே ஊழலையும் வளர்த்து இடைத் தேர்தல்களில் காங்கிரஸைத் தோற்கச் செய்வது படுவிசேஷம். உடனே மத்திய அமைச்சர் பதவிதான்!

* எம். இராஜேந்திரன், லால்குடி.

? உலகக் குத்துச்சண்டைப் போட்டியில் வீரர் மைக்டைசன் சுமார் ஒன்றரை நிமிடத்தில் இருபத்தாறு கோடி ரூபாய் சம்பாதித்து விட்டாரே?

! வராத தேர்தலுக்கு விழுந்து விழுந்து நிதி சேர்த்துக் கொண்டிருக்கிற நம்மூர் அரசியல்வாதிகள் பொறாமைப்படட்டும் என்றா இந்தக் கேள்வியைக் கேட்டீர்கள்?

* தன்ஸ், தூத்துக்குடி.

? விரைவில் தேர்தல் வேண்டும் என்று தமிழக மக்கள் விரும்புகிறார்களா?

! மக்கள் விரும்புகிறார்களோ இல்லையோ ஒரு ஜனநாயக நாட்டில் முறைப்படியான கால அளவுக்குள் தேர்தல் நடப்பது அவசியம். நமது கவர்னர் கூட பதவியேற்பதற்குமுன் லண்டனில் அளித்த பேட்டியில், தமிழக கவர்னர் பொறுப்பை ஏற்றுக் கொண்டபின் விரைவில் தேர்தலை நடத்தி மக்கள் அரசை நிறுவுவதே தமது தலையாய பணி என்றுசொல்லியிருந்தார். இப்போதோ அவர் தேர்தலைப் பற்றிக் கண்டு கொள்வதாகவே தெரியவில்லை. ஆக, கவர்னர் சுதந்திரமாக இயங்கவில்லை; மத்திய அரசின் ஆளுமைக்கு உட்பட்டிருக்கிறார் என்பது நிரூபணமாகிவிட்டது!

* பாக்கியமுத்து, திருச்சி — 20.

? 'நெடுஞ்செழியன் நிலையை எண்ணிப் பார்க்கிறேன்'—கருணாநிதி. உங்கள் கருத்து என்ன?

! 'பதவியைக் கேட்டுப் பெறுகிற நிலைக்கு வந்துவிட்டாரே; நெடுஞ்செழியனுக்குஇந்தக் கதியா?' என்று கருணாநிதி வருத்தப்பட்டிருக்கிறார். பதவியைக் கேட்டுப் பெற்றால் கூடப் பரவாயில்லை. சுயமரியாதையைக் கூடக் கேட்டல்லவா பெற வேண்டியதாகிவிட்டது! பாவம், நெடுஞ்செழியன்.

* பி. உதயகுமார், சென்னை — 2.

? சர்ஃப் புகழ் லலிதாஜியின் 'உதான்' டி.வி. தொடர் எப்படி?

! 'சர்ஃப்' லலிதாஜியைப் பார்த்து அலுத்துக் கொண்டவர்கள் கூட 'உதான்' தொடரை ஆர்வத்துடன் பார்க்கும் அளவுக்கு எழுதி, நடித்து இயக்கியிருக்கிறார் கவிதா செளத்ரி என்பதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.

* சே. ஆர். தேவேந்திரன், வேலூர் — 13.

? தொலைக்காட்சி நிலையத்தினர் நடத்திய 2—வது அலைவரிசைத் திறப்பு விழாவுக்குத் தொகுதி எம். பி.க்களான கலாநிதி, சோமு ஆகியோருக்கு அழைப்பு அனுப்பாதது சரியா?

! அவர்களுக்கு மட்டும்தானா அழைப்பு அனுப்பவில்லை? தொலைக் காட்சி நிலையத்திலேயே வேலை பார்க்கும் பொறியியல் ஊழியர்களுக்கே அழைப்பு தரப்படவில்லையாம், சுவாமி! அதனால் துவக்க விழா நாளன்று பொறியியல் ஊழியர்களெல்லாம் கறுப்புச் சின்னமணிந்து கொண்டுதான் வேலை பார்த்தார்களாம். இந்த விஷயமெல்லாம் அமைச்சருக்குத் தெரிந்துவிடக் கூடாதென்பதற்காகத்தான் விழாவை நிலையத்திற்குள் வைக்காமல் நாரதகான சபாவில் கொண்டு போய் வைத்தார்களாம். மேலும் 2—வது அலைவரிசையில் காட்டப்படும் படங்கள் இருத்தமாகத் தெரியாததன் காரணமும் பொறியியல் ஊழியர்கள் தயாரிப்புத் துறை ஊழியர்களின் மேல் காட்டும் கோபத்தின் வெளிப்பாடுதானாம்!

* கு. கணேசன், சென்னை — 15.

? ரஷ்யாவின் இரும்புத் திரையை அகற்றி கார்பசேவ் கொண்டு வரப்போகும் ஆட்சி முறை குறித்து?

! இதுவரை கட்சித் தலைவரிடம் அதிக அதிகாரங்கள் இருந்தன. இனி ஆட்சித் தலைவரிடம் இருக்க வேண்டும் என்பது கார்பசேவ் திட்டம். இப்போது போல் இல்லாமல் இனி ஆட்சியைப் பற்றியும் சமுதாயத்தைக் குறித்தும் விமர்சனங்கள் அதிகமாக இருக்க வேண்டும்என்பதும்கார்பசேவ் ஏற்பாடு. ஆனால் இந்தச் சுதந்திரங்களின் அடிப்படையில், ரஷ்யாவில் அழகிப் போட்டி நடத்திப் பரிசு வழங்கிய 'புதுமை'யை மட்டும் என்னால் ஜீரணிக்கவே முடியவில்லை. 'ரஷ்யாவில் கூடவா?' என்று வருந்தத்தான் தோன்றியது.

* ராஜேந்தர்பிரியன், திருச்சி — 3.

? ஒரு வீட்டில் நால்வர் இருந்தால் ஆளுக்கொரு கட்சிக்கு வாக்களிக்க வேண்டும் என்கிறாரே உதயமூர்த்தி?

! ஏதோ, அவரும் அவர் பங்குக்குத் தமிழகத்தைக் குழப்ப ஆரம்பித்துவிட்டார் போலிருக்கிறது!

* ரூ. 15 பரிசு பெறுபவர்:

அபராஜிதன்,
85/2, எம். ஜி. சாலை,
முத்தியால்பேட்டை,
பாண்டிச்சேரி — 3.

சாதாரணங்கள்

சியாமளா நினைத்திருந்தாள், திருவனந்தபுரத்தில் பாத்திரக்கடை வைத்திருக்கும் தன் கணவரின் மாமா, சுமாரான பணக்காரர் என்று. அவரது பெண் கல்யாணத்திற்குக் கணவர் கைலாசத்துடன் வந்து இறங்கிய போது அந்த மண்டபத்தையும், வந்திருந்த கூட்டத்தையும், பட்டுப் புடைவைகளையும் கழுத்தை அலங்கரித்த தங்க, வைர நகைகளையும் பார்த்த பொழுதுதான் புரிந்தது, அவர்கள் எவ்வளவு பெரிய பணக்காரர்களென்று.

மூன்று கார்கள் விருந்தினர்களுக்காக எப்போதும் புறப்படத் தயாராய்...

இவர்களைக் கூடத் தம்பானூர் ரயில் நிலையத்திலிருந்து கார்தான் அழைத்து வந்தது.

கைலாசம் ஜானவாசத்திற்குக் கூட கார் கிடையாது... நடைதான்.

கைலாசம் மாஜிஸ்திரேட் கோர்ட்டில் ப்யூன்... கலகலப்புக்குக் குறைச்சலில்லை.

சியாமளாவிற்குத்தான் இன்னும் நல்ல உடையில் வரவில்லையென்றும், தன் கணவர் வேட்டியில் வந்திருக்கிறாரே என்றும் குறை.

'எனக்குத்தான் இவங்க இவ்வளவு பெரிய இடம்னு தெரியாது. இவராவது சொல்லி இருக்கலாம். மொய் எழுதப் போகும் இருபது ரூபாய்ப் பணத்தை மாமியிடம் தனியாகத்தான் கொடுக்க வேண்டும். இவ்வளவு பெரிய கூட்டத்தில் நம் பணம் கடுகு...'

கைலாசம் இதையெல்லாம் கண்டு கொண்ட மாதிரியே தெரியவில்லை. ஜாலியாக ஜோக் அடித்துக் கொண்டு கூட்டத்தில் கலந்து விட்டான்.

அவனைச் சுற்றி ஆண்களும் பெண்களுமாய்ச் சிரித்துக் கொண்டு ஒரு கூட்டம்...

சியாமளாவிற்கு அந்தக் கூட்டத்தில் ஐக்கியமாகச் சங்கடமாக இருந்தது. ஒப்புக்கு அவளை 'வா' என்று சொன்ன மாதிரி... அவளுக்குள் ஓர் உணர்வு. அவள் சாதாரணப் புடைவையையும், ஏராள நகைகளற்ற கழுத்தையும் பார்த்துக் கொஞ்சம் அவர்கள் தயங்குகிற மாதிரி...

சாயங்கால டிபனுக்கு மேஜையில் அதிகக் கூட்டமில்லை...

கைலாசம் டிபனை ரசித்துச் சாப்பிட்டான்.

''எத்தனை ஐட்டம் பார்த்தியா, சியாமளா...? நான் இதுவரை இத்தனை குலாப் ஜாமூன் சாப்பிட்டதே இல்லை...''

கூட்டம் சிரித்தது.

''கைலாசம் மாமா... பஜ்ஜி எப்படி...?''

''உங்க மாமி மாதிரி ஒல்லியா இல்லாம நல்ல குண்டா இருக்கு, என்னை மாதிரி...''

''மாமாவுக்கு இன்னும் இரண்டு பஜ்ஜி போடவா...?''

''வேண்டாம்...''

''ஏன்?''

''இன்னும் நாலு போடு... இரண்டு காணாது...''

''ஓ... நீங்க அப்படி வர்றேளா...?''

சியாமளா பாதியில் எழுந்து விட்டாள். அவளது கோபப் பார்வையைக் கைலாசம் புரிந்து கொண்ட மாதிரியே தெரியவில்லை. அவர்கள் ஜாலிக்குப் பேசுகிறார்களா, அவன் நிலையைக் கிண்டல் செய்கிறார்களா என்றே புரியவில்லை.

மறுநாள் தாலி கட்டி முடிந்த பின்னர் பொழுதை 'எப்படிக் கழிப்பது என்பது பெரிய பாடாயிற்று.

கைலாசமும் அவளும் கோவளம் கிளம்பினார்கள்.

கூடவே நாலைந்து உறவுக்காரர்களும்...

''டாக்ஸி பிடிக்கலாமா... கைலாசம்?''

''என் வசதிக்கு நான் டாக்ஸியில் கோவளம் வந்தேன்னா... அப்புறம் பாத யாத்திரையாத்தான் நாகர்கோவில் போகணும்...''

''ஹேய்... நல்ல ஜோக்...''

கோவளத்தைச் சுற்றிப் பார்த்துவிட்டு மறுபடியும் பஸ் ஸ்டாண்டை அடைந்த போது மணி நாலாகி இருந்தது.

காலையில் முகூர்த்தம் முடிந்ததும் சாப்பிட்டபடியால் பசி வயிற்றைக் கிள்ளியது சியாமளாவிற்கு.

கைலாசம் தன் சித்தப்பாவிடம் கேட்டான், ''டிபன் சாப்பிடுவோமா...?''

''சாரி... நான் வெளியில சாப்பிடற இல்லை...''

''ஹோட்டல் உள்ளேதான் சாப்பிடப் போறோம்!''

''நோ... கைலாசம்... நான் வீட்டை விட்டு வெளியில் சாப்பிடறதில்லை.''

நா. நாகராஜன்

''மாமா... நீங்க எப்படி? வீட்டிலயாவது சாப்பிடுவீங்களா?''

''வேண்டாம்பா. வீடு பக்கம்தானே... மண்டபத்துக்குப் போயிட்டோம்னா நல்லது!''

''குழந்தைகள்லாம் 'பசிக்குது, பசிக்குது'ன்னு சொல்லுதே...''

''நோ... நான் எல்லாரையும் ஸ்ட்ரிக்டா வளர்த்திருக்கேன்.''

''சியாமளா... உனக்கு ஏதேனும் வேணுமா...?''

பசி... இருந்தாலும் எப்படி ஒப்புக்கொள்வது? — இத்தனை பேர் நாசூக்காக மறுக்கும் போது... எல்லாரும் செலவுக்குப் பயந்து ஒதுங்குகிறார்கள். இவருக்கு ஏன் அது புரியவில்லை?

''ஊஹூம்... மண்டபத்துக்கே போயிடலாமே.''

''நேரமாகும்... இங்கே எனக்குத் தெரிஞ்ச ஒரு சின்ன ஹோட்டல் இருக்கு. பசிக்கறவா என் கூட வரலாம்...''

அரை மனத்துடன் வருகிற மாதிரி ஒவ்வொருவராக அவன் பின்னால் கிளம்பினார்கள்.

ரசவடை பரிமாறப்பட்டது.

''நல்லா இருக்கு... கைலாசம்...''

''நான் போடலை சித்தப்பா. கூட இரண்டு போட்டுக்கோங்கோ.''

''ஓக்கே. நாலாப் போடச் சொல்லு.''


வேண்டாம், வேண்டாம் என்றவர்கள் நிறையவே சாப்பிட்டார்கள்.

குழந்தைகள் சந்தோஷத்துடன் கைலாசம் பக்கம் வந்து, ''தேங்க்ஸ் மாமா'' என்றனர்.

''என்னடா தேங்க்ஸ்? இது என்ன ஃபைவ் ஸ்டார் ஹோட்டல் பார்ட்டியா? அல்லது நான் என்ன அன்னியனா... தேங்க்ஸ் சொல்ல...?''

''பில்லை நான் கொடுக்கிறேன் கைலாசம்...''

''இல்லே, நான்தான் கூப்பிட்டேன்... நானே கொடுத்துடறேன். இது என்ன பெரிய தொகை...?'' கைலாசம் நோட்டை நீட்டிய போது சியாமளாவிற்குப் பெருமிதமாக இருந்தது.





* சரத்பவார்



* வி. சுப்ரமணியம்

தமிழருக்கு இடம் தருவாரா சரத்பவார்?

மகாராஷ்டிராவின் முன்னாள் முதலமைச்சர் சரத் பவார் சுமார் எட்டு வருட கால இடைவெளிக்குப் பிறகு மறுபடியும் முதலமைச்சர் பதவியை அடைந்திருக்கிறார். ஏற்கெனவே இவர் ஜூலை 1978–லிருந்து பிப்ரவரி 1980 வரை முன்னேற்ற ஜனநாயக முன்னணி கட்சியின் தலைமையில் முதலமைச்சராக இருந்தார். சென்ற வருடம் காங்கிரஸ் (ஐ) கட்சியில் சேர்ந்ததன் பலனாகத் தற்போது எஸ். பி. சவானுக்குப் பதிலாக முதல்வர் பதவியில் மேலிடத்தால் நியமிக்கப்பட்டுள்ளார்.

நாற்பத்தெட்டு வயதான சரத் பவார் பொருளாதாரம் மற்றும் விவசாயத் துறைகளில் நிபுணர். விளையாட்டு மற்றும் இளைஞர் மேம்பாட்டிலும் ஆர்வமுண்டு. 1967–ம் வருடம் அவருக்கு இருபத்தேழு வயதான போது காங்கிரஸ் டிக்கெட்டில் முதன் முறையாகச் சட்டசபை அங்கத்தினராக அரசியலில் புகுந்தார். அதன் பிறகு படிப்படியாக முன்னேற்றம்தான்.

மகாராஷ்டிர அரசியலில் பெரும் செல்வாக்குக் கொண்ட முன்னாள் முதலமைச்சர் வசந்த் தாதா பாட்டீலின் பெருத்த ஆதரவு பவாருக்கு உண்டு. இவர்கள் இருவரும் சேர்ந்துதான் சவானை முதல்வர் பதவியிலிருந்து கீழிறக்கும் முயற்சியில் வெற்றி கண்டுள்ளார்கள் என்பது பலரின் ஒருமித்த கருத்து.

மறுபடியும் முதல்வராக ஆகும் நெடுநாள் ஆசை பூர்த்தியான பவாருக்கு இரு முக்கியமான பிரச்னைகளைச் சமாளிப்பதுதான் முதல் குறிக்கோள். முதலாவது, மகாராஷ்டிராவின் பல பிராந்தியங்களில் வேகமாகப் பரவி வரும் சிவசேனையின் செல்வாக்கைக் கட்டுப்படுத்துவது. இரண்டாவது, கர்நாடகாவுடன் பல வருடங்களாகத் தொடரும் எல்லைத் தகராறுக்குச் சுமுகமான தீர்வு காண்பது.

சவானைப் போல அல்லாமல், கட்சிக்குள்ளும் வெளியிலும் பரவலாக ஆதரவு கொண்ட பவார், எந்த அளவுக்குத் திறமையுடனும் கட்டுப்பாட்டுடனும் ஆட்சியை நடத்திச் செல்வார் என்று பார்க்கப் பலருக்கும் ஆவலாக உள்ளது. முப்பத்தாறு அங்கத்தினர்கள் கொண்ட அவரது மந்திரி சபை, கருத்துடன் தன் கடமையை மேற்கொண்டுள்ளது. இதில் பொதுவாக எல்லோருக்கும் திருப்தி என்றாலும் பம்பாய் வாசிகளுக்கு, குறிப்பாகத் தென்னிந்தியர்களுக்கு வருத்தம் தரும் விஷயம், டாக்டர் வி. சுப்ரமணியம் புதிய மந்திரி சபையில் இடம் பெறாததுதான். சவான் அரசாங்கத்தில் சுப்ரமணியம் பல இலாக்காக்களைத் திறமையுடன் நிர்வகித்தார். டாக்டர் வி. எஸ்ஸின் நிர்வாகத்திறன் தில்லியில் காங்கிரஸ் மேலிடத்திற்குத் தெரியாமலில்லை. கூடிய விரைவில் இவரது சேவை மகாராஷ்டிராவிற்கு மறுபடியும் கிட்டும் என்று பலரும் எதிர்பார்க்கிறார்கள்.

— ஜி. சந்திரசேகர்

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் வி. வைத்தியநாதன். ஆசிரியர்: கி. ராஜேந்திரன்.
முகவரி: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: நிர்வாகக் காரியாலயம்: 4 3154 3, 4 34 157: ஆசிரியர் குழு அலுவலகம்: 4 34 14 5.
ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 104/—: வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 280/—: விமானத் தபால் ரூ. 680/—.
ஆறு மாதச் சந்தா — உள்நாடு: ரூ. 52/—: வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 140/—: விமானத் தபால் ரூ. 340/—.

REGISTERED No. M 4392
Registered as a Newspaper in Sri Lanka